Not for sale

மே - ஜூன் 2008

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



# பவுலின் இறுதி அனுபவங்கள்

ரோமர்களின் சட்டம் • தெய்வீக பயிற்சி • அப்போஸ்தலனாகிய பவுலின் கடைசி நிருபம் • பவுலின் ஆபத்தான பயணம் • அப்போஸ்தலர் 27ம் அதிகாரமும் நீங்களும் • பவுலின் இருவித ஊழியம் • பவுலின் பிரயாணங்கள்

## தொடக்கத்திலே ....................


✣ பவுலின் இறுதி கால அனுபவங்கள் 2

✣ பொர்க்கியுபெஸ்துவின் நியாயத்தீர்ப்பு 3

✣ தெய்வீகப்பயிற்சி 7

✣ அப்போஸ்தலனாகிய பவுலின் கடைசிய நிருபம் 12

✣ பவுலின் ஆபத்து நிறைந்த பிரயாணம் 17

✣ அறுவடையின் முடிவு 21

✣ இருவிதமான பவுல் செய்த ஊழியம் 26

✣ அபாயத்தின் சுகந்த வாசனை 32

✣ பவுல் பிரயாணம் 33

# பவுலின் இறுதி அனுபவங்கள்

தொடக்கத்திலே................

புதிய ஏற்பாட்டில் அநேக புஸ்தகங்களை எழுதின **பவுலின் இறுதி அனுபவங்களை** மையப்படுத்தி இந்த பிரதி வெளியிடப்பட்டிருக்கிறது. மற்ற அபோஸ்தலர்களைக் காட்டிலும் லூக்கா எழுதின அப்போஸ்தலர் நடபடிகளில் பவுலை பற்றிய அநேக தகவல்கள் கிடைத்துள்ளது.

நாம் அப்போஸ்தலனாகிய பவுலின் மூன்று நற்செய்தி அறிவிக்கும் பயணங்களுக்கு பின்பு ஒரு சிறைக் கைதியாக ரோமாவுக்கு செல்லுவதற்கு முன்பு செசரியா பட்டணத்தில் அவருடைய சிறையிருப்பை பின்னணியாக கொண்ட பாடத்தின் மூலம் தொடங்குகிறோம். இந்த பாடம் ***பொர்க்கியுபெஸ்துவின் நியாயத்தீர்ப்பு*** என்ற தலைப்பிடப்பட்டு பவுலின் விசாரிப்பை பற்றிய அவருடைய வாதங்களை ஆராய்கிறது. இது அவருக்கு முன் இருந்த தேசாதிபதியாகிய பேலிக்ஸ்யுடைய தரம் தாழ்த்தப்பட்ட நடவடிக்கைகளை ஒப்பிட்டு காண்பிக்கிறது. பரிசீலனை செய்யப்பட்ட கொள்கையில் நாம் எதிர் கொள்ளும் காரியங்களுக்கும் பொருந்தும்.

***தெய்வீக பயிற்சி*** என்ற தலைப்பில் விசுவாசத்தின் பிள்ளைக்கு ஞானமுள்ள தகப்பனுடைய ஆலோசனைகள் அடங்கியுள்ளது. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினது முதல் நிருபமாகும். இந்த நிருபத்தில், சபையின் மூப்பர்களுக்கு அநேக தேவையான விலையுயர்ந்த பாடங்கள் உள்ளது.

குறிப்பாக II ***தீமோத்தேயுவுக்கு*** எழுதின நிருபம் ***அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின கடைசி நிருபமாகும்.*** அவர் இரண்டாம் முறை ரோமாபுரியில் காவலில் தன்னுடைய தீர்ப்புக்காக காத்துக் கொண்டு இருக்கும் போது எழுதினார். இரண்டு வருடங்களுக்கு முன்பு எழுதின மற்ற நிருபங்களை விட இது மிக சுருக்கமாக தோன்றுகிறது.

அதற்கு பின்பு வரும் இரண்டு கட்டுரைகளும் ரோமாபுரிக்கு அவர் மேற்கொண்ட பயணங்கள் பற்றி விவரிக்கப்படுகிறது. பவுலின் ***ஆபத்து நிறைந்த பிரயாணம்*** என்ற முதல் கட்டுரையில் நம்முடைய அன்றாட கிறிஸ்துவ வாழ்க்கைக்கு தேவையான மிக நேர்த்தியான பாடங்கள் அடங்கியுள்ளது. இரண்டாவதாக ***அப்போஸ்தலர் 27 ஆம் அதிகாரமும் அதில் நீங்களும்*** என்ற பாடத்தில், சுவிசேஷ யுகத்தின் முடிவில் நடைபெறும் அறுவடையை, பவுலின் பிரயாணத்திற்கு ஒப்பிட்டு தீர்க்கதரிசனமான காரியங்கள் சொல்லப்படுகிறது.

எபிரெயர்களுக்கு பவுல் நிருபம் எழுதும் போது அவர் ரோமாபுரியில் தான் இருந்திருக்க வேண்டும். ***இருவிதமான பவுல் செய்த ஊழியம்*** என்ற கட்டுரையில் யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் அவர் செய்த ஊழியங்கள் நம்முடைய நினைவுக்கு வருகிறது.எபிரெயர்களுக்கு எழுதின புஸ்தகத்தில் யூதர்களுக்கு சில முக்கியமான அறிவுரைகளையும்,கட்டளைகளையும் காணலாம். முடிவாக, ***பவுலின் பிரயாணங்கள்*** என்ற தலைப்பில் சுருக்கமாக பவுலின் வாழ்க்கையும், சில தீர்க்கதரிசனமான பாடங்களும் உள்ளது. கிறிஸ்துவை பின்பற்றி, விசுவாசத்திற்கு சிறந்த ஒரு மாதிரியாக திகழும் நம்முடைய அப்போஸ்தலனாகிய பவுலின் நடைகள் இந்த பிரதியில் முழுமையாக வெளியிடப்பட்டிருக்கும் என்றும்,இவைகள் நம்மை கிறிஸ்துவின் பாதையில் நாம் நடக்க நிச்சயமாக பயனுள்ளதாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

# ரோமர்களின் சட்டம்

## பொர்க்கியுபெஸ்துவின் நீதி (நியாயத்தீர்ப்பு)

***..........ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள். (லூக்கா16:8)***

இன்றைய நீதிமன்ற அமைப்புகள் ரோமச் சட்டங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த ரோமச் சட்டங்கள் கி.பி.499 ம் ஆண்டு **12 பலகைகளிலிருந்து** எடுக்கப்பட்டு, கி.பி.530 ஆம் வருடத்தில் கடைசியாக ஜஸ்டீனியன் சட்டமாக தொகுக்கப்பட்டது.

இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் வாழ்ந்த காலத்தில் நியாயாதிபதிகள் நியமிக்கப்பட்டு இந்த சட்டங்கள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டது. அக்காலத்தில் பேலிக்ஸ் மற்றும் பொர்க்கியுபெஸ்து ஆகிய இரண்டு பேரும் பிரசித்தி பெற்ற முக்கியமான தேசாதிபதிகளாக இருந்தார்கள்.

இவர்கள் இருவரும் வித்தியாசமான குணாதிசயங்களுடையவர்களாக இருந்தார்கள். பேலிக்ஸ் துன்மார்க்கனாகவும் **[அப்போஸ்தலர் 24:26]** பொர்க்கியுபெஸ்து ஒரு நேர்மையான மனிதனாகவும் காணப்பட்டார்கள். ஆனால் பேலிக்ஸ் பொர்க்கியுபெஸ்துவின் வசமாக ஒப்பு கொடுக்கப்பட்ட போது அந்த இரண்டு தேசாதிபதிகளும் சூழ்நிலையை சமாளிக்க முடியாத ஒரு நிலையில் இருந்தார்கள்.

அக்காலத்தில் யூதாவை ஏரோதியனாகிய அகிரிப்பா, II ராஜாவாக அரசாண்டு வந்தான். அவன் தன்னுடைய யூத ஹாஸ்மோனிய அரசபரம்பரையைச் சேர்ந்த பாட்டியாகிய மரியம்மாளுடைய பேரன், ஆகவே அவன் ஆலய சடங்குகளில் கலந்து கொண்டான். ஆலயத்தில் உள்ள பிரகாரங்களை காணும்படியாக அவனுடைய அரண்மனையின் மதில் சுவரை உயரமாக கட்டினான். இதை கண்டு மிகவும் வேதனைப்பட்ட ஆசாரியர்கள் அவனுடைய பார்வையை தடுப்பதற்கு அதை விட பெரிய சுவரை கட்டினதும் அல்லாமல் ரோமர்களிடம் எதிர்ப்பை தெரிவித்து சாதகமான பதிலை இராயனிடமிருந்து எதிர்பார்த்தார்கள். இந்த பிரச்சனையின் காரணமாக பேலிக்ஸ்சும், பொர்க்கியுபெஸ்துவும் **[அப்போஸ்தலர் 24:27,25:9]** யூதர்களுக்கு நன்றியோடு இருக்க முயற்சி செய்தார்கள். ஆனால் ஒரு வேளை இதன் காரணமாக பேலிக்ஸ் அலுவலகத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கவேண்டும்.

பொர்க்கியுபெஸ்து காலத்தை வீணடிக்காமல் காரியங்களை செவ்வையாக முடிக்க முயற்சி செய்தான். இஸ்ரயேலுக்கு வந்து சேர்ந்த மூன்றாம் நாள் இந்த பிரச்சனையில் சம்பந்தப்பட்ட ஒட்டு மொத்தமான யூத மதத்தலைவர்களை சந்திக்க செசரியாவிலிருந்து எருசலேமுக்கு பயணம் சென்றான். பிரதான ஆசாரியர், ரோமர்கள் யூதர்களை வேதனைபடுத்தினார்கள் என்றும் அதற்கான சரியான ஒரு முடிவை எடுக்கும்படி துரிதமாக அவருடைய கோரிக்கைகளை முன் வைத்தார்.

யூதர்களின் மதச்சட்டத்திற்கு விரோதமாக துணிந்து குற்றம் புரிந்ததினால் பவுலை எருசலேமுக்கு அனுப்பும்படி கேட்டு கொண்டான். அப்போஸ்தலனாகிய பவுலை வழியில் கொண்டு செல்லும் பொழுது அவரை கொலை செய்ய கொடிய திட்டம் தீட்டியிருந்ததால் இப்படி சொன்னான். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க ரோம அதிகாரி, இந்த காரியத்தை குறித்து செசரியாவில் பரிசீலிக்கப்படும் என்று யூதர்களுக்கு உறுதி அளித்தான். தாமதமின்றி, கடற்கரையில் இருக்கும் கோட்டைக்கு வந்த போது, குற்றவாளியை அவனுக்கு முன்பாக கொண்டுவரச் சொன்னான். முதலில் செசரியாவில் யூதர்களால் சொல்லப்பட்ட குற்றசாற்றுகளை விசாரித்தான். பவுல் தான் ரோமச்சட்டங்களுக்கும், யூதச்சட்டங்களுக்கும் விரோதமாக எந்த விதமான குற்றமும் புரியவில்லை என்று எடுத்துரைத்தார்.

யூதர்களுக்கு சாதகமாக அப்போஸ்தலனாகிய பவுலை எருசலேமுக்கு இந்த வழக்கு விசாரணைக்கு போக சம்மதமா என்று அவன் கேட்டான். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய ரோம குடியுரிமைகளை கோரி, இராயனுடைய நீதிமன்றத்தில் தன்னை விசாரிக்கும் படி கேட்டுகொண்டார்.

### குற்றவாளி தனது நியாயத்தை கோரும் உரிமை

குற்றஞ்சாட்டப்பட்ட மனுஷன் குற்றஞ்சாட்டினவர்களுக்கு முகமுகமாய் நின்று, சாட்டின குற்றத்துக்கு தனக்காக எதிருத்தரவு சொல்ல அவனுக்கு இடங்கிடைக்கிறதற்குமுன்னே, குற்றஞ்சாட்டினவர்கள் பட்சமாய் அவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறது ரோமருக்கு வழக்கமல்ல **[அப்போஸ்தலர்25:16]** என்ற ஒரு ரோம சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வழக்கறிஞர் இந்த வழக்கை செசரியா வந்த அகிரிப்பா ராஜாவின் முன் வைத்தான். மூன்று அடிப்படையான சட்ட தொகுப்புகளில் இந்த ஒரு சட்டத்தை பொர்க்கியுபெஸ்து பவுலின் விசாரணையில் பயன்படுத்தினான்.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் அடிப்படையான இரண்டு உரிமைகளை இது முக்கியத்துவம் கொடுக்கிறது. குற்றவாளிகள் தங்கள் மேல் சுமத்தப்பட்ட குற்றத்திற்கு எதிர்த்தும் பேசலாம், அடுத்து விசாரனையின் போது, வழக்கு சரியான முறையில் ஆராய்ந்து அறியப்படும்.

இந்த இரண்டு முறைகளும், நீதிமன்ற வழக்கில் மட்டும் அல்லாமல் சபையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கும் இவைகளை பயன்படுத்தலாம். இப்படிப்பட்ட முறைகளை நம்முடைய ஆண்டவராம் இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு வழிகளாக அமைத்து கொடுத்தார்.

**உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து, அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்.**

**அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ.**

**அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து, சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக. [மத்தேயு 18:15-17]**

இந்த பகுதியில் நம்முடைய ஆண்டவராம் இயேசு இந்த இரண்டு வழி முறைகளும் பாதுகாப்பதோடு மட்டுமல்ல, கூடுதலாக இந்த விசாரணைகளை தனிமையில் நடத்தும்படி சொல்லுகிறார். இப்படியாக மனிதனுடைய மதிப்பையும் மேன்மையும் பாதுகாக்க வாய்ப்பளித்தார். முதல் படியில் குற்றம் சாட்டுகிறவர் குற்றம் சாட்டப்பட்டவரை தனிமையில் சந்திக்கச் சொல்லுகிறார். ஒருவரை ஒருவர் சந்திக்க, பிரச்சனைகள் முடிவடைய அநேக வாய்ப்புகள் உண்டு. இந்த ஒரு வழி முறையில் தவறாக புரிந்து கொண்ட காரியங்கள் தெளிவடையும், சில உண்மைகள் வெளிவருவதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆனால் இருவரும் திறந்த மனதோடு அமர்ந்து பிரச்சனைகளை தெளிவாக புரிந்து, சம்பாஷித்தால் மட்டுமே இந்த முறை பயனுள்ளதாக இருக்கும்.

ஆனால் அநேக சமயங்களில் ஒருவர் மற்றொருவருடைய கிரியைகளினாலும், செய்கையினாலும் பாதிக்கப்பட்டு, இவைகள் பேசி தீர்ப்பதற்கு காலம் தாமதிக்கும் போது, கோபங்களும்,மிகுதியான பிரச்சனைகளும் ஏற்படலாம். அதற்கு பின் முகத்திற்கு முகம் பார்க்கும் போது ஒருவருக்கு ஒருவர் மிகுந்த சத்தத்தோடு வாக்குவாதங்களை தொடரலாம், இப்படிப்பட்ட சூழ்நிலையில் குற்றம் சாட்டப்பட்ட நபர் பொறுமையோடு மறு உத்திரவு கொடுத்தால் பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

**மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும், கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும். [நீதிமொழிகள்15:1]**

குற்றம் சாட்டப்பட்டவன் சீமேயி, தாவீது மீது கல்லெறிந்த போது அரசனாகிய தாவீதின் வார்த்தைகளை நினைவுக்கூரக்கடவன்.

**அதற்கு ராஜா : செருயாவின் குமாரரே, எனக்கும் உங்களுக்கும் என்ன? அவன் என்னைத் தூஷிக்கட்டும்; தாவீதைத் தூஷிக்கவேண்டும் என்று கர்த்தர் அவனுக்கு சொன்னார். ஆகையால் ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்கத்தக்கவன் யார் என்றான்.** [II **சாமுயேல் 16:10]** சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு காரியங்களை செய்வதைக் காட்டிலும், அதை சாதகமாக பயன்படுத்தி, நம்மை திருத்திகொண்டு, நல்ல உணர்வுகளை பெறவேண்டும் இதுவே ஒரு ஞானமுள்ள கிறிஸ்தவனுக்கு அழகு.

**சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்.... [ நீதிமொழிகள்27:6 ]**

அடுத்த படியாக இந்த காரியங்கள் மறைவாக கையாளப்பட்டால், நிச்சயமாக பிரச்சனைகள் முடிவடைய வாய்ப்புகள் உண்டு. இரண்டாவது படியாக இருவரும் ஏற்றுகொண்டால் இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் இந்த பிரச்சனைகளை கேட்கலாம். இந்த சூழ்நிலைகளுக்கேற்ற ஒரு அறிவுரையை நாம் **புது சிருஷ்டி என்ற புத்தக [பக்கம் 372, 373] தொகுப்பில்** ஒருவர் தன்னை சீர் பொருந்துவதற்கு மாறாக தன்னுடைய பாவத்தில் நிலைத்திருந்தால், இரண்டு அல்லது மூன்று சகோதரர்கள் இந்த பிரச்சனையை பற்றி எந்த விதமான முன் அறிவிப்பு இல்லாமல் போய் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அறிவுரை சொல்ல வேண்டும். (இந்த பிரச்சனைகளில் மூப்பர்கள் தங்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி, நியாயம் கூறும் எந்த விஷயத்திலும் கட்டாயப்படுத்த கூடாது.)

இவைகள் அனைத்திற்கும், கட்டுப்படாமல் போகும் நிலைமையில் மட்டுமே பிரச்சனையை சபைக்கு முன் கொண்டுவர வேண்டும். இந்த பிரச்சனைகள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இல்லாமல் பேசப்படக் கூடாது. அவருக்கு கட்டாயமான, ஒரு தயவுள்ள அழைப்பை கொடுக்கவேண்டும். ஒரு வேளை அவர் அழைக்கப்படாமல், அவருடைய பிரச்சனைகளை குறித்து விவாதித்தால்,இது ரோமர்களின் நியாயம் விசாரிக்கும் முறைகளை விட மோசமாக இருக்கும். ....குற்றஞ்சாட்டப்பட்ட மனுஷன் குற்றஞ்சாட்டினவர்களுக்கு முகமுகமாய் நின்று, சாட்டின குற்றத்துக்குத் தனக்காக எதிருத்தரவு சொல்ல அவனுக்கு இடங்கிடைக்கிறதற்குமுன்னே, குற்றஞ்சாட்டினவர்கள் பட்சமாய் அவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறது ரோமருக்கு வழக்கமல்ல என்றேன்.

## மிகச் சிறந்த சாட்சிகள்

பொர்க்கியுபெஸ்து மிகவும் குழம்பினார். எருசலேமில் உள்ள ஆசாரியர்கள் சொன்ன குற்றசாட்டுகளைக் கேட்டறிந்தான். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமச் சட்டத்தை பொருத்தவரை ரோமச் சட்டங்களுக்கு உட்பட்டவராகவும்

எபிரெயர்களின் பழக்கவழக்கங்களையும் கடைபிடித்தவருமாகவும் இருந்தார். தான் ஒரு ரோம பிரஜையாக இராயனுக்கு முன் நின்றார். அவர் இராயனிடம் முறையீடு செய்திருந்த ரோம பிரஜை ஒருவரை கண்டித்திருந்தார். அந்த பிரஜை தனக்கு ஆதரவு எதிர்பார்த்திருந்த அதிகாரியின் மூலம் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். இவர் முடிவு எடுக்கையில் **[அப்போஸ்தலர் 25:12]** இப்பொழுதோ சிறைக்கைதி செய்த தவறு என்னவென்று தான் நிச்சயமாக அறிந்திராத நிலையில் அவர் மேல் குற்றம் சுமத்தும் சூழ்நிலையை சந்தித்தார்.

பொர்க்கியுபெஸ்து இந்த காரியத்தை குறித்து ஆழமாக சிந்தித்து கொண்டிருக்கையில், ரோமாபுரி நியமித்த யூதேயா அரசன் அகிரிப்பாவும், பெர்னீக்கேயாளும் தங்களுடைய புதிய வழக்கறிஞரை வரவேற்க செசரியாவுக்கு வந்தார்கள். இந்த ஒரு சூழ்நிலை பொர்க்கியுபெஸ்துவுக்கு சாதகமாக அமைந்தது. அகிரிப்பாவும் அவர் மனைவியும் யூத மார்க்கத்தை பற்றி அறிந்திருந்தார்கள். ஆனால் பொர்க்கியுபெஸ்துவுக்கு யூத விசுவாசத்தை பற்றி ஒன்றும் அறியாதவராக இருந்ததினால் பவுலின் மேல் சுமத்தப்பட்ட மத குற்றச்சாட்டுகளை பற்றி விசாரிப்பதற்கும், யூதர்கள் கண்ணோட்டத்திலிருந்து இந்த பிரச்சினைகளை பார்ப்பதற்கும் பொர்க்கியுபெஸ்து இவர்களுடைய உதவியை நாடினார். (Reprints,p.4501)

பெர்னீக்கேயாள் இந்த பிரச்சனையை பொருத்தவரை சற்று தெளிவற்றவராகவே இருந்தார். இவள் தன்னுடைய மாமனாகிய ஏரோதியனாகிய சால்சிஸை திருமணம் செய்தவர். அவன் மரித்த பின்பு தன்னுடைய சகோதரனிடம் வந்துவிட்டாள், யூத வரலாற்று ஆசிரியராகிய ஜோசபசும் ரோம கவிஞரும் முறைகேடான உறவு கொண்டிருந்தார்கள் என்று எழுதியிருக்கிறார்கள். டாக்டஸ் என்ற வரலாற்று ஆசிரியரும், தீத்து பேரரசனுக்கு இவள் வைப்பாட்டியாக இருந்ததாக கூறுகிறார். அகிரிப்பாவும், பெர்னீக்கேயாளும் யூத பழக்கவழக்கத்திற்கு ஒரு சிறந்த சாட்சிகளாக இருந்தார்கள். மேலும் ரோமாபுரியில் இவர்கள் இருவரும் நம்பிக்கைக்கு பாத்திரவான்களாக இருந்தார்கள். அகிரிப்பாவின் பங்கு, பவுலை சோதிப்பதாக இராமல் அவர் மேல் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளை ரோமாபுரிக்கு எடுத்து செல்லுவதை திட்டமிடுவதாகவே இருந்தது.

பவுலின் வாதம் மிகவும் திறமையுள்ளதாக இருந்தது. அவர் யூதனாக மட்டும் அல்லாமல் ஒரு பரிசேயன் என்றும் சொல்லி தன்னுடைய வாதத்தை தொடங்கினார். அவர் யூதமார்க்கத்திற்காக பாராட்டின வைராக்கியத்தையும், அதின் நிமித்தம் கிறிஸ்தவர்களை துன்ப்பபடுத்தின விதத்தையும் எடுத்துரைத்தார். அதற்கு பின் அவருடைய சம்பாஷனைகளை தொடர்ந்து தனக்கு பரலோக காட்சியில் கிடைக்கபெற்ற கட்டளைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளை பற்றியும் எடுத்துரைத்தார்.

பொர்க்கியுபெஸ்து பவுலின் வாதத்தை குறுக்கிட்டு அதிகமாக கற்றுக்கொண்டதினால், பித்து பிடித்து விட்டது என்றார். அப்போது பவுல் நேரடியாக அகிரிப்பாவிடம்.

**அகிரிப்பா பவுலை நோக்கி – நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான்.**

**அதற்குப் பவுல் நீர்மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். [அப்போஸ்தலர் 26:27,28] என்றார்.**

இந்த ஒரு வேதபகுதியை குறித்து சகோ. ரசல் அவர்கள் மிக அருமையாக சித்தரிக்கிறார். பவுல் சொல்லியவைகள், அகிரிப்பவின் சிந்தையை கடந்து சென்றாலும், அவன் ஒரு பரிசுத்தவானாக மாறவில்லை. ஆனால் இவைகளை அவன் கேட்டவுடன் அவனுடைய விழுந்து போன ஒரு நிலைமையை உணர்ந்தான். அப்போஸ்தலனாகிய பவுல் நன்மை செய்வதற்கு உபத்திரவப்படுவது போல், (அகிரிப்பா) தான் தீங்கு செய்வதற்கு துரிதமாக செயல்படுவதை உணர்ந்தான். (Reprints:P 4993)

பவுலின் அனைத்து சம்பாஷனைகளையும் கேட்டபிறகு தனிப்பட்ட வகையில் இவர் குற்றமற்றவர் என்று அகிரிப்பாவும், பொர்க்கியுபெஸ்துவும் முடிவுக்கு வந்தார்கள். ஆனால் தங்களுடைய பதவியின் நிமித்தம் அவர்கள் பவுலை ரோமாபுரியின் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். நம்முடைய கிறிஸ்துவ ஜீவியத்தில் பிரச்சனைகளை நாம் சந்திக்கும் போது நம்மை காட்டிலும் ஞானம் பெற்றவர்களின் ஆலோசனையை ஒரு காரியத்தில் பெற முயற்சிப்பது தவிர்க்க முடியாத சூழ்நிலையாகும் ஏனென்றால் இதுவே நாம் கடைபிடிப்பதும்,நம்புகிறதாகும்.

இதைக் காட்டிலும் வேறுப்பட்ட கருத்துக்களுடன் கற்றுணர்ந்த கோணத்தை உடைய மற்றவர்களிடம் ஆலோசித்து பெற்று கொள்ளுவது என்பது மிகவும் கடினமானதாகும். ஆனால் **மத்தேயு 18-ம்** அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற இரண்டாவது படியை நாம் நடைமுறைப்படுத்தும் போது, அப்படிப்பட்ட ஆலோசனைகள் குற்றம் சாட்டப்பட்ட ஆலோசனைகள் குற்றம் சாட்டப்பட்டவர் முன் நடை பெறுவது மிக அவசியம்.**ஏனென்றால் அவருடைய வார்த்தைகளும் செயல்களும் தவறாக புரிந்து கொள்ளபட்டிருப்பதால் காரியத்தை கேட்டுக்கு முன் உத்தரம் சொல்லுகிறவனுக்கு , ஆதுபுத்தியீனமும் வெட்கமுமாயிருக்கும். [நீதிமொழிகள்18:13]**

## முக்கிய குற்றச்சாட்டுக்கள்

இந்த மூன்றாவது ரோம நீதி சாஸ்திரத்திலிருந்து கிறிஸ்தவர்கள் விலைமதிப்பற்ற பாடங்களை பொர்க்கியுபெஸ்துவின் வார்த்தைகளிலிருந்து கற்று கொள்ளலாம்:

**இவனை விசாரித்துக் கேட்டபின்பு எழுதத்தக்க விசேஷம் ஏதாகிலும் எனக்கு விளங்கும்படி, இவனை உங்களுக்கு முன்பாகவும், விசேஷமாய் அகிரிப்பா ராஜாவே, உமக்கு முன்பாகவும் கொண்டுவந்தேன் என்றான் [அப்போஸ்தலர் 25:27]**

ஒரு குற்றம் சரியாக நிரூபிக்கப்படாவிட்டால் அல்லது குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றங்களுக்கு தக்க ஆதாரம் இல்லாவிட்டால் , அந்த வழக்கை அவர்கள் தள்ளுபடி செய்து விடுவார்கள்.

யோபு33:3-12 வசனத்தில் இளைஞனான எலிகூ,யோபுவை கண்டிக்கும் போது அவன் படிப்படியாக பேசினவைகள் இதற்கு ஒரு சரியான எடுத்துகாட்டாக இருக்கிறது. அவர் யோபுவை சுட்டிக்காட்டியதில் எட்டு விதமாக அடிப்படை கோட்ப்பாடுகளை கையாண்டிருக்கிறார்.

1. **சரியான நோக்கம் :** என் வார்த்தைகள் என் இருதயத்தின் உண்மைக்கு ஒத்திருக்கும், (3-வசனம்)
2. **தெளிவு :** நான் அறிந்ததை என் உதடுகள் சுத்தமாய் வசனிக்கும்.(3-வசனம்)
3. **எதிர்த்து தாக்குவதற்குரிய அழைப்பு :** உம்மாலே கூடுமானால் எனக்கு மறுமொழிகொடும்,நீர் ஆயத்தப்பட்டு எனக்கு எதிராக நில்லும். (5-வசனம்)
4. **குறைக்கண்டுபிடிப்பதற்கான வாய்ப்பை எதிர்ப்பார்த்துக்கொண்டிருப்பது :** இதோ, உம்மைப்போல நானும் தேவனால் உண்டானவன், (6 -வசனம்)
5. **தன்னுடைய இயலாமைகளை ஒத்துக் கொள்ளுவது :** நானும் மண்ணினால் உருவாக்கப்பட்டவன். (6-வசனம்)
6. **சாந்தத்தோட பேசுவது :** இதோ, நீர் எனக்குப் பயப்பட்டுக் கலங்கத்தேவையில்லை. என் கை உம்மேல் பாரமாயிருக்கமாட்டாது. (7-வசனம்)
7. **காதார கேட்ட தகவல்கள் ஏற்று கொள்ளப்படுவதில்லை :** நான் காதாரக் கேட்க நீர் சொன்னதும், எனக்குக் கேள்வியான உம்முடைய வார்த்தைகளின் சத்தமும் என்னவென்றால் (8-11 வசனங்கள்)
8. **மனிதனை குற்றப்படுத்தாமல், அவன் கிரியைகளை குற்றப்படுத்துவது :** இதிலே நீர் நீதியுள்ளவர் அல்லவென்று உமக்குப் பிரதியுத்தரமாகச் சொல்லுகிறேன், மனுஷனைப்பார்க்கிலும் தேவன் பெரியவராயிருக்கிறார். (12-வசனம்)

தேவனுடைய பிள்ளைகள் கட்டுபாடான வழிநடத்துதலில் இருக்கும்போது இப்படிப்பட்ட வழி முறைகளை பயன்படுத்தினால் தேவையற்ற பிரச்சனைகளை தவிர்க்கலாம். சில சூழ்நிலையில் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் கண்டிப்போடு நடந்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட ஒரு கட்டளையை அப்போஸ்தலனாகிய பவுல் II ***தீமோத்தேயு 4:2ம்*** வசனத்தில் கொடுத்திருக்கிறார்.

**சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு. [எபேசியர்4:15]**

சத்தியத்தை அன்போடு பேசி மற்றவர்களை ஊக்குவிக்கிற எபேசு சபையின் ஆவியை நாம் பெற இது நல்ல ஒரு ஆலோசனையாக இருக்கிறது.

நாம் குற்றவாளிகளாக இருக்கையில் இந்த கொள்கைகள் நேர்மையாக நடந்து கொள்வதை கவனிக்கையில் மற்றவர்களை குற்றப்படுத்தும் போது எவ்வளவு கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று சிந்திப்பது மிக அவசியம்.

அடுத்ததாக இந்தப் பாடத்தின் தலைப்பாக கொடுக்கப்பட்ட வசனமானது வேறுபட்ட கருப்பொருளை உடையதாகும். மற்றவர்களின் குறைபாடுகளை எடுத்துரைப்பதும் நல்வழிப் படுத்துவதற்குப் பதிலாக இது கொடுக்கப்பட்ட உக்கிராண ஊழியத்தை சரியான முறையில் பயன்படுத்துவதை குறிக்கிறது.

மற்றவர்களுக்கு மாதிரியாக இருக்க வேண்டிய வெளிச்சத்தின் பிள்ளைகள் சிருஷ்டி கர்த்தாவை பற்றிய அறிவு இல்லாதவர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் அநேகமாக இருப்பதை நினைத்தால் மிகவும் வேதனையாகத்தான் இருக்கிறது. வாழ்க்கைக்கு முக்கியமான பாடங்களை எடுத்துக்காட்டாக உலக மக்களிடம் காணும்போது அவைகளை கற்றுக் கொள்வது நல்லது.

எங்கெல்லாம் சத்தியம் வெளிப்படுகிறதோ, அவைகளை ஏற்றுக்கொள்ளுங்கள் உங்களுடைய செயல்களுக்கு ஒத்துப்போவதுயில்லை என்றாலும் கவலைப்படாதீர்கள். கிறிஸ்து வாக்களித்தபடியே சத்தியத்தின் ஆவி சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்தும். (Reprints:P 8,9)

# தெய்வீக பயிற்சி

## சபை மூப்பருக்கு ஒரு ஆலோசனை

**விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது-நம்முடைய பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக. [1தீமோத்தேயு 1:2]**

காவலிலிருந்து விடுதலையான பவுல் **[அப்போஸ்தலர் 28:31]** துருக்கிக்கு பிரயாணமாக சென்று தனிப்பட்ட முறையில் தீமோத்தேயுவை சந்தித்தார், அதற்கு பின் பவுல் மக்கோதோனியாவுக்கு சென்று தீமோத்தேயுவுக்கு முதல் நிருபத்தை எழுதினார். வயது சென்ற அந்த அப்போதஸ்தலன் சில மாதங்களுக்கு முன் தீமோத்தேயுவோடு நடத்தின சம்பாஷனைகளை பற்றி அந்த நிருபத்தில் எழுதியுள்ளார். அதில் தன்னுடைய இளைய சகோதரன் எபேசுவில் தங்க வாய்ப்புகள் இருப்பதாக கூறுகிறார்.

**வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும், விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கு ஏதுவாயிராமல், தர்க்கங்களுக்கு ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும் முடிவில்லாத வம்சவரலாறுகளையும் கவனியாதபடிக்கும்,நீ சிலருக்குக் கட்டளையிடும் பொருட்டாக.,**

**நான் மக்கெதோனியாவுக்குப் போகும் போது உன்னை எபேசு பட்டணத்திலிருக்க வேண்டிக்கொண்டபடியே செய்வாயாக. [1 தீமோத்தேயு 1:3,4]**

கிரேக்க – ரோமானிய உலகத்தின் நியூயார்க் பட்டணமாக எபேசு இருந்தது. அரசாங்கத்தின் மையப்பகுதியாக செயல்பட்டு வந்தது. வர்த்தகம், வங்கி, கலைகளின் களஞ்சியம் ஆன்மீகத்திற்கும், உலக நாகரீகத்திற்கு பேர்பெற்ற இடமாக இருந்தது. பழைய ஏழு அதிசயங்களில் ஒன்றான மகாதேவியாகிய தியானாளுடைய சிறப்பு வாய்ந்த கோவிலை தரிசிக்க எல்லா இடங்களிலும் இருந்து வந்தார்கள்.

மேற்க்கத்திய நாகரீகத்தின் முக்கிய பகுதியாக இருந்த எபேசுவில் பவுல் அநேக நாட்கள் தங்கியிருந்தார். **[இரண்டு வருடம்]** மேலும் அப்போஸ்தலனாகிய யோவானும் இயேசுவின் தாயாகிய மரியாளும் அங்கு தங்கினார்கள்.

கொரிந்துவில் சம்பாஷித்த ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் பவுலின் வேண்டுகோளுக்கு இணங்க எபேசுவில் தங்கி துரிதமாக வளர்ச்சி அடையும் கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய கூட்டங்களை நடத்தி அவர்களைப் பேணிக் காத்தார்கள்.

எபேசுவுக்கு இப்படிப்பட்ட அநேக போதகர்கள் ஈர்க்கப்பட்டார்கள், ஆனால் அந்த பட்டணம் பழங்கால கிரேக்க, ரோமானியர்களின் தெய்வ வணக்கம் நிறைந்திருந்தது. கிறிஸ்தவம் நிலைத்து தழைப்பதற்கு, பிரபலமான மூடநம்பிக்கைகளுக்கு எதிர்த்து, அவைகளை தவறு என்று பிரகாசமுள்ள சிந்தையோடு போராட வேண்டும். கி.பி. 65 ம் வருடம் தீமோத்தேயு அங்கு தங்கின பின்பு கிறிஸ்துவம் பெரிதான வழிகளை வகுத்தது. ஆனால் இப்போதோ சாத்தான் அவைகளை முற்றிலுமாக மாற்றிவிட்டான். கற்பனையான காரியங்களை கிறிஸ்துவ போதகமாக்கினான். அப்படிப்பட்ட போதனைகளை ஆங்கிலத்தில் Gnosticism என்று அழைக்கப்படுகிறது.

அக்காலத்தில் சபையில் ஆழமாக பற்றியிருந்த தப்பறையான போதனைகளை களைந்து போட அப்போஸ்தலனாகிய பவுல் பயன்படுத்திய சில முறைகளை நாம்இப்பொழுது காணலாம்.

1. இந்த காரியங்களில் பவுலுக்கும்,தீமோத்தேயுவுக்கும் உள்ள அதிகாரங்களும், அவைகளை வெளிப்படுத்தும் விதங்களும்.
2. சபை கூட்டங்களில் இந்த தவறுகளை விரட்ட இவர்கள் ஏற்படுத்தும் சில சாதகமான சூழ்நிலைகள்.
3. தவறான உபதேசங்களை நேரடியாக எதிர்த்து போதித்து, உண்மையான போதகங்களை பின்பற்றுவதின் மூலம் வரும் குணலட்சனங்களை ஆதாரமாக காட்டுவது.

### அதிகாரத்தை ஸ்தாபிப்பது

தீமோத்தேயு தன்னுடைய விசுவாசத்தின் தந்தை பவுலிடமிருந்து கடிதத்தை பெற்று கொள்ளும்போது, இது வெறும் கடிதம் மட்டும் அல்ல, மாறாக முழு சபைக்கும் தேவன் தந்த செய்தி என்று அறிந்து கொண்டான் **[1 தீமோத்தேயு1:1]** ஆகவே அக்காலத்தில் அங்கிகாரம் பெற்று அதிகாரத்திலிருந்த சபைகளுக்கு தீமோத்தேயு முக்கியமானவராக இருந்தார்.

புதிய யுகங்களில் உபதேசங்களின் சட்டங்களை ஏற்று கொள்ளுவதற்கு யூத கிறிஸ்துவர்கள் மிக கடினமாக இருப்பதினால், பவுலின் அதிகாரத்தை அநேகர் சந்தேகப்பட்டு கொண்டிருந்தார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார்.

ஆகவே பவுல் புறஜாதிகள் யூதர்களுக்கு பங்காளிகளானார்கள் என்பதை மீண்டும் மீண்டுமாக எடுத்துரைக்க அவசியம் ஏற்பட்டது. பவுல் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்த இப்படி செய்யாமல் தேவனுடைய சட்டத்தை புரிய வைப்பதற்கே இப்படி செய்தார். ஏன் என்றால் கிறிஸ்துவுக்குள் இருக்கும் மன்னிக்கக்கூடிய குணங்களை அவர் அனுபவமாக்கினவர். ஆகவே யூதர்கள் அவரை எதிர்த்த போதிலும் அவர்களை மன்னித்து, காரியங்களை மீண்டும் மீண்டுமாக புரியும்படி எடுத்துரைத்தார்.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு சில கட்டளைகளைக் கொடுத்து முகப்புரையை முடித்தார். இது ஒரு நல்ல போராட்டம் என்று தீமோத்தேயுவுக்கு உணர வைத்தார். பலவந்தத்தினால் கீழ்படியச் செய்யாமல் மனப்பூர்வமாக தெய்வீக முறைகளை மேற்கொண்டு மக்களை ஜெயிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## தவறுகளை எதிர்த்து போராடுவது

தவறுகளுக்கு எதிர்த்து போராடுவதற்கு எபேசு பட்டணத்தில் வாய்ப்புகள் சாதகமாக இருந்தபடியால் பவுல் தீமோத்தேயுவை அங்கு தங்கும்படி சொன்னார். அக்காலத்தில் அநேக தவறான நோக்கங்கள் சபைக்குள் புகுந்தது. இவைகளை வெளியேற்ற பவுல் அநேக முறைகளை பயன்படுத்தினார்.

முதலில் அவர் தலைவர்களின் தவறான எதிர்நோக்கங்களை தெளிவாக எடுத்துரைத்தார். மற்றவர்கள் தவறான போதனைகளை போதிப்பதற்கு பவுல் தீமோத்தேயுவை வண்மையாக கண்டித்தார். சபை வரலாற்றில் காதால் கேட்டவைகள், தப்பறையான போதனைகளாக உள்ளே நுழைந்தது. இவைகளை பற்றி சம்பாஷிக்காதபடிக்கு வெளியேற்ற வேண்டும் என்று உறுதியாக இருந்தார், ஏன் என்றால் இப்படிப்பட்ட காரியங்களை பவுல் போதிக்க வில்லை.

எபேசு சபை எப்பக்கத்திலும் தவறான போதனைகளால் நெருக்கப்பட்டது. இந்த விபரிதமான தவறுகள் ஒரு மனுஷனுடைய விசுவாசம் என்னும் கப்பலை நிச்சயமாக கவிழ்த்து போட வாய்ப்புகள் இருந்தது. விதிவிலக்கான சிலர் மட்டுமே அதில் தப்பிக்க முடிந்தது. பவுல் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை பயன்படுத்தி இமெனேயும் , அலெக்சந்தரையும் என்பவர்களை பெயர் சொல்லி அழைத்து சபையிலிருந்து வெளியேற்றினார். ஆனால் மற்றவர்களை நேரடியாக குறிப்பிடாமல் அவர்களுடைய சிந்தனைகளை மட்டும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டது. தீமோத்தேயுவுக்கு இவைகளை கண்டிக்க கட்டளைகள் கொடுக்கபட்டிருந்தது இப்படிப்பட்டவர்களை தனிப்பட்ட முறையிலோ, சபையிலோ, தவறான சத்தியங்களின் நிமித்தம் வரும் விளைவுகளையும் உண்மையான சத்தியத்தின் நிமித்தம் வரும்பலன்களை எடுத்துரைக்க அனுமதி கொடுக்கப்பட்டது. இந்த நிருபம் தவறான உபதேசத்தின் நிமித்தம் கிறிஸ்துவின் விசுவாசத்தை விட்டு விழுந்து போகும் அபாயத்தை குறித்து சபையாருக்கு எச்சரிப்பளித்தது. இவைகள் வெளியரங்கமான கிரியைகளினால் அல்ல அப்போஸ்தலனாகிய பவுலின் உபதேசங்களை பொறுமையோடு நிதானித்து, வேதாகமம் என்று அங்கீகாரம் பெற்ற **தோரா** என்னும் பழைய ஏற்பாட்டோடும், அப்போஸ்தலர்களின் எழுத்துகளையும் ஒப்பிட்டு பார்க்கும் போது இது மிக எளிதில் புரியக் கூடியதாக இருந்தது.

அநேக சுயநலமான தலைவர்கள் தீமோத்தேயுவை எதிர்த்து போரிடச் சொன்னார்கள், ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் அதை ஊக்குவிக்காமல் தவறான போதனைகளை திருத்த தீமோத்தேயுவை ஒரு போதகரை போல் கள்ள போதகர்களுடைய சிந்தைகளை எதிர்க்கும்படி புத்தி சொன்னார். ஆனால் பிரிவினைகளை காட்டிலும் இது மிகவும் கடினமாக இருந்தது.

1. கள்ளபோதகர்களை நீதியான அதிகாரத்தை பயன்படுத்தி கண்டிப்பது
2. கிறிஸ்துவ சீஷத்துவத்தின் அன்பினால் பிணைக்கப்பட்ட முன் மாதிரியோடு ஞானத்தையும் சாட்சியையும் பயன்படுத்த பவுல் வெளிப்படுத்தின,கற்றறிந்த தலைமையை பின்பற்றி நல்ல போராட்டத்தை போராடவும்
3. தேவன் ஏற்கனவே அனுமதித்த பரஸ்பர ஒப்புதல்,கீழ்படிதல்,விசுவாசம் எல்லாவற்றிற்கும் மேலான அன்பு இவைகளின் மூலம் வெளிப்படுத்தக்கூடிய அமைப்பு பெற அதிகாரத்துடன் சபைகளுக்கு கள்ள போதனைகளோடு எதிர்த்து நிற்க கற்று கொடுத்தல்.

இந்த வகையில் விசுவாசம் என்பது அதிகாரத்தினால் இணைக்கப்பட்டவர்களாய், வெளிப்படையான கருத்து பரிமாற்றம் மேலும் அன்பின் கட்டுகளாகிய உண்மை மற்றும் **[கலாத்தியர்6:10]** ஊழியத்தோடு இணைக்கப்பட்ட ஒரு குடும்பமாகவும் ஒரே வீட்டார்.

## கள்ள போதனைகளின் பெருக்கம்.

பழங்கால கட்டுக்கதைகள்--**[1தீமோத்தேயு 1:4]** முடிவில்லா வம்ச வரலாறுகளை பற்றி பவுல் எச்சரிக்கும் போது, அவர் வேதாகமத்தில் தீர்க்கதரிசனங்கள், கால கணக்குகளை புரிந்து கொள்ளுவதற்கு பயன் அடையக்கூடிய வேதத்தில் உள்ள வரலாற்றை பற்றி குறிப்பிடாமல் வேதத்தில் இல்லாத சொந்த போதனைகளை பற்றி இங்கு பேசுகிறார். பவுல்

எபேசு சபையை கட்டுகதைகளுக்கும்,ஞானம் என்று உலகத்தால் அழைக்கப்படுபவைகளுக்கும், ஆன்மீக அறிஞர்களிடமிருந்து எழும்பும் முடிவில்லா கேள்விகளுக்கும் எச்சரிப்பாக இருங்கள் என்கிறார்.**[1தீமோத்தேயு 1:4,6:20, II தீமோத்தேயு 2:14-19,23,25,26, 3:5-8 இந்த வசனங்களை முழுமையாக வாசிக்கவும்.]**

கடந்த கால மதங்கள் அனைத்தும் இருண்ட மனநிலையில், சரியாக சிந்திக்க திராணியில்லாத சூழ்நிலையில் கற்பனை செய்யப்பட்டவைகள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் உறுதியாக கூறுகிறார். ஆகவே அவர் தீமோத்தேயுவை இப்படிப்பட்ட கட்டுக்கதைகளை குறித்து வாக்குவாதம் செய்யவேண்டாம் என்று புத்தி சொன்னார். இவைகள் ஆரோக்கியமாக இருக்காது என்கிறார். சிருஷ்டிப்பின் காரியங்களை குறித்து வேதாகம ஆதாரமற்றவைகளை பவுல் அடியோடு நிராகரிக்கிறார் **DaVinciCode** போன்ற படங்கள் தவறான கட்டுக்கதைகளை உறுதிப்படுத்த எடுக்கப்படுகிறது. விசுவாசம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே வளரவேண்டும்.

பழங்காலங்களில் கடவுளை பற்றிய நம்பிக்கைகள்-தொடக்கத்தில் பரலோகத்தில் அநேக தெய்வங்கள் உள்ளன என்று துவக்கத்தில் நம்பினார்கள். இன்னும் சில முக்கியமான ஆதிகால மனிதர்களுக்கு மட்டுமே சர்வவல்லவரை பற்றி அறிந்திருக்க வேண்டும் என்று நம்புகிறார்கள். அண்டசராசரத்தில் காணக்கூடியவைகள் அனைத்தும் தீங்கானது என்றும் இவை முழுமையாக டேமி- அர்ஜ் என்ற தேவியை படைத்தது என்றும், சில காலங்களுக்கு பின்பு அந்த தெய்வம் யாவே என்று அழைக்கப்பட்டது என்றும் போதிக்கிறார்கள். இது ஒரு பழி தீர்க்கும், பெண்மை நிறைந்த பழைய ஏற்பாட்டின் தேவனானவர் என்கிறார்கள்.

இப்படியாக எபேசுவில் சிருஷ்டிகர் மிகவும் கொடூரமானவர்,சுயநலமுடையவர்,எதிர்ப்பவர் என்றும்,படைப்பின் சகல காரியங்களில் தோல்வியை சந்தித்தவர் என்றும் சகலமும் மாம்சத்திலிருப்பதால் அவைகள் விழுந்தது என்ற தவறான போதகங்களை எதிர்த்து தீமோத்தேயு போரிடவேண்டியதாக இருந்தது. இந்த ஒரு கோணத்தில் சர்ப்பம் சொன்னது சரியாகவே இருந்தது. ஏவாள் இரட்சிப்பின் வழியாக இருந்ததாக சொல்லப்படுகிறது.

1. இப்படிப்பட்ட தேவ தூஷனங்களை குறித்து தொடங்கும் போது **1 தீமோத்தேயு 1:11** - வில் நித்தியானந்ததேவன் என்று தொடங்கினார். அவருடைய இரட்சிப்பின் திட்டங்கள் ஏற்ற காலத்தில் அவருடைய சித்ததின்படி நடந்து வருவதால் அவர் என்றுமே சந்தோஷமாகவும், சமாதனமாகவும் இருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் மூலமாக அவர் மேல் விசுவாசமுள்ள அணைவர் மேலும் அவர் பூரண அன்பை செலுத்தக்கூடியவராக இருக்கிறார். **[எபிரெயர்10:19]** நடந்து கொண்டிருப்பவைகள் மனுகுலத்திற்கு பாடங்களை கற்பித்து நீதியின் மேல் பசிதாகம் உண்டாவதற்கு ஏற்படுத்தப்பட்ட தற்காலிகமான சூழ்நிலைகளாகும். இப்படியாக தேவன் இந்த உலகத்தை கீழ்ப்படியாமைக்குள் அடைத்திருக்கிறார். **[ரோமர்1:16-18]** கடைசியாக கணக்கிடும் போது **தேவனுடைய கோபம் ஒரு நிமிடமும் அவருடைய அன்பும், கிருபையும், இரக்கமும், தயவும், நீடித்திருக்கும். [சங்கீதம்16:11,30: 5,136: 1-26]**
2. அநேக தெய்வங்கள் மத்தியில் ஒரு தெய்வமாக அல்ல, எல்லாவற்றிற்கும் மேல் சிறப்புமிக்க ஒரே தேவன் இருக்கிறார் என்று பவுல் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார். அவர் அழிவில்லாதவர், நித்தியவாசி, அதரிசனமானவர்,மகிமையும்,கனமும் அவருக்கு மட்டுமே உரியது. **[1தீமோத்தேயு 1:17,6-15,16]**
3. பழங்கால நம்பிக்கையின் அடிப்படையில் ஞானமில்லாமல் சொல்லும் காரியங்களை நம்பிக் கொண்டு, அநேக தெய்வங்களை நம்பி கொண்டிருப்பவைகளுக்கு பதிலாக பவுல் கூறும் போது **[1தீமோத்தேயு1:17] ஞானமுள்ள ஒரே தேவன்** என்று குறிப்பிடுகிறார். இந்த தேவனுடைய சித்தங்கள் அனைத்தும் அவரால் கொடுக்கப்பட்ட மத்தியஸ்தரின் மூலமாக செய்யப்படுகிறது என்றார். **[1தீமோத்தேயு2:5]**
4. மறைந்திருக்கும் அறிவின் மூலமாக சிலர் மட்டுமே இரட்சிக்கப்படுவதற்கு பதிலாக உண்மையான தேவன்தாமே நம்முடைய இரட்சகர் என்று பவுல் உரைக்கிறார். **[1 தீமோத்தேயு 1:1,2:3]** மகிழ்ச்சியான செய்தி அல்லது மகிமையான சுவிசேஷத்தின் மூலம் இரட்சிப்பின் வழி தேவன் நமக்கு வகுத்திருக்கிறார். **[1தீமோத்தேயு1:11]** இவை அனைத்தும் பாவத்தின் மூலம் வந்தது என்றும், இயேசு தாமே இவைகளிலிருந்து இரட்சிப்பவர் என்று பவுல் மிக தெளிவாக எடுத்துகாட்டுகிறார். **[1தீமோத்தேயு1:15]** இந்த ஒரு மெய்யான தேவன் அனைவரையும் இரட்சிக்க வழி வகுத்திருக்கிறார். **[1 தீமோத்தேயு 2:4-6,4:10]**

## ஒழுக்கத்தை பற்றி பழங்கால நம்பிக்கைகள்

ஒழுக்கத்தின் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் இரண்டு அபாயமான கருத்துக்களை நம்பி வந்தார்கள். மாம்சம் கடுந்துறவின் மூலம் கட்டுப்படுத்தப்படும் என்பதால் திருமணங்களை தவிர்த்தார்கள். ஆனாலும் மாம்சம் இயற்கையாகவே பெலவீனமானதால் பாவத்தை கட்டுப்படுத்த முடியாது என்றும் கூறினார்கள். இப்படியாக நடத்தை விதியை மீறுவதற்கும்,கடுந்துறவு என்ற இரண்டு தப்பறையான நம்பிக்கைகளை பழங்கால நம்பிக்கைகள் நிலைநாட்டி வந்தது.

1. உண்மையான விசுவாசத்தை பற்றி பவுல் எழுதும் போது சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும்அன்பே. **[1தீமோத்தேயு1-5]** சில உலகப் பிரகாரமான தேவைகளான உணவு, திருமணம், பிள்ளைகள் போன்றவைகள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது, ஆனால் அதுவே நம்முடைய வாழ்க்கையாக முடியாது என்று அப்போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்துகிறார்.
2. சபைக்குள் ஒழுக்கத்தை குறித்த மாய்மாலமான சிந்தனைகளை பவுல் வண்மையாக கண்டித்தார். சில மத வேலைகளிலும்,திருமணங்களிலும் ,உண்ணக்கூடிய உணவு வகைகளிலும் கட்டுபாடுகள் விதித்தார்கள். தேவன் தன்னுடைய படைப்புகளுக்காக ஏற்படுத்தின சந்தோஷங்களை அனுபவிக்க தடை செய்யும் எந்த சட்டமும் தேவனுக்கு விரோதமானபடியால் பவுல் இதை பிசாசுகளின் போதனை என்றார் **[1 தீமோத்தேயு4:1-4]**
3. அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், **[II தீமோத்தேயு 1:9 எபேசியர்2:8,9],** கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். **[ II தீமோத்தேயு 2:21]** சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப்பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு. **[1 தீமோத்தேயு6:20]**, நாம் தேவனை அறியும் அறிவைப் பெற சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தரவேண்டும். **[கொலோசெயர்1:10]** ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல்,சீர்கேடான வீண்பேச்சுகள், கேட்கிறவர்களைக் கவிழ்த்துப் போடுகிறதற்கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்கு, கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்லு.... என்று பவுல் குறிப்பிடுகிறார். **[ II தீமோத்தேயு 2:14,16]**

ஆண்மை, பெண்மை மற்றும் குடும்பம் அமைப்புக்கு நாஸ்தீகர்களால் வந்த பங்கம்.......... எபேசுவின் பாரம்பரியம் பெண்மையை ஆண்மையை விட மேலான ஆவிக்குரிய நிலையில் வைத்தனர். பின்பு டையானா விக்கிரக ஆராதனையை பின்பற்றினார்கள். அது போல் இன்னும் அநேக கருத்துக்கள் உள்ளன. உதாரணமாக தேவன் ஏவாளை ஏற்ற சமயத்தில் ஏதேனில் ஆணுக்கு கீழ்பட்டவள் என்ற நிலையில் சாபம் நீக்கிப்போடப்படும் என்ற நம்பிக்கை, இன்னும் மனித சுயசிந்தையானது மனிதன் வீழ்ந்த நிலையிலிருக்கும் கால கட்டத்தில் தேவன் ஏற்படுத்தின ஒழுங்கு முறையை மாற்றுகின்றனர். எபேசுவில் இதுவும் கூட முதுமையின் ஞானத்திற்கு மதிப்பில்லாமல் இளமைக்கும் அதின் கருத்துக்களும் பிரபலமாக இருக்கிறது. நாஸ்தீகர்களுடைய உணர்த்துதல் எப்போதும் ஸ்திரீகளை வழிநடத்தும் ஸ்தானத்திற்கு உயர்த்தி ஸ்திரீயானவள் தேவனுடைய வழி நடத்துதலுக்கு உணர்வு இல்லாதவர்கள் என்ற ஆண்மையின் கருத்தை எதிர்க்கிறார்கள்.

1. சபைகள் வளர்ச்சி அடைந்து நிலைநிற்பதற்கு, வயதுக்கும்,வளர்ச்சிக்கும் தக்கவாறு பொறுப்புகளை பிரித்துக் கொடுக்கும்படி அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு கட்டளையிட்டார். **[1தீமோத்தேயு 2:1-15,5:1-20]** பிள்ளைகளை ஒழுங்காக பராமரிக்கும் பெற்றோர்,கணவனுக்கு கீழ்படிந்த மனைவி போன்ற ஒழுக்கமுள்ள காரியங்கள் குடும்பத்திலும் காணப்பட வேண்டும் என்று பவுல் வலியுறுத்துகிறார். பொருளாதாரத்தின் ஒழுக்கத்தின் வேலை செய்பவர்கள் உண்ண வேண்டும்,வேலை செய்ய இயலாதவர்களுக்கும் உணவு கொடுக்க வேண்டும் என்கிறார். மேலும், சபையின் ஒழுக்கத்தில் வயது முதிர்ந்த ஞானமுள்ள,சிறப்பாக வழிநடத்துபவர்களுக்கு விசேஷமான கனம்,மகிமை கொடுக்கவேண்டும் என்கிறார்.
2. தனிமனித ஒழுக்கத்திலும், ஆவிக்குரிய வளர்ச்சியில் தகுதி பெற்றவர்களுக்கு தலைமை பொறுப்புகளை எச்சரிப்போடு பகிர்ந்து கொடுக்க வேண்டும். மூத்த மூப்பர்களுக்கு அறிவு பதினாரில் ஒரு பங்கிருந்தால் போதும். **[1தீதோத்தேயு3:1-13]**
3. **[1தீமோத்தேயு 2:9-15]** ஏதேனில் ஒரு ஸ்திரீ வஞ்சிக்கப்பட்டதின் மூலம் பாவம் உட்பிரவேசித்தது என்று பவுல் தீமோத்தேயுவுக்கு ஞானப்படுத்தினார். ஆதாம் முதலில் படைக்கப்பட்டவர், அவர் வஞ்சிக்கப்படவில்லை ஆனால் ஏவாளின் தவறான வழிநடத்தையை பின்பற்றினார் என்று பவுல் விவாதித்தார். இதை பார்க்கும் போது ஆவியில் திடமான புருஷர்கள் தேவை என்றும் சொந்த விருப்பத்துடன் தன்னுடைய புருஷனுடைய தலைமை வேலைகளையும் ,ஆவிக்குரிய வேலைகளையும் பகிர்ந்து கொள்ளும் ஸ்திரீ தன்னுடைய முழு பெலத்தை வெளிப்படுத்துகிறாள் என்றும் பவுல் குறிப்பிடுகிறார்.
4. வருங்கால மூப்பர்களின் வளர்ச்சிக்கு வேண்டிய விசேஷமான கவனிப்பை பற்றி பவுல் தீமோத்தேயுவுக்கு வலியுறுத்துகிறார். **[ II தீமோத்தேயு2:2)** ஏன் என்றால் சில நேரங்களில் சபைக்கு உதவியாக இருக்கும் இளைஞர்கள் மூத்தவர்களோடு ஒத்து போகாதபடி சில கருத்து வேறுபாடுகள் எழும்பலாம். **[1 தீமோத்தேயு4:1,2]** இப்படிப்பட்டவர்கள் மூப்பராகுமுன். விசுவாசத்தின் அடிப்படையில் வழிநடத்தப்பட்டு, ஞானத்திலும் அறிவிலும் உறுதியாக வளர்ச்சி அடைய வேண்டும். **[ II தீமோத்தேயு 2:15,22,24,24]**

பழங்கால கட்டுக்கதைகளை நம்பி விசுவாசத்தை விட்டு விலகுதல்--- விசுவாசத்தின் பழங்கால

நம்பிக்கைகளின் பாதிப்பு விசுவாசத்தின் மேல் வந்து விடுமோ என்று பவுல் கவலைப்பட்டார். இவைகள் விசுவாசத்தை மறைபொருளாகவும், புரிந்து கொள்ள மிக கடினமானதாகவும் ஆக்குகிறது. ஒரு மனுஷனுடைய இரட்சிப்பின் அளவை அறிய விரும்பி,மறைந்திருக்கும் சத்தியங்களை ஆராய்ந்து வெற்றி பெறுவதற்கு சுயமாக முயற்சிக்கிறார்கள்.

1. புற்று நோய் போல் பரவும் இந்த காரியங்களை எதிர்ப்பதற்கு வேதாகமத்தில் உள்ள எளிதான விசுவாசத்தை பவுல் குறிப்பிடுகிறார். அதிகாரப் பூர்வமான, நிருபிக்கப்பட்ட சில சாட்சியான உண்மைகள்--- தேவன் இந்த உலகத்தை நன்மையாகவே சிருஷ்டித்தார். **[1தீமோத்தேயு4:4]** தேவன் ஒருவர், ஆனால் அதரிசனமானவர். தன்னையே வெளிப்படுத்துவதற்கு இயேசு கிறிஸ்து என்னும் மனிதனை தெரிந்தெடுத்தார். **[1தீமோத்தேயு4:10,6:15, எபிரெயர் 1:2]** சில உண்மைகளையும் அடிப்படையாக கொண்டிருப்பது விசுவாசம். நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு, அவைகளை இன்னாரிடத்தல் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்,

**வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும்,எந்த நற்கிரியையுஞ் செய்யத்தகுதியுள்ள வனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது. [II தீமோத்தேயு 3: 14-17]**

2. விசுவாசமான வாழ்க்கையை நாம் எளிதாக எண்ணி விடமுடியாது. **[ II தீமோத்தேயு 4:1-4]**. இந்த கருத்துக்களை ஒருவருடைய கண்களினாலும்,காதுகளினாலும், சிந்தையினாலும் சோதித்து ஏற்று கொள்ளப்படலாம். மேலும் கனத்தையும், நீதியையும்,அன்பையும்,தாழ்மையையும் கீழ்ப்படிதலையும் பிறப்பிக்கும்.இப்படிப்பட்ட குணங்களே கிறிஸ்துவ வாழ்க்கைக்கு உண்மையான வல்லமையின் ஊற்றாக இருக்கிறது. **[II தீமோத்தேயு1:6-11]** இக்காலத்திலும் வருங்காலத்திலும் நம்முடைய நற்கிரியைகள் பலன் அளிக்கிறது **[II தீமோத்தேயு 3:16,17]** அனைத்து மக்களும் பிதாவுக்கும், மனிதனுக்கும் இடையிலிருக்கும் ஒரே மத்தியஸ்தரின் மேல் விசுவாசமுள்ள இரட்சிப்பின் மூலம் நன்மையை பெறுவார்கள்.

தீமோத்தேயு தன்னுடைய மூத்த சகோதரனாகிய பவுலுக்கு கீழ்படிந்து எபேசுவில் தங்கினதை குறித்து நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.**[1 தீமோத்தேயு1:3]** இது எளிதான ஒரு காரியம் அல்ல. ஆகவே பவுல் இதை கண்ணீரோடு வேண்டிக்கொண்டார். **[ IIதீமோத்தேயு 1:4]** முதலாம் நிருபத்தில் பவுல் தீமோத்தேயுவுக்கு கடினமாக எழுதின பின்பு **[II தீமோத்தேயு 4:12]** அவரை ஊக்குவிக்க வேண்டும் என்று எண்ணி தன்னுடைய இரண்டாம் நிருபத்தில் சாந்தமாக எழுதினார். **[ IIதீமோத்தேயு2:24]** அனைவரையும் கட்டுக்குள் கொண்டு வந்து தேவனுடைய சத்தியத்திற்கு பொறுப்புள்ளவர்களாக தீமோத்தேயு மாற்றவேண்டும் என்று பவுல் விரும்பினார்.**[II தீமோத்தேயு 4:8-16,6:12]** ஆகவே பவுல் ஒவ்வொரு முறையும் நீடிய பொறுமையாக சமநிலையோடு சபையை வழிநடத்த அதிகாரத்தோடு கடிந்து கொள்ளவும் அன்போடு ஊக்குவிக்கவும் தீமோத்தேயுக்கு புத்தி சொல்லுகிறார். இப்படியாக இவை அனைத்தும் தேவனுடைய நீதியிலிருந்து பிறக்கும் கட்டளைகளாக இருந்தது. இவைகளின் விளைவாக, அநேக நாட்கள் எபேசுவில் தங்கின பின்பு அவருடைய சுவிசேஷத்தை கேட்க பொறுக்க மனதில்லாத மற்ற சமயத்தாரின் ஒரு கூட்டம் அவரை வீதிகளில் இழுத்து சென்று கல்லெறிந்து கொன்றது. இது தீமோத்தேயு எபேசுவுக்கு வந்த 15 வருடங்களுக்கு பின்பு அதாவது கி.பி. 97 ஆம் வருடத்தில் அவருடைய 80 ஆவது வயதில் நடந்திருக்க வேண்டும்.

இப்படியாக தீமோத்தேயு தெய்வீக பயிற்சியை பெற்றார். உலகத்தில், மற்ற சமயத்தார் மத்தியிலும் குழப்பம் நிறைந்த கிறிஸ்தவர்கள் மத்தியிலும் நாமும் தீமோத்தேயுவை போல் நடந்து கொள்வோமா? எளிதில் புரியக்கூடிய நேர்த்தியான சத்தியத்தை கேட்க விரும்பும் அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்து, கேட்போர்களையும், நம்மையும் இரட்சித்து கொள்ளுவோமா? **[1தீமோத்தேயு 4:16]**இது ஒரு நல்ல போராட்டம், இந்த மல்யுத்தத்தை நாம் சட்டத்தின்படி போராடினால் மட்டுமே, நாம் முடிசூட்டப் படுவோம். நீதியுள்ள நியாயாதிபதியாகிய நம்முடைய ஆண்டவர் இப்படியாக போராடின பவுல், தீமோத்தேயு மற்றும் நமக்கு தேவன் அவருடைய பரம ராஜ்யத்தை அடையும் படி வெகுமதி அளித்து, நீதியின் கீரிடத்தை சூட்டுவார். **[ II தீமோத்தேயு2:5,11,4:18]**

# அப்போஸ்தலனாகிய பவுலின் கடைசி நிருபம்

## வயது சென்ற அப்போஸ்தலரின் ஆலோசனை

**நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். [ II தீமோத்தேயு 4:6]**

பவுலின் மரணத்திற்கு சில வாரங்களுக்கு முன் இந்த கடைசி நிருபத்தை எழுதியிருக்க வேண்டும். ஆனால் அவருடைய எழுத்துக்களை பார்க்கும்போது, அவருடைய வாழ்க்கையின் கடைசி இரண்டு மூன்று வருடங்கள் ரோமாபுரியின் சிறையிலிருந்த போது எழுதின இந்த கடைசி நிருபம் மிகவும் பாராட்டத்தக்கதாக இருக்கிறது.

பவுல் ரோமாபுரிக்கு போக விரும்பினார் **[அப்போஸ்தலர் 23:11]** பேரரசின் தலைநகரமாக இருந்ததினால் ரோமாபுரி உலகத்தில் ஒரு முக்கிய பட்டணமாக கருதப்பட்டது. **[அப்போஸ்தலர் 9:15]** தொடக்கத்தில் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரயேலர்களுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும் பொறுப்புக்களை நிறைவேற்றப்படும் என்று பவுல் அறிந்தார்.

அப்போஸ்தலர்களின் புஸ்தகத்தின் முடிவு வசனங்களில் ரோமாபுரிக்கு திரும்பியதை பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. **[அப்போஸ்தலர் 28:13-16]** பவுல் வாடகை வீட்டில் இரண்டு வருடங்கள் குடியிருந்தார் என்று 30 ஆம் வசனம் எடுத்துரைக்கிறது. ரோமாபுரியில் அநேக ஜாதியான மக்கள் வாழ்ந்து வந்ததால் பவுல் அந்த இரண்டு வருடத்திற்குள் அவருடைய ஊழியத்தை யூதர்கள் மத்தியிலும், மற்ற அநேக ஜாதிகள் மத்தியிலும் விரிவாக செய்தார். பவுல் ரோம பேரரசில் உள்ள எல்லா இடங்களிலும் பரப்புவதற்கு ஏதுவாக இருந்தது.

இதன் காரணமாக பவுல் அங்கு செல்லுவதற்கு விரும்பினார். அந்த வீட்டில் வெளிப்பட்ட உற்சாகம், மற்றும் போக்குவரத்து உண்மையில் ஆச்சரியப்பட வைத்திருக்கும். அனைத்து தரப்பிலிருந்தும் மனிதர்கள் இந்த யூத கைதியை சந்திக்க முயற்சித்து அநேகர் ஆச்சரியத்துடனும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் திரும்பினார்கள். **[அப்போஸ்தலர் 28:17-29]**

பவுல் அநேக இடங்களில் சுவிசேஷத்தை பிரசங்கித்து வந்தார், அப்பொழுது அவர் அநேக யூதர்களுடைய பகையையும் சம்பாதித்தார் ஆனால் ரோமாபுரியில் சற்று வித்தியாசமாக இருந்தது. அநேக பாஷைக்காரர்கள் அங்கு வசித்து வந்தார்கள். எருசலேமில் உள்ள யூதர்களின் மத தலைவர்களின் அதிகாரம் அங்கு செலுத்தப்படவில்லை. ஆகவே அங்கு சுவிசேஷம் மிக எளிதாக பரவியது. இது பவுலுக்கு மிகுந்த சந்தோஷத்தை கொடுத்தது. தேவனுடைய சித்தத்தை செய்து நிறைவையும் பெற்றார். இவைகள் அங்கிருந்த அதிகாரிகள் மற்றும் காவலாளிகள் மேல் ஏற்படுத்தின தாக்கத்தை நம்மால் கற்பனையில் மாத்திரமே உணர முடியும். இவை அனைத்தும் பவுல் அமைதியான நேரத்தில் எழுதினார் அந்த செய்திகளுக்காக நாம் தேவனை ஸ்தோத்தரிப்போம்.

ஏறக்குறைய புதிய ஏற்பாட்டில் உள்ள பாதி புத்தகங்களை பவுல் எழுதினார். வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது சரியாக இருந்திருந்தால் இதில் அநேக கடிதங்கள் அவர் ரோம சிறையில் இருந்த போது எழுதியிருக்க வேண்டும். ஆச்சரியப்படத்தக்கதாக இவ்வளவு கடிதங்களையும் அவர் இரண்டு, மூன்று வருடங்களுக்குள் எழுதியிருக்கிறார்.

புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்ட அநேக பவுலின் கடிதங்களில், ரோமாபுரியிலிருந்த வந்தது என்று குறிப்பீடுகள் கூறுகிறது.

### எபேசுவில் உள்ளவர்களுக்கு........

நிருபங்கள் எழுதப்பட்ட போது எபேசுவுக்கும் அனுப்பபட்டது.சபைகளில் மத்தியில் எபேசு சபை பெரிதாக இருந்தது. பவுல் இரண்டாவது பிரயாணத்திற்கு பயணம் மேற்கொண்ட போது ஆக்கிலாவையும் பிரிஸ்கில்லாளையும் அங்கு விட்டுச்சென்றார். அவருடைய மூன்றாம் பிரயாணத்திற்கு முன் மூன்று வருடங்கள் அவர் எபேசுவில் தங்கி விட்டார். **[அப்போஸ்தலர் 20:31]**

எபேசுவுக்கு எழுதின கடிதத்தில் **கிறிஸ்துவ வாழ்க்கை** அல்லது **கிறிஸ்துவ நடக்கை** பற்றி அதிகமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவ வாழ்க்கை அன்பிலும் [5:2] ஒற்றுமை [4:1-3] சாந்தத்திலும் [5:21] திருமணத்திலும் [5:22,25] பெற்றோர் பிள்ளைகள் போன்ற உறவுகளிலும் [6:1-4] எஜமானாகவும், வேலைக்காரராகவும்,எப்படியிருக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறார். [6:5-9] இந்த நிருபத்தில் அவருடைய மிகுதியான அன்பு வெளிப்பட்டிருந்தது. எப்படி எனில் ஒரு வருடத்திற்கு முன்பு தான் எபேசு சபையின் மூப்பர்களை

சந்தித்த பின்பு உணர்ச்சி பூர்வமான பிரிவு உபச்சாரத்தை பவுல் அனுபவித்தார் என்பதை நாம் நினைவில் கொள்ளலாம்.

அவர்கள் பிரிந்து போகையில்,மந்தையில் ஓனாய்கள் வந்து விடும் என்று உவமானமாக சொல்லிவிட்டு பின்பு அனைவரும் பிரியும் போது கடுமையாக அழுதார்கள். **[அப்போஸ்தலர் 20:36-38]** அவரை மீண்டுமாக ஒரு போதும் காணமுடியாது என்று அறிந்து அவர்கள் இப்படி அழுதார்கள். அழுத அனைவரும் வயதில் பெரியவர்கள் என்று நினைவில் கொள்ள வேண்டும். இவர்கள் அன்பில் எவ்வளவு ஆழமாக கட்டப்பட்டிருந்தார்கள் என்று காட்டுகிறது.

அக்காலத்தில் நிருபங்கள் அனுப்புவது மிக கடினமாக இருந்தது. ஆகவே அநேக நிருபங்கள் சேர்ந்த பின்பு ஒரு துாதர் அவைகளை எடுத்து செல்லுவது வழக்கம். **[எபேசியர்6:21]** இந்த வசனத்தில் தீகிக்கு என்பவர் உங்களுக்கு எல்லாவற்றையும் குறித்து அறிவிப்பான் என்றார். ஆங்கில வேதாகமத்தில் அதே அதிகாரம் 24 ம் வசனத்தில் பவுல் சொல்ல இந்த தீகிக்கு இந்த புஸ்தகத்தை எழுதினார் என்றும் அறியலாம். விருத்தியுண்டாக கொலோசெயருக்கு எழுதின நிருபமும் அதே காலத்தில் எழுதியிருக்கவேண்டும்.

## கொலோசெயர்களுக்கு.........

கொலோசெ பட்டணம் எபேசுவுக்கு அருகில் இருக்கிறது. இந்த ஒரு கடிதத்தையும் இந்த இரண்டு நிருபங்களும் ஒரே நேரத்தில் எழுதியிருக்க வேண்டும். சில கருத்துகளும் ஆலோசனைகளும் இரண்டு நிருபத்திலும் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் காணலாம். இந்த இரண்டிலும் பவுல் ஒரு இரகசியத்தை குறித்தும் **[கொலோசெயர் 1:26,எபேசியர்3:1-7]** கிறிஸ்துவோடு ஏற்படும் ஐக்கியத்தை பற்றியும் **[கொலோசெயர் 2:13,14 எபேசியர் 2:1,15]** சரீரத்தின் ஒருமைப்பாட்டைப் பற்றியும் **[கொலோசெயர் 2:19, எபேசியர் 4:16]** தீமையை களைந்து கிறிஸ்துவின் கிருபையில் வளர்ச்சி அடைவது **[கொலோசெயர் 3:6-10,எபேசியர் 4:20-25]** குடும்பங்களில் நடக்கும் திருமணங்கள், வீட்டை பற்றியும் **[கொலோசெயர் 3:18-25,எபேசியர் 5:21-28]** எழுதியிருக்கிறார்.

மீண்டுமாக அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய நிலையை குறித்து தீகிக்கு உங்களுக்கு அறிவிப்பார் என்று கூறுகிறார். **[கொலோசெயர்4:8]**

கொலோசெயருக்கு எழுதின நிருபத்தின் முடிவில் இரண்டு முக்கியமான காரியங்கள் உள்ளது. **[கொலோசெயர்4-15,16]** பவுல் இந்த நிருபத்தை அனைவருக்கும் கொடுக்கும்படி கட்டளையிடுகிறார்.இந்த ஒரு கட்டளையானது கொலோசெயருக்கும் மட்டுமே சொல்லப்படாமல் இன்னும் அநேகருக்கு சொல்லப்பட்டது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நிருபங்கள் 2000 வருடங்களுக்கும் மிகவும் பிரயோஜனமுள்ளதாக இருக்கும் என்று பவுல் அறியாதிருந்தாலும் அக்காலத்தில் அநேகருக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நினைத்திருக்கலாம்.

## லவோதோக்கியர்களுக்கு.................

15 ஆம் வசனத்தில் இருக்கும் இரண்டாவது முக்கியமான கருத்து என்னவென்றால், லவோதோக்கியாவிலிருக்கிற சகோதரரையும்.......வாழ்த்துங்கள். பவுல் எழுதுகிறார். கொலோசெயாவிலிருந்து லவோதோக்கியா 10 மைல் துாரத்தில் உள்ளது. 16 ஆம் வசனத்தை வாசித்தோமென்றால் இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்டபின்பு இது லவோதோக்கியா சபையிலும் வாசிக்கப்படும்படி செய்யுங்கள், லவோதோக்கியாவிலிருந்து வரும் நிருபத்தை நீங்களும் வாசியுங்கள். இந்த வசன பகுதியில் ஒரு முக்கியமான காரியத்தை வாசிக்கலாம்.

லவோதோக்கியாவுக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது, ஆனால் அது நம்மிடம் இராததினால் அது நிச்சயமாக தொலைந்து போயிருக்க வேண்டும். இனி வருங்காலத்தில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தால் அது மூன்றாவது நிருபமாக இருக்கக்கூடும். ஒரு வேளை அதை கண்டுபிடித்துவிட்டால்,கடைசி கால சபையான லவோதோக்கியாவின் காலத்தில் உள்ள நாம் பவுலின் ஞானத்தை படிப்பதற்கு எவ்வளவு ஆர்வமாக இருக்கும். **[வெளி 3:14-22]**

இருதயத்திற்கு இதமான மற்றொரு காரியத்தை கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் நாம் காணலாம்---- ஒநேசிமு **[கொலோசெயர்4:9]** ஒநேசிமுவை உண்மையும் பிரியமுள்ள சகோதரன் என்று பவுல் குறிப்பிடுகிறார். இவர் கொலோசெ பட்டணத்தை சேர்ந்தவராக இருந்தபடியால் தீகிக்கோடு சேர்ந்து நிருபங்களை கொண்டு செல்லும்படி கேட்டுக் கொண்டார்.

## பிலேமோனுக்கு......

ஒநேசிமுவை மையமாக வைத்து பிலேமோனுக்கு பவுல் ஒரு நிருபம் எழுதினார். ஒநேசிமு பிலேமோனிடமிருந்து வந்த ஒரு அடிமையாக இருந்தார். பிலேமோன் அவருடைய எஜமானாக இருந்தார். இந்த நிருபத்தில் ஒநேசிமுவை மீண்டும் சேர்த்து கொள்ளும்படி அன்போடு பவுல் மன்றாடினார். இங்கு ஒநேசிமு தன்னுடைய குமாரன் என்று

குறிப்பிடுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் எவ்வளவு ஆழமான அன்பை சகோதரர்கள் மேல் வைத்திருக்கிறார் என்று நமக்கு தெரிகிறது. அவர் சிறையில் இருக்கும் போது எவ்வளவு கண்ணீர் வடித்து இந்த நிருபத்தை எழுதியிருப்பார் என்று நாம் உணரலாம்.

## நமக்குள்ள பாடங்கள்

முடிவு நாட்களில்,அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின கடிதங்களிலிருந்து என்ன பாடங்களை பெறுகிறோம்? முதலாவது மிகக் குறுகிய காலத்தில் எவ்வளவு காரியங்களை சாதிக்க முடியும் என்று அறிந்து கொள்ளலாம். அவர் எழுதின கடிதங்கள் கடந்த 2000 வருடங்களாக சபைக்கு பயனுள்ள ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. அவருடைய குறுகிய வாழ்க்கைப் பகுதியில் செய்த காரியங்கள் எவ்வளவு நீண்ட காலத்திற்கு பயனுள்ளதாக இருக்கிறது பாருங்கள். அதே போல் நாமும் குறுகிய காலத்தில் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு தேவனுடைய சித்தத்தை நாம் நிச்சயமாக செய்யலாம். நாம் கலப்பையின் கைகளை வைத்துவிட்டு சும்மாயிருக்கலாம். மற்றவைகளை கர்த்தர் நடத்த வல்லவராக இருக்கிறார். உங்களால் முடிந்த வரை முயற்சி செய்யுங்கள் அதற்குரிய பலனை தேவன் கொடுப்பார் என்று அவர் மேல் சகலத்தையும் வைத்து விடுங்கள். இனி காலம் செல்லாது உங்கள் கைக்கு நேரிடுவது எதுவோ அதை உங்கள் முழு பெலத்தோடே செய்யுங்கள்.

ரோமாபுரியின் சிறையில்,அப்போஸ்தலனாகிய பவுல் அனுபவித்தவைகளில் நமக்குள்ள பாடங்களை குறித்து நாம் காணலாம். அவருடைய காலப்பகுதியில் தாராளமாக தேவனுடைய வேலைகளை செய்வதற்கு அந்த காலம் மிக உதவியாக இருந்தது. **ஒருவரும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம்** வருகிறது. நம்முடைய வாழ்க்கையில் அநேக காலங்களை நாம் சுயாதீனத்தோடும் மகிழ்ச்சியோடும் அனுபவித்திருக்கிறோம். இனி இப்படி சுயாதீனமாக இருக்கும் காலம் சீக்கிரமாக முடிவு அடைந்து கொண்டிருக்கிறது ஆகவே நமக்கு நேரம் இருக்கும் போதே கிரியை செய்யவேண்டும். கிடைக்கக்கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நாம் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இளைப்பாறுதலுக்குகூட இனி நமக்கு நேரம் இல்லை. அதற்குரிய காலம் நமக்கு இனி வருகிறது.

நமக்கு மற்றொரு பாடம் என்னவென்றால் பவுலின் வேலைகள் அங்கு மாறியது. வல்லமையுள்ள,பயமற்று,எங்கு வேண்டுமானாலும் செல்லக்கூடிய பவுல் ஒரு சிறிய வீட்டில் அடங்கியிருந்தார். அவர் பெரிய ஜனக்கூட்டத்திற்கு போதித்தவர். வாய்ப்புகள் கிடைக்கும்போது எவ்வளவு தூரம் இருந்தாலும் திகையாமல் பயணம் செய்தவர். இவை அனைத்தும் மாறியது. அவரை தேடி ஒருவர் அல்லது இருவர் வந்தார்கள், அவர்களுக்கு மட்டும் போதித்தார். அவருடைய கடைசி காலத்தில் அந்த சிறையிலிருந்த நிருபங்களை எழுதுவதற்கு மட்டுமே அவருக்கு வாய்ப்புகள் கிடைத்தது. அந்த சிறையிலும் அவரால் செய்ய முடிந்த காரியங்களை பூரணமாக செய்தார். கிடைத்த காலத்தில் ஏற்ற வேலைகளை செய்து தேவனுடைய சித்ததை பூர்த்தி செய்தார்.

பொதுவாக மிகச் சிலரே, இளவயதில் செய்த வேலைகளை முதிர் வயதிலும் செய்கிறோம். நம்முடைய வாழ்க்கை முறைகள் மாறுபடுகிறது. அநேக வழிகளில் நாம் கட்டப்படுகிறோம், இன்னும் நாம் சிறையில் இருக்கிறோம் என்றும் சொல்லலாம். நேரங்கள் நம்முடைய சுகவீனங்கள்,வயதும் இதற்கு காரணமாகிவிடுகிறது. சில நேரங்களில் நம்முடைய பொருளாதார குறைவு சிறையாக இருக்கிறது. எல்லாருக்கும் ஏதோ ஒரு வகையில் நிறைகள் இருந்தாலும் பவுலை போல் நம்மால் முடிந்த வரைக்கும் தேவனுக்கேற்ற கிரியைகளை செய்யவேண்டும். நாம் தேவனுடைய வேலைகளை செய்யாமல் இருப்பதற்கு நம்முடைய இயலாமையை நாம் காரணம் காட்ட முடியாது.

மற்றொரு பாடம் என்னவென்றால் ஒரு காலத்தில் மிகக் கொடூரமாக இருந்த பவுல் குணங்களில் மிகவும் பக்குவமடைந்தார். தனிமைப்படுத்தப்பட்டு நிருபங்கள் எழுதிகொண்டிருந்ததினால் ஒரு வேளை அவர் மனம் சகோதரர்கள் மேல் உள்ள பாசம் அதிகரித்தது. அவருடைய முடிவை நெருங்க அன்பு இன்னும் உறுதிப்பட்டது. அவருடைய உடன் வேலைக்காரர்கள் மேலும், சக சகோதரர்கள் மேலும் அவர் இணையற்ற அன்பு வைத்திருந்தார்.

பவுல் தன்னுடைய நிருபங்களில் அடிப்படை சத்தியங்களை எழுதியிருப்பது மிக நேர்த்தியாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக சகோதர அன்பை கூட்டி வழங்கும் படி வலியுறுத்தி கொண்டு வருகிறார். இது எப்பொழுது நமக்கு ஒரு உறுதியான பாடமாக அமைகிறது. நாம் நம்முடைய ஆண்டவராம் இயேசுவையும்,அப்போஸ்தலனாகிய பவுலையும் நேசிக்கிறோம் ஆனால் பிலேமோனை சற்று பொறுத்து கொள்ளும்படி பவுல் கேட்டு கொண்டது போல இக்காலத்தில் அப்பிரயோஜனமானவர்களையும் நாம் நேசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதுவே கடைசி பாடமாக நமக்கு இருக்கிறது. ஒநேசிமு தவறு செய்திருந்தார், ஆனால் அதற்கு பின் நடந்த சம்பாஷனைகளை பார்க்கும்போது அவர் மனம் மாறியதை காணலாம். பிலேமோனின் மன்னிப்புக்கும், அன்புக்கும் பாத்திரராக இருந்தார். நாமும்இதை பின்பற்றுவோம்.

## பிலிப்பியர்க்கு எழுதின நிருபம்

அன்பான கடிதம் என்று இருந்தால் அது பவுல் பிலிப்பியர்க்கு எழுதின கடிதமாகத் தான் இருக்க வேண்டும். இதுவும் ரோமாபுரியிலிருந்து தான் எழுதப்பட்டது. இந்த சபையில் உள்ள சகோதர சகோதரிகளும் வடக்கு கிரேக்க பட்டணத்தில் உள்ளவர்கள் மேலும் பவுலின் இருதயத்தில் ஒரு இடத்தை பிடித்திருந்தார்கள். இது மக்கோதோனியாவில் ஸ்தாபித்த முதல் சபையாகும் ஒரு சொப்பணத்திற்கு கீழ்படிந்து அங்கு சென்றார் ஒரு அருமையான ஆவிக்குரிய ஸ்திரீயை அவர் ஒரு நதிக்கரையில் பார்த்த அன்று நடந்தது **[அப்போஸ்தலர் 16:13,14]** அங்கும் அவர் சிறையில் இருந்தார், ஒரு காவலர் மனம் திரும்பியதால் இவர் விடுதலை செய்யப்பட்டார். இந்தக் காலப் பகுதியில் கிரேக்கர்கள் அவர்களுடைய அன்பை மட்டும் அனுப்பாமல் பணம்,வெகுமதி,உடைகள் போன்றவைகளை தாராளமாக அனுப்பினார்கள். அவருடைய ஊழியத்திற்கு தோள் கொடுக்க அநேக காரியங்களை செய்தார்கள். தேவன் பவுலுக்கு சிறையில் செய்த இன்னும் மகத்துவமான காரியங்களை இந்த நிருபத்தின் முடிவில் வாசிக்கலாம். **[பிலிப்பியர் 4:21,22]** இந்த நிருபம் இராயனுடைய வீடு வரைக்கும் சென்றது என்று அறியலாம். **[பிலிப்பியர் 1 : 13]** பவுலின் சிறையிருப்பின் மூலம் தேவன் எவ்வளவு வியப்பான காரியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்.

## எபிரெயர்களுக்கு..................

எபிரெயருக்கு எழுதின நிருபத்திலும் ரோமாபுரியிலிருந்து வந்ததாக குறிப்புகள் இருக்கிறது. இந்த ஒரு கடிதம் வித்தியாசமாக இருக்கிறது. புறஜாதிகள் மத்தியில் அவர் அதிகமாக வேலை செய்ததினால் இப்படியிருக்கலாம். கடந்த 25 வருடங்களாக யூதர்களோடு போராடி வந்தார். ஆகவே இந்த கடிதத்திலே அநேக சம்பாஷனைகள்,நடைமுறைகள் யூதர்களின் பழைய ஏற்பாட்டின் அனுபவங்களையும் எழுதியிருக்கிறார். சங்கீதங்களையும், இஸ்ரயேலின் வரலாற்றையும் அவர் ஆசாரியத்துவத்தையும், பலிகளையும் உடன்படிக்கைகளையும் பற்றி அநேக காரியங்களை எடுத்துரைத்தார். இப்படியே கிறிஸ்துவுக்குள் உள்ள பாடங்களை அவர் நமக்கு கற்று கொடுத்தார்.

மனித உறவுகளின் மிக மேன்மையான விசுவாச வீரர்களின் பட்டியலை வரிசைபடுத்தி அதாவது ஆபிரகாம், சாராள்,மோசே, கிதியோன் சிம்சோன், தாவீது, தீர்க்கதரிசிகளை பற்றி எடுத்துரைத்து, நம்மை மீண்டும் நம்முடைய பரம அழைப்பில் கிடைத்த சிலாக்கியத்தையும் நமக்கு முன் வைத்திருக்கும் பந்தயத்தையும் நமக்கு வலியுறுத்துகிறார். ஒருவருக்கு ஒருவர் செலுத்த கூடிய அன்பை பற்றி சொல்லி கடிதத்தை முடிக்கிறார்.

**சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது. [எபிரெயர்13:1]**

**........உங்கள் விண்ணப்பங்களினாலே நான் உங்களுக்கு அநுக்கிரகிக்கப்படுவேனென்று நம்பியிருக்கிறபடியால், நாம் இருக்கும்படிக்கு ஓரிடத்தை எனக்காக ஆயத்தம்பண்ணும். [பிலேமோன் 22]**

இந்த வசனத்தை வாசிக்கும் போது சிறையிலிருந்து விடுதலை பெற பவுல் எதிர்பார்த்து கொண்டிருந்தார் என்பது புரிகிறது. பிலிப்பியர் உள்ள சபைக்கு எழுதுகையில் அன்றியும் நானே சீக்கிரத்தில் வருவேனென்று கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறேன். **[பிலிப்பியர்2:24]**

## இரண்டாம் முறை சிறையில்..........

அவர் முதல் சிறையிருப்பிலிருந்து விடுதலை பெற்று மக்கோதோனியாவில் உள்ளவர்களை கண்ட பின்பு தீத்துக்கு நிருபத்தை எழுதின பின்பு இரண்டாம் முறையாக அவர் ரோமாபுரி சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த முறை சற்று வித்தியாசமாக இருந்தது. நீரோ பேரரசனாக இருந்தான், அவன் ஒரு பைத்தியக்காரனாகவும் இருந்தான், கிறிஸ்தவர்களின் விசுவாசத்தினிமித்தம் அவர்கள் நெருக்கப்பட்டார்கள். அரசாங்கம் செய்யும் தவறுகளுக்கு கிறிஸ்தவர்களை பலியாக்கினான். சித்திரவதை செய்யப்பட்டார்கள்,சிலுவையில் அறையப்பட்டார்கள், காட்டுமிருகங்களால் கிழிக்கப்பட்டார்கள். விளையாட்டு மைதானங்களில் மிருகங்களுக்கு இறையானார்கள். தூண்களில் கட்டப்பட்டு எரிக்கப்பட்டார்கள்.

பவுல் சிறையில் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தார். அவருக்கு ஒருவரும் உதவி செய்ய வரவில்லை. விடுதலை பெறுவதற்கு எந்தவாய்ப்பும் இல்லை. அவருக்கு கடைசி நியாயத்தீர்ப்பு கிடைத்தது. அங்கிருந்த சபை கரைந்தது. மீதியிருக்கும் மக்கள் பாதாள சிறையில் தள்ளப்பட்டார்கள்.

## கடைசி கடிதம்

அநேக கடிதங்களை எழுத நேரம் இல்லாததினால்,அவர் ஒரே ஒரு கடிதம் எழுதினார். அவர் எழுதின இந்த கடிதமே கடைசி கடிதம் என்று அவர் அறியாமல் கூட இருந்திருக்கலாம்.அவர் நேசித்த குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு இந்த கடைசி நிருபத்தை எழுதினார். பவுல் நீரோ மன்னன் முன் இரண்டாம் முறை கொண்டுவந்த போது ரோமாபுரியிலிருந்து இந்த கடிதம் எழுதப்பட்டது என்று குறிப்பேடுகள் கூறுகிறது.

அவருடைய அன்பை வெளிப்படுத்தின கடைசி கடிதமாக இருக்கிறது பவுலுக்கு தனிப்பட்ட ஒரு குடும்பம் இல்லை ஆகவே சகலமும் சபைக்குறியதாக இருந்தது. ஆகவே தீமோத்தேயுவை தன்னுடைய நேச குமாரன் என்று அழைத்தார். தன்னுடைய கரங்களை தீமோத்தேயுவின் மேல் வைத்து நற்கிரியைகளை தொடங்கி வைத்தார். **[ II தீமோத்தேயு 1:6]**

பவுலை சந்தித்தது முதல் தீமோத்தேயு அநேக யுத்தங்களையும், அடிகளையும் உபத்திரவங்களையும் கண்டார். கடினமானவைகளை சகிக்கவும் சட்டத்திற்கு உட்பட்டு வாழவும், கட்டுபாடோடு ஜீவிக்கவும்,கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கவும் தேவனுடைய வார்த்தையை பகுத்து போதிக்கவும்,இளவயது மாயைக்கு விலகவும் (பவுலின் கண்களுக்கு அவர் இன்னும் இளைஞனாக இருந்தார்) நீதி,விசுவாசம்,சமாதானம்,போன்றவைகளை தேடவும் மேலும் ,மதியீனமான கேள்விகளை தவிர்க்கவும் ,பவுல் தீமோத்தேயுவை ஊக்குவித்து புத்தி சொன்னார். மரிக்கக்கூடிய ஒரு அப்போஸ்தலனிடமிருந்த ஆவிக்குரிய மகனுக்கு எப்படிப்பட்ட ஒரு அறிவுரைகள் பாருங்கள். பவுல் முற்றிலுமாக கைவிடப்பட்டார். ஏனென்றால்,

**தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து,என்னைவிட்டுப்பிரிந்து,தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான், கிரேஸ்கே கலாத்தியா நாட்டிற்கும்,தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள். [II தீமோத்தேயு 4:10]**

வைத்தியராகிய லூக்கா மட்டும் அவரோடு இருந்தார்,மற்ற அனைவரும் தூர தேசம் சென்று விட்டார்கள்.

மரணம் அவரை நெருக்கியது பவுல் நிச்சயமாக முதல் முதலில் இயேசு கிறிஸ்துவை சந்தித்ததை பற்றி நினைத்திருக்கவேண்டும். தமஸ்குவிற்கு போகும் வழியில், இயேசுவை கண்ட விதமும்,அதற்கு பின்பு அவர் அனனியாவை சந்தித்த காரியங்களையும் **[அப்போஸ்தலர் 9ம் அதிகாரம்]** நினைத்து கொண்டிருக்கவேண்டும். அவர் கற்று கொள்ளக்கூடிய வருடங்களாக இருந்தது, அதற்கு பின் அவருடைய ஊழியம் தொடங்கியது. அங்கு தான் தீமோத்தேயுவை சந்தித்தார். அவர், எதிர்ப்புகளையும்,கப்பல் சேதங்களையும் அடிகளையும் கல்லெறிகளையும் அனுபவித்தார்கள்.ஆனாலும் கிறிஸ்துவ அன்பில் கட்டப்பட்டு, போதிக்கிற சந்தோஷம் அதிகரித்து மகிழ்ச்சி அடைந்தார்.

**கடைசியாக, ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன் நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன்,விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். [ II தீமோத்தேயு 4:6,7]**

தனித்தன்மை வாய்ந்த பவுலின் விசேஷமான கிறிஸ்துவ அனுபவங்களின் முழு விவரத்தை எழுதுவது முடியாது. அவர் விட்டு சென்றிருக்கும் மாதிரி மிகவும் உயர் நிலை கொண்டதாக இருக்கிறது. ஆகவே அவருடைய இடத்தை ஒருவரும் எட்டிபிடிக்க முடியாத அளவுக்கு இருக்கிறது.

தேவன் நம்மில் சிலரை அந்த இடத்தில் வைத்து, புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும், இஸ்ரயேலுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க அனுமதிக்கலாம். இன்றும் பலர் தீகிக்கு,ஒநேசிமு,பிலேமோன் பெற்ற இடத்தை பெறுவார்கள். சிலர் தீத்து,தீமோத்தேயு,லூக்கா,பெற்ற இடத்தை பெறுவார்கள். இன்னும் பலர் பவுலுக்கு உதவி செய்த பிலிப்பியர் சபையில் உள்ள மற்றவர்கள் பெற்ற இடத்தை பெறுவார்கள். அனைவரும் பவுலை விட சற்று குறைவாகத் தான் பணியாற்றினார்கள். எல்லாம் வேறுப்பட்டது. எந்த இடத்திற்கு யார் சிறப்பாக பணியாற்றுகிறார்களோ அவர்களை அந்த இடத்திற்கு தேவன் அவர்களை பொருத்துவார். அவர்கள் சற்று குறைவான வேலைகள் செய்தாலும்,அனைவரும் பவுலால் கற்பிக்கப்பட்டவர்கள். நாம் அவருடைய நிருபங்களை பெற்றிருக்கிறோம். ஆகவே அவருடைய விசுவாசத்தையும் நம்பிக்கையை நாம் பெற்று கொள்ளலாம்.

இப்படிப்பட்ட அநேக உபத்திரவங்கள், பாடுகள் மத்தியிலும் அப்போஸ்தலனாகிய பவுல் பரலோக தந்தையின் மேல் வைத்த நம்பிக்கையையும்,ஆண்டவராம் இயேசுவின் மேல் வைத்த நம்பிக்கையையும்,சிறிதளவும் இழக்கவில்லை. இந்த கடிதத்தின் முடிவில் கூட அவர் ரோம சிறையில் இருப்பதாக குறிப்பிடுகிறார். **கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார். அவருக்கு சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உன்ஆவியுடனே கூட இருப்பாராக,கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென். [ II தீமோத்தேயு 4:18,22]**

# பவுலின் ஆபத்தான பயணம்

## ரோமபுரிக்கு கப்பல் பயணம்

**அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன், ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும், [ II கொரிந்தியர் 11:26]**

உண்மையில் சொல்லபோனால் ரோமாபுரிக்கு பயணம் சென்ற பவுல்தன் வீட்டுக்கு சென்றாலும் அவருடைய பூர்வீகமான தர்சு பட்டணத்திற்கோ, அந்தியோகியாவில் உள்ள தன்னுடைய ஆவிக்குரிய சகோதரர்களின் வீட்டிற்கோ அல்லது எபேசுவுக்கோ அவர் செல்லாமல், ஒரு சிறைக்கு அதாவது பூமிக்குரிய இந்த ஆன்மீக பயணத்தில் தன்னுடைய பொறுப்புகளை முடித்து என்றுமே ஆண்டவருடன் இருப்பதற்கு அங்கு சென்றார்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இப்படிப்பட்ட ஒரு இலக்கை நோக்கி வாழ்நாள் முழுவதும் நம்பிக்கையோடு பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். பவுலின் இந்த இறுதி பயணத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய பயணத்திலும் பரலோக இளைப்பாறுதலை அடைய வாஞ்சிப்பவர்களுக்கு அநேக ஒப்புமையான பாடங்கள் அடங்கியுள்ளது.

### செசரியாவிலிருந்து சீதோனுக்கு......(அப்போஸ்தலர் 27:1-3)

பவுலை ரோமாபுரிக்கு அனுப்ப வேண்டும் என்ற ஆதாரத்தை பெஸ்து கையொப்பமிட்டிருந்தான். இந்த ஒரு தீர்மானத்தைதேவன் முன் திட்டமிட்டிருந்தார். அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று –பவுலே,திடன் கொள்,நீ என்னைக்குறித்து எருசலேமில் சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்க வேண்டும் என்றார். **[அப்போஸ்தலர் 23:11]**

அதே போல் கிறிஸ்தவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கை தங்களை சுற்றி இருக்கும் விரிவான உலகத்தை நோக்கியிருந்தாலும், அவர்கள் முன் தீர்மானித்தபடி அவர்களுடைய நீதியான வழிகளும் பயணங்களும் அன்பான தேவனுடைய கட்டுபாட்டின் கீழ் இருக்கிறது என்று நாம் அறிந்து கொள்ளலாம் **[ரோமர் 8: 28]**

பவுலும் மற்றும் கைதிகளும் ஜீலியஸ் என்னும் நூற்றுக்கு அதிபதியின் கட்டுப்பாட்டில் இருந்தார்கள். இவன் அவர்களை தயவோடும்,கிருபையோடும் நடத்தினான். இயற்கையாக அவன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களினால் இவன் இப்படி நடந்திருக்கவேண்டும். அவன் தாமே ஒரு விடுதலை பெற்ற வேலைக்காரனாக இருந்திருக்க வேண்டும் என்று சில குறிப்புகள் உள்ளது. இவன் ஜீலியஸ் குடும்பத்திலிருந்து விடுதலை பெற்றதினால் அந்த குடும்பத்தின் பெயரை அவன் சூட்டி கொண்டதாக அலெக்சந்திரியா பதிவுகள் குறிப்பிடுகிறது.

மற்றொரு விதத்தில் நாம் பார்க்கும்போது, பவுலின் தாழ்மையான குணங்களும் செயல்பாடுகளும் அவரை சந்தித்த மற்ற எல்லா ரோம அதிகாரிகளான செர்கியுபவுல் **[அப்போஸ்தலர்13:6-12]**, கல்லியோன் **[அப்போஸ்தலர்18:12-17)** பேலிக்ஸ் **[அப்போஸ்தலர் 24:22,23]** மேலும் பெஸ்துவும் **[அப்போஸ்தலர் 25:12-14]** கனத்தையும் மரியாதையையும் பெற காரணமாக அமைந்தது. பவுல் தன்னுடைய பிரயாணத்தில் லூக்கா,அரிஸ்தர்க்கு இன்னும் சில சகோதரர்களோடு கூட மட்டும் அனுமதிக்காமல் சீதோனில் உள்ள சபை மக்களையும் சந்திக்க அந்த அப்போஸ்தலனுக்கு ஜீலியஸ் விடுதலை அளித்தான். **[அப்போஸ்தலர் 27:3]** வரும் சோதனைகளை எதிர்நோக்க இப்படிப்பட்ட ஆவிக்குரிய சந்திப்பு பவுலுக்கு நிச்சயமாக ஒரு புத்துணர்ச்சியை தந்திருக்க வேண்டும். பலியின் ஜீவியத்தில் நாமும் கூட நெருக்கமான பாதையில் செல்லும் போது நமக்கும் இப்படிப்பட்ட சகோதர ஐக்கியம் பெற்று நம்முடைய சிந்தையையும் நோக்கத்தையும் உறுதிப்படுத்துவதை நீங்கள் நிச்சயமாக உணர்வீர்கள் அல்லவா?

முதல் நாளில் அமர்ந்த கடலில் கப்பல் நிதானதாக சீதோன் கரையை எட்டியது. கிறிஸ்தவர்கள் பொதுவாக தங்களுடைய ஆவிக்குரிய பயணத்தை தொடங்கும்போது, வரக்கூடிய சோதனைகளையும் பிரச்சனைகளையும் எதிர் நோக்குவதற்காக அமைதியாகவும் நிதானமாகவும் செல்லுவது வழக்கம்.

### சீதோனிலிருந்து மீறாவுக்கு............(அப்போஸ்தலர் 27:4,5)

எதிர் காற்று சீறி வீசியதால் கப்பல் வேறு திசையை நோக்கி செலுத்தப்பட்டது. சீதோனிலிருந்து மேற்கு புறமாக உள்ள ஆசியா நாட்டிற்கு போகவேண்டியவர்கள்,சிலிசியா,பம்பிலியா நாடுகளின் கடல் வழியாய் லீசியா நாட்டு மீறாப்பட்டணத்தை வந்து சேர்ந்தார்கள். திறந்த வெளி மத்தியதரை கடலில் வேகமான காற்றுகளால் அடிக்கப்பட்ட அலைகளிலிருந்து பாதுகாப்படைய வட திசையில் உள்ள சீப்புரு தீவின் ஒதுக்கிலே கப்பலை செலுத்தினார்கள்.

இது போல் நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையின் பயணத்தில் கொந்தளிக்கும் கடலை நாம் எதிர் நோக்கும் போது, அதை தாங்க திராணி அற்ற நம்மை தப்புவிக்க நம்முடைய வழியை மாற்றி அமர்ந்த தண்ணீர் அண்டை நடத்துகிறார்.

## மீறாவிலிருந்து கிரேத்தா..... (அப்போஸ்தலர் 27:6-11)

ரோமாவுக்கு செல்ல வேண்டிய கைதிகள் மீறாவில் அலெக்சந்திரியா பட்டணத்துக் கப்பலில், மாற்றப்பட்டார்கள். எகிப்தில் உள்ள அலெக்சந்திரியா, மிக பெரிய கப்பல்களுக்கு பிரபலமான இடமாக இருந்தது. சில கப்பல்கள் 250 அடி நீளமாகவும் இருந்தது. இந்த கப்பலானது அதிக அளவில் இத்தாலியாவுக்கு கோதுமை எடுத்து சென்றது. **[அப்போஸ்தலர் 27:38]**

அமைதியான காற்று இவர்களை பொறுமையோடு பிரயாணத்தை தொடர கட்டாயப்படுத்தியது மிகுந்த வேதனையோடும் வருத்தத்தோடே கினீது பட்டணத்திற்கு எதிரே வந்து, சல்மோனே ஊருக்கு எதிராய்க் கிரேத்தாதீவின் ஒதுக்கில் ஓடினார்கள். அதை வருத்தத்தோடே கடந்து,நல்ல துறைமுகம் என்னப்பட்ட ஒரு இடத்திற்கு வந்தார்கள். லசேய பட்டணம் அதற்குச் சமீபாயிருந்தது. அங்கு ஒரு யூத உபவாச நாளை அனுசரித்தார்கள்.(அது ரோஷஹானா என்ற யூத வருடத்தில் அக்டோபர்,1ஆம் தேதியாக இருக்கவேண்டும்.) அதாவது இவர்கள் சமமான இரவு பகல் காலமாகிய வழக்கமான புயல் மத்திய தரை கடலை அலைக்கழிக்கும் போது வந்து சேர்ந்திருக்கவேண்டும்.

இந்த அழிவை எதிர் நோக்கிய பவுல், சீதோஷணம் பயணத்திற்கு சாதகமாக மாறும் வரைக்கும் காத்திருக்கும்படி அறிவுரை சொன்னார். இதை குறித்து கனித்தவைகள் நிச்சயமாக தன்னுடைய சொந்த கருத்தாக இருக்கவேண்டும் என்கிறார்,ஏன் என்றால் இப்படிப்பட்ட அனுபவங்களை அவர் முன்னதாகவே பெற்றிருந்தார் என்பதை நாம் வசனங்களை வாசித்து அறியலாம் **[II கொரிந்தியர்11:25]** அவர் அடிக்கடி கப்பல் பிரயாணங்களை மேற்கொண்டதாலும் அதனால் அநேக கப்பல் மாலுமிகளை அவர் சந்தித்ததினாலும் இந்த சீதோஷண நிலைகளை குறித்து அவர் நன்கு அறிந்திருக்க வேண்டும். (Reprints. p 3204) எப்படியிருந்தாலும் அவர்கள் எடுக்கும் முடிவுகளின் நிமித்தம் படப்போகிற பாடுகளையும் அறியாமல் பயணத்தை தொடர்வதற்கு முடிவு செய்யப்பட்டது.

இவைகளை நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கைக்கு எடுத்த கொண்டால் நம்மை அறியாமல் சில கடினமான அல்லது இக்கட்டான பிரச்சனைகளை நோக்கி செல்லுவோம். திடீர் என்று நம்முடைய ஆவிக்குரிய பயணம் குழியில் விழுந்தது போல்,எந்த விதமான முன்னேற்றமும் இல்லாமல் எல்லாம் மடிந்தது என்ற முடிவுக்கூட நாம் வந்துவிடலாம். நமக்கு வரும் உபத்திரவங்களை காட்டிலும் படிப்படியாக வரும் செழிப்பான முன்னேற்றங்கள் மிகவும் அபாயமானது. எப்படியிருந்தாலும் நம்முடைய வாழ்க்கையில் வரும் எதிர்காற்றுகளை நாம் நிலைத்து நிற்க நமக்கு போதுமான பலமும் கொடுக்கப்படுகிறது. ஒரு கிறிஸ்தவனுடைய நீதியின் வஸ்திரத்தை தெய்வீகமாக நெய்வதற்கு வளைந்து கொடுப்பது மிக அவசியமாக இருக்கிறது. சாலொமோன் ஞானி எழுதும்போது

**வாடையே, எழும்பு, தென்றலே,வா,கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு, என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக. [உன்னதப்பாட்டு 4:16]**

வரக்கூடிய பயணத்திற்கு தங்களை ஆவிக்குரிய விதத்தில் ஆயத்தம் பண்ணின பின்பு கடலின் சீற்றம் பயமுறுத்தினாலும், நிகழ இருக்கும் அபாயத்தை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும் கடமையை ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் பெற்றிருக்கிறார். **[எசேக்கியல்3:18-20]**

பவுல் சீதோனில் உள்ள தன்னுடைய சிநேகிதர்களை பார்க்க அனுமதிக்கப்பட்டாரே தவிர கிரேத்தாவில் உள்ள தன்னுடைய சகோதரனாகிய தீத்துவையும் மற்ற சகோதரர்களையும் பார்க்க அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. **[தீத்து 1:5]** அவ்வப்போது இந்த உலகத்தில் சபை மக்களுக்கு அதாவது ஒரே சிந்தையுடையவர்கள் சந்திக்க வாய்ப்புகள் கிடைக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை ஒருவரும் இழந்து விடக் கூடாது. வாய்ப்புகளை தவற விட விரும்பாத அப்போஸ்தலர் ***கோர்டீனா*** பட்டணமானது யூதர்களை அதிகமாக கொண்ட பட்டணமாகவும் தீத்து சுவிசேஷம் அறிவிக்கும் இடமாகவும் இருந்தது.

## கிரேத்தா தீவிலிருந்து கிலவுதா........ (அப்போஸ்தலர் 27:12-17)

அந்தத் துறை முகம் மிக சிறியதாக இருந்தபடியால் அவ்விடத்தை விட்டுத் தென்மேற்கையும் வடமேற்கையும் நோக்கியிருக்கும் கிரேத்தா தீவிலுள்ள துறைமுகமாகிய பேனிக்ஸ் என்னும் இடத்தில் சேரக்கூடுமானால் சேர்ந்து,மழைகாலத்தில் தங்கும்படி அநேகம் பேர் ஆலோசனை சொன்னார்கள்.

தென்றல் மெதுவாயடித்தபடியால்,தாங்கள் கோரினது கைகூடிவந்ததென்று எண்ணி,அவ்விடம் விட்டுப் பெயர்ந்து கிரேத்தாதீவுக்கு அருகில் கப்பலை செலுத்தினார்கள். கொஞ்ச நேரத்துக்குள்ளே யூரோக்கிலிதோன் என்னுங்கடுகாற்று அதில் மோதிற்று கப்பல் அதில் அகப்பட்டுக்கொண்டு காற்றுக்கு எதிர்த்துப் போகக்கூடாதபடியினால் காற்றின் போக்கிலே கொண்டு போகப்பட்டார்கள். அப்படிக் கிலவுதா என்னப்பட்ட ஒரு சின்ன தீவின் ஒதுக்கிலே வருகையில் வெகு வருத்தத்தோடே படவை வசப்படுத்தினார்கள். தூக்கியெடுத்த பின்பு, பல உபாயங்கள் செய்து, கப்பலைச் சுற்றிக் கட்டி, சொரிமணலிலே விழுவோமென்று பயந்து, பாய்களை இறக்கி, இவ்விதமாய்க் கொண்டு போகப்பட்டார்கள்.

இதன் மூலம் நாம் கற்று கொள்ளுவது என்னவெனில் நமக்கு கிடைக்கின்ற சிறு உணர்த்துதலானாலும் அதை உதாசினப்படுத்த கூடாது. எதிர்பாராத மாற்றங்கள் உருவான சந்தர்ப்ப சூழ்நிலைகளில் ஆவிக்குரிய வாழ்வில் ஏற்பட்ட

சூறாவளிகளை ஆராய்ந்து நிதானிக்க சமயம் வாய்க்கும்போது அதற்கு ஆயத்தப்படுவது என்பது ஞானமான செயலாகும்.

எப்படியிருந்தாலும் நம்முடைய வாழ்க்கையில் வரும் சீறி வரும் புயல் காற்றுகளை நாம் எதிர்கொள்ள ஆயத்தமில்லாமல் போனாலும்,நாம் பதராமல் ஆண்டவர் மேல் விசுவாசம் வைத்து ஆவிக்குரிய பெலத்திற்காக காத்திருக்கலாம். அங்கு புயல் காற்று வேகமாக வீசியபோது அங்கு சிறு தீவுகளுக்கு சென்று தங்களுடைய ஜீவன் தப்பவைத்தது போல, நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்திலும் நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளை சந்திக்குமுன் நம்முடைய ஜீவனை தப்புவித்து வாழ்வதற்குரிய நம்பிக்கையை இப்படிப்பட்ட சிறு தீவுகள் நமக்கு உதவியாக இருக்கிறது. தேவனுடைய ஆசீர்வாதங்கள் எவ்வளவு சிறிதாக இருந்தாலும்சரி நாம் நன்றியோடு அவரை துதிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

அவர்கள் பயந்த புதை குழி,கார்த்தேஜ், சைரீநாசியா அதற்கு இடையில் இருந்த ஆப்பிரிக்கா கடலோற பகுதியாகும். இந்த ஆபத்து நிறைந்த மணல் திட்டுக்கள் சகாராவிலிருந்து மத்திய தரை கடலுக்குள்ளாக வீசும் வட திசை காற்றுகளால் உருவானது. இந்த மாலுமிகளை போல கிறிஸ்தவர்களும் பூமியின் மணல் திட்டுகள் போன்ற **பொழுது போக்கு, பொருளாசை,** இவைகளினால் இழுக்கப்பட்டு தேவையற்ற உலக காரியங்களில் ஈடுபடாமல் பார்த்து கொள்வது நல்லது.

### கிலவுதாவிலிருந்து மெலித்தா.......... (அப்போஸ்தலர் 27:18-44)

இந்த பயங்கரமான சூழ்நிலையிலிருந்து தங்களை தப்புவிக்க 450 மைல்கள் கடலை தாண்டி இத்தாலியாவுக்கு செல்ல பயணப்பட்டார்கள். ஆனால், புயல் காற்றின் சீற்றம் மிகவும் அதிகாரித்ததினால் அனைவரும் பயந்தார்கள். அவர்கள் பயணத்தை துவங்கும்போதே அபாயத்தில் இருப்பதை அறிந்து கொண்டார்கள். இரண்டாம் நாள் கப்பலில் இருந்த வணிக சரக்குகளை வெளியே எறிந்தார்கள். அடுத்தநாள் கப்பலுக்கு தேவையான அநேக கருவிகளை வெளியே எறிந்தார்கள். புயல் அமருவதற்குமுன் அவர்கள் முக்கியமான சரக்கான கோதுமையைக் கூட கடலில் எறிந்தார்கள்.

நாளுக்கு நாள் அவர்கள் நெருக்கடியான நிலையை எட்டினார்கள். அவர்களுடைய பாதையை கணிக்க சூரிய ஒளியோ,இரவில் நட்சத்திரங்களின் வெளிச்சமோ காணப்படவில்லை. அனைவரும் நிச்சயமாக மரித்து போவோம் என்று நினைத்தார்கள். இந்த ஒரு இயலாத சூழ்நிலையை, சாதகமாக்கிக் கொண்டு பவுல் சத்தியத்தை குறித்து சாட்சி கொடுத்தார். 276 பேர்களின் நடுவில் புயல் நின்று,கிரேத்தா தீவில் தன்னுடைய எச்சரிப்பை ஏற்று கொள்ளாததை முதலில் சுட்டிகாட்டினார். அதற்கு பின் பவுலின் நிமித்தமாக அனைவரையும் பத்திரமாக ரோமாவுக்கு செல்லுவார்கள் என்று தேவன் தன்னுடைய துாதன் மூலமாக முன் அறிவித்ததை சொன்னார். இதை கேட்டவர்கள் எவ்வளவு ஆச்சரியப்பட்டார்கள்,அவர் ஒரு நீதிமன்றத்திற்கு போகும் கைதியை போல் பேசாமல்,தேவனிடத்திலிருந்து இராயனுக்கு முக்கியமான செய்தி கொண்டுவந்தவர் போல் உணர்ந்தார்கள்.

இந்த நம்பிக்கை அற்ற சூழ்நிலையில் அனைவரும் சந்தேகத்துடன் அவர் அவருடைய தெய்வங்களை நோக்கி உபவாசித்து ஜெபித்து கொண்டிருந்தார்கள். இந்த ஒரு வாய்ப்பையும் பவுல் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு விசுவாசத்தை நடை முறைப்படுத்தினார். உபவாசத்தை விட்டுவிட்டு அனைவரையும் புசிக்கும் படி வேண்டினார். அவர் தாமே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி பிட்டு புசித்தார். அதற்கு பின்பு அனைவரும் புசித்தார்கள் அனைவரும் புசித்து விசுவாசத்திலும் பெலத்திலும் திடப்பட்டார்கள்.

இவர்கள் இவ்வளவு முயற்சி எடுத்த போதிலும் கப்பலின் குறுக்கு பகுதி உடைந்தது. படகு ஒரு பெயர் தெரியாத மணல்குவியலில் உடைந்தது.நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறவும்,மற்றவர்கள் சிலர் பலகைகள் மேலும் , சிலர் கப்பல் துண்டுகள் மேலும் போய்க் கரையேறினார்கள். இப்படியாக அனைவரும் தப்பிக் கரை சேர்ந்தார்கள்.

மீண்டுமாக இந்த சம்பவங்களில் நமக்கு விலையேறப்பெற்ற பாடங்களை கற்று தருகிறது. சீற்றமடைந்த புயல் காற்று நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் வீசும் போது, முதலில் நம்முடைய உலகப்பிரகாரமான சுமைகளை வெளியே எறிய வேண்டியவர்களாக இருக்கிறோம்,இரண்டாவதாக இந்த உலகத்தில் நாம் கட்டப்பட்ட நம்முடைய தேவையற்ற பந்தங்களை அறுத்து எறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்னும் தேவைப்பட்டால் நம்முடைய விலை மதிப்புள்ள உலக சரக்குகளை அதாவது ஜீவனுக்காக இருக்கும் அடிப்படைத் தேவைகளையும் கூட விட்டுவிட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்முடைய வாழ்க்கையில் வரும் மோசமான சூழ்நிலைகளை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு,நமக்குள் இருவரும் சமாதானத்தையும், விசுவாசத்தையும் நாம் உறுதிப்படுத்தி கொள்ளவேண்டும். நம்முடைய பூமிக்குரிய பணிகள் முடிவு அடையும் வரைக்கும் எந்த தீங்கும் நம்மை அனுகாமல் தேவன் காத்து கொண்டிருக்கிறார் என்று நாம் நம்ப வேண்டும். இன்னும் சொல்ல போனால் நம்மை சுற்றியிருக்கும் அனைவரும் நமது நிமித்தமாக நிச்சயமமாக நித்தியமான அழிவை அடையமாட்டார்கள் என்று நாம் உறுதியளிக்கலாம்.

## மெலித்தாவில்.........(அப்போஸ்தலர்28:1-10)

இந்த தீவில் உள்ளவர்கள் லத்தீன்,அல்லது கிரேக்க பாஷைகளை பேசாமல் இருந்தாலும் வந்தவர்களை அன்போடு உபசரித்தார்கள். முதலில் நனைந்து குளிரில் இருப்போரை சூடாக்க அனல் மூட்டினார்கள். அவர்களுக்கு உதவியாக பவுல் கட்டைகளை அதின் மேல் போட்டபோது ஒரு விஷம் நிறைந்த விரியன் பாம்பு அவரை கடித்தது. அவருக்கு எந்த விதமான தீங்கும் நேரிடவில்லை என்று அறிந்த போது, பவுலை ஒருதேவனாக கருதினார்கள்.

அங்கு புபிலியு என்னும் பேர்கொண்டவன் ஆளுனராக இருந்தான். பவுலையும் அவரை சேர்ந்தவர்களையும் மூன்று நாட்கள் தன்னுடன் தங்கும்படி கேட்டு கொண்டான். அங்கு சென்ற பவுல் வியாதிப்பட்டிருந்த புபிலியுவின் தந்தையை குணப்படுத்தினார். இந்த செய்தி பரவியது. அந்த தீவிலிருந்து அநேக வியாதியஸ்தர்கள் பவுலை தேடி வந்து குணம் பெற்றார்கள். இதன் விளைவாக அந்த தீவில் உள்ளவர்கள் பவுலுக்கு அதிகமான கனத்தையும் மதிப்பையும் கொடுத்தார்கள். மற்றொரு அலெக்சந்திரியா கப்பலில் இத்தாலியா செல்லுவதற்கு மூன்று மாதங்கள் ஆனது.

பவுல் புபிலியுவுடன் கழித்த மூன்று நாட்கள், அநேக சம்பவங்களை அடையாளப்படுத்தலாம். ஏன் என்றால் மூன்று என்று வேதாகமத்தில் அநேக இடங்களில் நாம் காணலாம். கிறிஸ்துவின் முதல் வருகையிலிருந்து மூன்றாவது ஆயிரவருடமான கிறிஸ்துவின் ராஜ்யம் நமக்கு நினைவுக்கு வரலாம். அந்த இராஜ்யத்தில் மனுகுலம் அனைவரும் குணமாக்கப்படுவார்கள். கிறிஸ்துவோடு கூட இந்த குணமளிக்கும் காரியங்களை செய்பவர்களை விரியன் பாம்பாகிய சாத்தான் கடித்தாலும் எந்த தீங்கும் அவர்களை அணுகாது.

## மெலித்தாவிலிருந்து ரோமாவுக்கு........ (அப்போஸ்தலர் 28:11-17)

அதற்கு பின் அவர்களின் பயணம் மிக சுருக்கமாக இருந்தது. அலெக்சந்திரியா பட்டணத்து கப்பலிலே புறப்பட்டார்கள் சீரகூசா பட்டணத்தை சேர்ந்து, அங்கே மூன்று நாள் தங்கினார்கள். அவ்விடம் விட்டு சுற்றியோடி, ரேகியுதுறைமுகத்துக்கு வந்து சேர்ந்து, மறுநாளில் தென்றற் காற்றெடுக்கையில் புறப்பட்டு இரண்டாம் நாள் புத்தேயோலிபட்டணத்திற்கு வந்து அங்குள்ள சகோதரரைக் கண்ட பின் ஏழு நாள் அங்கு தங்கியிருந்து, அதற்கு பின் ரோமாவுக்கு சென்றார்கள்.

புத்தேயோலிபட்டணத்தில் ரோமர்கள் பவுலிடம் அதிக கரிசனையோடு நடந்து கொண்டார்கள். சகோதரர்களுடன் ஒரு வாரம் தங்கியிருக்க அனுமதி கொடுத்தார்கள். பவுல் தங்கியிருக்கும் செய்தி ரோமாவில் எங்கும் பரவியது. அங்குள்ளவர்கள் 50 மைல்களிலிருந்து பவுலை சந்திக்க வந்தார்கள். சிலர் அப்பியுபுரம் வரைக்கும், சிலர் மூன்று சத்திரம்வரைக்கும்,அவரோடு வந்தார்கள். இந்த சந்திப்புகள் பவுலுக்கு எவ்வளவு விலையுயர்ந்ததாக இருந்திருக்கும்.

அதே போல் சபை மக்கள் தங்களுடைய ஓட்டத்தை முடிக்கையில் ஒரு மனப்பட்ட சகோதரர்களை சந்திக்க வாய்ப்புகள் கிடைப்பது எவ்வளவு புத்துணர்வாக இருக்கும். இப்படி ஒன்று கூடி வருவதையும்,ஐக்கியப்பட்டு சேருவதையும் நமக்கு மிக முக்கியமாக இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட வாய்ப்புகளை நாம் தவிர்க்காமல் இருக்கவேண்டும் என்று பவுல் நம்மை எச்சரிக்கிறார்.

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம், நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப்புத்திசொல்ல வேண்டும். [எபிரெயர் 10:25]**

**இதோ சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? [சங்கீதம்133:1]**

**நாம் விசுவாசிகளான போது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. ரோமர் 13:11**



# அறுவடையின் முடிவு

## அப்போஸ்தலர் 27ஆம் அதிகாரமும் அதில் நீங்களும்

**"நாங்கள் இத்தாலியா தேசத்துக்குக் கப்பல் ஏறிப் போகும்படி தீர்மானிக்கப்பட்டபோது, பவுலையும் காவலில் வைக்கப்பட்டிருந்த வேறு சிலரையும் அகுஸ்து பட்டாளத்தைச் சேர்ந்த யூலியு என்னும் பேர்கொண்ட நூற்றுக்கு அதிபதியினிடத்தில் ஒப்புவித்தார்கள் . [அப்போஸ்தலர் 27:1]**

**27 ஆம் அதிகாரம்** முழுவதும், வரலாற்றை பற்றிய விமர்சனங்களும், பயணத்தின் விவரங்களாக இருந்தாலும், நம்முடைய நாட்களின் யுகத்தின் முடிவில் நடப்பவைகளின் காரியங்களை உவமைகளாக அல்லது திருஷ்டாந்தாங்களாக இந்த **27 ஆம் அதிகாரத்தில்** உள்ளளவைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது பவுலின் பயணங்களில் அவர் அனுபவித்தவைகளும்,அவருடைய வாழ்க்கையின் கடைசி நாட்கள் அவர் ரோமாபுரியில் இருந்த நாட்களிலும் நடந்தவைகளும் லவோதோக்கியா சபையில் உள்ளவர்களுக்கு அநேக கருத்துள்ள பாடங்கள் அமைந்துள்ளது. இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து,கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன். **[கொலோசெயர்1:24]** நம்முடைய 21 ஆம் நூற்றாண்டில் சமுதாயத்தில் நடக்கும் காரியங்களும் கடந்த காலத்தில் செழிப்பாக உயர்ந்த ரோம பேரரசையும் ஒப்பிட்டு பார்க்கும் போது, அநேக ஒப்புமையான கருத்துள்ள பாடங்கள் அடங்கியுள்ளது. இதில் சர்வாதிகாரமும் ஒன்றாகும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் சுவிசேஷ யுகம் முடிவு அடையும். **[II தீமோத்தேயு3:1-7, II பேதுரு 3:3,4 I யோவான் 3ம் அதிகாரம் ]**

சவுலை பற்றி சம்பாஷிக்கும் போது ஆண்டவர் அனனியாவிடம்.... நீ போ, அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரயேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். ஏறக்குறைய 30 வருடங்கள் சென்ற பின்பு இந்த ஒரு வேலை நிறைவேற்ற காலம் வந்தது. பவுல் வாழ்க்கையின் கடைசி தீர்ப்புக்காக இராயனின் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டார்.

அந்த சூழ்நிலையில் புறமதஸ்தினராகிய ரோம ஜனங்களுக்கும் முன் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை பற்றி அறிவிக்கும் ஒரு பொன்னான வாய்ப்பு கிடைத்தது.

**அப்போஸ்தலர் 27:1** ஆம் வசனத்தில், நாங்கள் இத்தாலியா தேசத்துக்குக் கப்பல் ஏறிப் போகும்படி தீர்மாணிக்கப்பட்ட போது, பவுலையும் காவலில் வைக்கப்பட்டிருந்த வேறு சிலரையும் அகுஸ்து பட்டாளத்தைச் சேர்ந்த யூலியு என்னும் பேர்கொண்ட நூற்றுக்கு அதிபதியினிடத்தில் ஒப்புவித்தார்கள். அரிஸ்தர்க்கு எபேசு பட்டணத்தில் செய்த ஒரு வேலையை நாம் நிச்சயமாக மெச்சி கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். **[அப்போஸ்தலர் 19:29,30]** இப்படிப்பட்ட வேலைகளுக்கு தேவன் எப்படிப்பட்ட ஒரு குழுவை நியமித்திருந்தார் பாருங்கள் அது போல நமக்கும் தேவன் நமக்கு நியமித்த வேலைகளுக்கு தேவையான எல்லாவற்றையும் செய்ய அவர் வல்லவராக இருக்கிறார்.

### பயணம்

குறிப்பிடப்பட்டவைகளில் நாம் அவர் சென்ற வழிகளை கண்டுபிடிக்க முடிகிறது. அவர் இறங்கின ஒவ்வொரு துறை முகமும் தங்கின ஒவ்வொரு இடமும் நமக்கு பரிச்சயமுள்ளதாகவே இருக்கிறது. கிரேக்கர்களின் இலக்கியங்களோ,ரோமர்களின் இலக்கியங்களோ இதற்கு தகுந்த ஆதாரம் கொடுப்பதில்லை. ஓமர்ஸ் வியாட் அல்லது ஒடிசி,மேலும் ஜோசபஸின் எழுத்துக்கள் கூட சரியான, ஆதாரங்களை கொடுப்பதில்லை. ஆகவே வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட ஆதாரங்களை மட்டுமே நாம் உறுதியாக ஏற்றுகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மூன்றாம் வசனத்தில் சீதோன் துறைமுகத்தில் பவுல் தன்னுடைய சிநேகிதரை பார்க்க அனுமதி கொடுக்கப்பட்டதை வாசிக்கலாம். மிகுந்த இரக்கமுள்ள காரியம் இங்கு நடந்தது. ஒரு கைதி தப்பித்தால் அதற்கு பதிலாக காவலாளிகளுடைய ஜீவன் போய்விடும் என்று ஜீலியஸ் நன்கு அறிந்திருந்தார். ஒரு சாதாரண கைதி ஒரு நாள் முழுவதும் விடுதலையோடு தன் சிநேகிதரிடம் பராமரிப்படை அனுப்பப்படுவது எவ்வளவு எதிரிடையான காரியமாக இருக்கிறது. நிச்சயமாக யோப்பாவில் உள்ள நூற்றுக்கு அதிபதியாக கொர்நேலியுவை இந்த அதிபதி அறிந்திருக்க வேண்டும். அல்லது பவுலை பற்றியும் அவர் சிறையில் இருந்த போது நடந்தவைகளையும், மற்ற

காவலாளர்களிடமிருந்து கேட்டு அறிந்திருக்க வேண்டும். இப்படியாக அந்த கடல் பயணம் முழுவதிலும் ஜூலியஸ் பவுலை மிகுந்த மரியாதையுடனும் கனத்துடனும் நடத்தினார்.

அந்த நாளில் இருந்து மகிழ்ச்சியும், ஆவிக்குரிய புத்துணர்ச்சியும் நாம் நிச்சயமாக கற்பனை மட்டுமே செய்து பார்க்கலாம். இனி ஒரு போதும் காணமுடியாத தன்னுடைய நெருங்கின சகோதரர்களை ஒரு முறை காண வாய்ப்பு கிடைத்தது, எவ்வளவு சந்தோஷத்தை தந்திருக்க வேண்டும். அந்த சூழ்நிலையில் சகோதரர்களின் உணர்ச்சி பூர்வமான சம்பாஷனைகளையும், அவர்கள் பவுலின் மேல் வைத்த அன்பின் வெளிப்பாடுகளையும், கண்ணீர் சிந்தும் பிரிவையும் சற்று கற்பனை செய்து பாருங்கள். கப்பல் கொஞ்சம் கொஞ்சமாக தொடுவானத்தை நோக்கி மறைந்து செல்ல இவர்கள் கண்ணீரோடு கண்ட அந்த காட்சி, அந்த நாளை அவர்கள் ஒரு போதும் மறந்திருக்கவே முடியாது. ஆவிக்குரிய உணர்வுகளை மீண்டும் புதுப்பித்த அந்த நாள்.....

அக்டோபர் மாதம் துவக்கத்தில் மத்திய கடல் பகுதியை வந்து சேர்ந்தார்கள், அப்போது ஆபத்து வந்தது. **9 ஆம் வசனத்தில் உபவாசம்** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே ஒப்புரவு நாளுக்கு அருகாமையின் காலங்களாக இருந்திருக்க வேண்டும். வருங்காரியங்களை குறித்து பவுல் எச்சரித்தார். மனுஷரே இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல,நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும்உண்டாயிருக்குமென்று காண்கிறேன் என்று சொல்லி, அவர்களை எச்சரித்தார். **[அப்போஸ்தலர்27:10]** அங்குள்ளவர்கள் பவுலின் வார்த்தைகளுக்கு செவி கொடுத்தார்கள். இவர் ஒரு கடல் வாசியாக இல்லாவிட்டாலும் கப்பல் சேதத்தில் அகப்பட்டு ஒரு மோசமான சூழ்நிலையை சந்தித்தவர். **[II கொரிந்தியர் 11:25,26]**

அது போல் நம்முடைய நாட்களிலும், அறுவடை சத்தியத்தில் சொல்லப்பட்ட தற்போதைய உலக அமைப்புகளின் அழிவை பற்றி செய்திகள் கவனிக்கப்படாமல் போயிற்று ஏன் என்றால் இதை குறித்து கருத்தரங்கங்களும்,ஆயர்பயிற்சி கல்லூரிகளும் உத்திரவாதம் இல்லாத போது வேத மாணவர்கள் என்னதான் செய்ய முடியும்? **[மத்தேயு 24:37-39,1 தெசலோனிக்கேயர் 5:2,3:2, IIபேதுரு3:3,4]**

***அக்டோபர் 16ம் தேதிக்குரிய அனுதின மன்னா குறிப்புகளை பார்க்கும்போது மனிதருடைய அநேக கடும் உணர்ச்சி,எதிர்ப்பு முதலிய கொந்தளிப்புக்கிடையே தேவ சித்தத்தை நாம் எடுத்துக் காட்ட*** இக்காலத்தில் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்இருதயங்கள் சில சந்தர்ப்பங்களில் திகைப்படையக் கூடும் ஆகிலும் தேவன் நம்மோடிருக்கிறார் என்று நம் விசுவாசத்தின் மூலம் நாம் காணக்கூடியவர்களாயிருந்து வல்லமையுடன் சமாதானத்தை உலகத்திற்கு சொல்லக் கூடியவர்களாக இருப்போம். புயலுக்கொப்பான பல துன்பங்கள் மக்களை நெருக்கும். அவர்கள் அலறி நடுங்குவார்கள். ஆகிலும் நமக்கு திகைப்பைக் கொடுக்கிறதாக இராமல், இவை இக்காலத்தில் சம்பவிக்க வேண்டியதைஅறிந்திருக்கிறபடியால், சந்தோஷத்துடன் மோசேயின் பாட்டையும்,ஆட்டுக்குட்டியின் பாட்டையும் பாடி நம் மீட்பு சமீபமாயிருப்பதால் களிகூரக் கடவோம். நமக்கு முன் இருண்ட ஒரு காலம் வருவதை அறிந்து ஆச்சரியப்படவேண்டாம். அனைவரும் அலறத்தக்கதாக **புயல் காற்று** அடிக்கும் காலம் வருகிறது. நாம் இன்று பெறக்கூடிய விலையுயர்ந்த அனுபவங்களை வைத்து வரக்கூடிய சோதனைகளில் விசுவாசத்தில் விழுந்து விடாதபடி பாடங்களை கற்று கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். தத்தளிக்கும் கப்பலை போல **அரசியல், சமுதாயம், மதம், பொருளாதாரம்,** ஆகியவைகள் நிலை குழைந்து போன சூழ்நிலையில் நாம் இன்று ஜீவித்து கொண்டிருக்கிறோம். இவை அனைத்தும் அழிவை வருவித்து கொண்டிருக்கிறது. **[சங்கீதம்46:1,2]**

## புயல் துவங்கியது

**தென்றல் மெதுவாயடித்தபடியால், தாங்கள்கோரினது கைகூடிவந்ததென்று எண்ணி,அவ்விடம்விட்டுப் பெயர்ந்து கிரேத்தாதீவுக்கு அருகாக ஓடினார்கள்.**

**கொஞ்ச நேரத்துக்குள்ளே யூரோக்கிலிதோன் என்னுங் கடுங்காற்று அதில் மோதிற்று [அப்போஸ்தலர் 27:13,14]**

வரலாற்று பூர்வமாக பதிவுகளை பார்க்கும்போது மிகுந்த வளர்ச்சியுடனும் செழிப்புடனும் தொழில் புரட்சி உலகத்தில் உள்ள மேற்கு பகுதியை தழுவியது. யோசிக்கமுடியாத அளவுக்கு 1913 ஆம் வருடத்தின் முடிவில் ஐரோப்பாவில் உள்ள மேற்கு பகுதியில் உள்ளவர்களுக்கும் மத்திய பகுதியில் உள்ளவர்களுக்கும் மிக பெரிய அளவில் யுத்தம் மூண்டது. வருங்காலத்தில் கருத்து வேறுபாடுகள் சமாதானமாக சில பேச்சு வார்த்தைகளின் மூலம் சரி செய்து கொள்ளலாம் என்று எண்ணினார்கள்.

எதிர்பாராத விதமாக அமைதியான தென் திசை காற்று யுத்தத்தின் சூறாவளி காற்றாக மாறியது. 1914 ம் வருடம் ஜீன் மாதம் பால்கன் தேசத்தின் நகரமாகிய சாராஜீவோவில் குண்டுகள் வெடித்தன. அங்கு வருகை தந்திருந்த ஆஸ்ட்ரோ-ஹங்கேரியன் ராஜ்யத்தின் இளவரசன் பெர்டினான்டும் மற்றும் அவர் மனைவியும் கொல்லப்பட்டனர். அதற்கு பின்பு நிறைவேறின தொடர் சம்பவங்களை இன்னாள் வரைக்கும் வரலாற்று ஆசிரியர்களால் நிதானிக்க முடியாதவைகளாக இருந்து எதிர்பாராத யுத்தத்தை தீவிரப்படுத்தியது. தீர்க்கதரிசனங்களின் படியும் கால கணக்குகளின் குறிப்பின் படியும் இது புறஜாதிகளின் காலத்தின் துல்லியமான முடிவை அடையாளப்படுத்துகிறது.

**அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்..... [தானியேல் 2:44]** ஐரோப்பா வீடுகளில் இருந்த ராஜரீகமான ஆளுகைகள் அவர்களை விட்டு நீங்கியது.

வசனம் 17 மற்றும் 18ல் சொல்லப்பட்டபடி அவர்கள் சூறாவளி காற்றினால் அடிக்கப்பட்டு பரிதாபமாக இழுத்துச் செல்லப்பட்டார்கள். இரக்கமற்ற கடும் காற்று கப்பலை அடித்து சென்றது. புயலை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு எதுவும் செய்ய இயலவில்லை.

விரக்தியடைந்தவர்களாக கப்பலிலிருந்து சரக்குகளை வெளியேற்றினார்கள். ஓட்டை விழுந்த கப்பல் முற்றிலுமாக முழுகி விடாதபடி கப்பல் குழுவினர் சில அவசர யுக்திகளை கையாண்டார்கள். கப்பலின் உட்பகுதி சீற்றத்துடன் மோதும் அலைகளினால் கிழிந்து விடாதபடி பெரிய கயிறுகளைக் கொண்டுஅதை கட்டினார்கள். கப்பலுக்கு தேவையான பொருட்கள் மட்டுமே உள்ளே வைக்கப்பட்டது. இன்றைய தினத்தில் நம்முடைய விசுவாசம் என்னும் கப்பலின் பளுவை குறைப்பதற்கான ஐசுவரியத்தின் உலகலாவிய பகிர்தல், காலனி ஆதிக்கத்தின் முடிவு, சமுதாய சட்டம் மற்றும் பதவிகள், தொழிலாளர் இயக்கம், பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள்..... எங்குமுள்ள ஆளுகைகளையும், எதிர்ப்புகளையும் தரை மட்டமாக்க இவைகளை வெளியேற்றுவதே கடைசி முயற்சியாகும். யூப்லியின் எக்காள சத்தம் முழங்கியது. புற ஜாதிகளின் காலம் முடிவு அடைந்தது. ராஜ்யத்தை இந்த பூமியில் ஸ்தாபிக்க புதிய ராஜா வந்து விட்டார். பூமியில் உள்ள கோபவெறி கொண்ட இந்த மக்களின் அறியாமையையும்,எதிர்ப்புகளையும் தகர்த்து எறியும் காலம் வந்தது, மேலும் உரிமையோடு பூமியின் ஆசீர்வாதங்களை பெறுவார்கள்.

இன்றைய உலக அமைப்புகள் கரைந்து போவதை உணர்ந்த பேதுரு இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். **[II பேதுரு 3:11]** ஆண்டவரின் பணியை தொடர்ந்து செய்யும் நாம் உலகத்தின் காரியங்களையும் செல்வாக்கையும் நாம் எவ்வாறு களைந்து போடுகிறோம். நாம் பலி பீடத்தின் மேல் செலுத்த வேண்டிய பலிகளை நாம் செலுத்தாமல் பத்திரப்படுத்தி வைத்திருந்தோம் என்றால் இறுதி கட்டத்தில் நாம் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் இருப்போம்.

## நம்பிக்கையின் நற்செய்தி

அவர்கள் இருந்த இருக்கமான நிலையை 20 ஆம் வசனம் வர்ணிக்கிறது. ஆனாலும் அந்த சூழ்நிலையிலும் நம்பிக்கைக்குரிய ஒரு நற்செய்தியை பவுல் அளித்தார். ஏனென்றால் என்னை ஆட்கொண்டு வரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று-பவுலே பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ,உன்னுடனே கூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார் என்றான். **[வசனம் 23-25]** தேவனுடைய கிருபையால் அனைவரும் மீட்கப்படுவார்கள் என்றும் கப்பல் மட்டும் சேதம் அடையும் என்ற ஊக்குவிக்கும் செய்தியை பவுல் சொன்னார்.

இன்றைக்கு இருக்கும் இந்த உலகத்திற்கு ஒரு சமாதானத்தை கொடுக்கும் செய்தியாக இவைகளை நாம் ஒப்பிடலாம்.இன்றைக்கு இருக்கும் அமைப்புகள் அனைத்தும் உடைந்தாலும் அதாவது மனுகுலத்தின் நன்மைக்காக எதுவும் மீதியில்லாமல் போனாலும் எந்த விதமான சேதமும் இராது என்று மிக உறுதியாக பவுல்,தூதன் வாக்கை நமக்கு இன்று வாக்களிக்கிறார். நமக்கும் தேவனுடைய வாக்குத்தத்தம் உறுதியான தீர்க்கதரிசனமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஆண்டவராம் இயேசு பொங்கி எழுந்த கலிலேயாக் கடலை அடக்கும் போது சொன்ன வார்த்தைகளை...(திடன் கொள்ளுங்கள்) இந்த சூழ்நிலைக்கு நாமும் பயன்படுத்தலாம். **[மத்தேயு 14:27],** நீண்ட காலமாக வாக்களிக்கப்பட்ட தேவனுடைய ராஜ்யமும், சீர்த்திருத்துதலின் காலமும் நெருங்கி விட்டது என்று நாம் இந்த உலகத்திற்கு அறிவிக்கலாம் **[அப்போஸ்தலர் 3:19-21,15:14-17, எபேசியர் 1: 9,10]**

பவுலின் நிமித்தமாக எல்லா பயணிகளும் மீட்கப்பட்டார்கள் என்பதை இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் ரோமாபுரிக்கு செல்லுவது மிக அவசியமாக இருந்தது. ஆகாயத்து பிரபுவாகிய சாத்தானால் கூட பவுலின் பணியை தடுக்க முடியவில்லை. எப்படியெனில் இயேசு குறிப்பிடும் போது நீங்கள் (சபை) பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்று போனால் எதினால் சாராமாக்கப்படும் ?வெளியே கொட்டப்படுவதற்கும்,மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது **[மத்தேு 5:13]** சபையானது மாம்சத்தில் இருக்கும் போதுமுத்திரை போட்டு தீரும் அளவு இந்த உலகத்தை அழிக்கும் நான்கு காற்றுகளும் பிடித்து வைக்கப்பட்டிருக்கிறது.**[வெளி7:1-4]** அப்பொழுது **அர்மகெதோன்** யுத்தமானது மீதியிருக்கும் இன்றைய தீய உலகத்தின் சீற்றமடைந்த ஆட்சிகளை முற்றிலுமாக அழித்து விடும்.

## ஒரு புதிய ஆபத்து நெருங்கியது

ஒரு புதிய ஆபத்தை பற்றி 27,28 ஆம் வசனங்கள் குறிப்பிடுகிறது. பதினாலாம் இராத்திரியானபோது, நாங்கள் ஆதிரியாக் கடலிலே அலைவுபட்டு ஓடுகையில்,நடுஜாமத்திலே கப்பலாட்களுக்கு ஒரு கரை கிட்டிவருகிறதாகத் தோன்றிற்று. உடனே அவர்கள் விழுதுவிட்டு இருபது பாகமென்று கண்டார்கள். சற்றுஅப்புறம் போனபொழுது மறுபடியும் விழுதுவிட்டுப் பதினைந்து பாகமென்று கண்டார்கள்.

சுவிசேஷ யுகம் முழுவதும் கிறிஸ்தவர்கள் தேவனுடைய வாக்களிக்கப்பட்ட ராஜ்யத்தை எதிர் நோக்குவதற்கு கட்டளை பெற்றிருக்கிறார்கள் மேலும் ராஜ்யம் நெருங்குவதற்கான தடையங்களை ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். தேவனுடைய வார்த்தைகளில் உள்ள தீர்க்கதரிசனங்களை கூர்ந்து கவனிக்கையில் யுகத்தின் முடிவையும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலங்களும் தெளிவாக காண முடிந்தது. **[மத்தேயு 24, மாற்கு13, லூக்கா 21, வெளி 6:9- 11 ]** தேவன் நியமித்த நேரத்தில் கால கணக்குகள் வெளிப்பட்டது. கால கணக்கின் அளவு கோடு முடிவு காலத்தையும் கிறிஸ்துவின் வருகையையும்,பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலையும்,புறஜாதிகளின் முடிவு காலங்களையும்,இவைகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைந்திருப்பதை தெளிவாக நிர்ணயித்தது. புறஜாதிகளின் காலம் நிறைவு அடைந்த ***1914*** ஆம் வருடம் ஆதாரமற்ற நிலையில், இந்த உலகம் அழிவை சந்திக்கும் என்று அநேகர் தவறாக எதிர்பார்த்தார்கள். ஆனால் ***1914*** ஆம் வருடத்தில் ஐரோப்பாவின் ஆட்சி அமைப்புகள் முடிவுக்கு வந்துகொண்டிருந்தாலும், இந்த தீமையான உலகம் இன்றும் நீடித்து கொண்டிருக்கிறது. **[கலாத்தியர்1:4, II பேதுரு 3:10-13]**

பாறையிடங்களில் விழுவோமென்று பயந்து, பின்னணியத்திலிருந்து நாலு நங்கூரங்களைப்போட்டு, பொழுது எப்போது விடியுமோ என்றிருந்தார்கள்.**[29-வசனம்] வெளி 7:1 - 4]** வசனங்களில் தேவனுடைய ஊழியக்காரர்களுடைய நெற்றிகளில் முத்திரை போடும் வரைக்கு நான்கு காற்றுகள் உலகத்தை சேதப்படுத்தாதபடிக்கு பிடித்து வைக்கப்பட்டிருப்பதை வாசிக்கலாம். அழைக்கப்பட்டவர்கள், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் உண்மையுள்ளவர்கள் ஆகிய மூன்று வகுப்பாரும் கிறிஸ்துவின் சரீர அங்கமாக முழுமை பெறும் வரைக்கும்,எண்ணிக்கைகள் நிறைவு பெறும் வரைக்கும் முடிவு காலத்தில் நடக்கயிருக்கும் காரியங்களை நாம் வரிசைப்படுத்த முடியாது. ஆகவே மணவாட்டி தன்னை முழுமையாக ஆயத்தம் பண்ணின பின்பு அரசாங்க வல்லமைகள் தகர்க்கப்படும். அந்நேரம் வரைக்கும் இந்த சூறாவளிக் காற்று அடியாதபடிக்கு நிறுத்தப்பட்டிருக்கும் முதலாம் உலகப் போர் கொண்டு வந்த ஆச்சரியமான பின் விளைவுகளான **அரசியல், பொருளாதாரம், சமுதாய அமைப்பு** மற்றும் **மதம்** என்ற சமுதாயத்தின் நான்கு தூண்களும் நிலைநிறுத்தப்பட்டது. நடுத்தர வர்க்கத்தினர் **பொருளாதாரம் மற்றும் சமுதாய வளர்ச்சி, எல்லா உற்பத்தி துறையிலும் ஏற்பட்ட ஏற்றம், விவசாயம் ,தகவல் தொடர்பு , உலகலாவிய வர்த்தகம், போக்குவரத்து,**போன்றவைகளில் காணப்பட்ட அதிபயங்கர வளர்ச்சி அநேக ஜனங்களுக்கு அதிக வாய்ப்புகளையும் வருமானத்தையும் உருவாக்கியது. அதே சமயத்தில் இவைகள் பெரிய அளவில் பாதுகாப்பின்மையையும் எல்லா நிலையிலும் அதிருப்தியையும் ஏற்படுத்தியது. வரலாற்றில் ***20 ஆம்*** நூற்றாண்டு ஒரு இரத்தம் நிறைந்த காலமாக இருக்கிறது. இந்த உலகத்தை அழிக்கும்படி அனுப்பப்பட்ட காற்றுகள் அழியாதபடி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதும் அதிகமான அழிவுகள் நடந்து கொண்டிருக்கிறது.

## அனைவரும் மீட்கப்பட்டார்கள்

வரும் ஆபத்திலிருந்து தங்களை காப்பாற்றுவதற்கு கப்பலோட்டிகள் முயற்சி எடுத்தார்கள் என்ற **[30-32)**

வசனங்கள் குறிப்பிடுகிறது. தவிர்க்க முடியாத அளவுக்கு அபாயம் அதிகரித்தது. எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் பயணற்றுப் போனது. இப்படியாக அங்கிருந்த அனைவரும் இருளில் திகிலடைந்து உதவியற்ற நிலையில் விடியலுக்காக காத்திருந்தார்கள். **[சங்கீதம்30:5,ஏசாயா 13:6-13,லூக்கா 21:25,26,1 தெசலோனிக்கேயர் 5:2,3]**

இதற்கு இடையில் பவுலும் அவரைச் சார்ந்தவர்களும் மற்றவர்களுடைய தேவைகளை சந்தித்து கொண்டும்,இரட்சிப்பின் சுவிசேஷத்தையும் நம்பிக்கையையும் போதித்து கொண்டிருந்ததாக **[33-38]** வசனங்கள் குறிப்பிடுகிறது.14 நாட்கள் உபவாசித்த பின்பு பவுல் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி தானும் புசித்து அனைவரும் மடிந்து போய்விடாத படிக்கு மற்றவர்களை புசிக்கும் படி வேண்டிக்கொண்டார். மீண்டுமாக கப்பலில் இருந்த 275 நபர்கள் நிச்சயமாக உயிர் பிழைப்பார்கள் என்று பவுல் உறுதியளித்தார். இயேசு சபைக்கு அளித்த உறுதியைப் போல் ஆனாலும் உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது. **[அப்போஸ்தலர் 27: 34, லூக்கா21:18]** இங்கு பவுலின் நிமித்தமாக மற்ற பயணிகளும் தப்புவிக்கப்பட்டார்கள்.

சுவிசேஷயுகத்தின் முடிவு காலத்தில் உள்ள லவோதோக்கியா சபையில் நடப்பவைகளை எவ்வளவு அழகாக இந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டுகிறது. **1,260 வருடங்களாக,** தேவனுடைய வார்த்தைகளுக்கு ஏற்பட்ட பஞ்சத்திற்கு பிறகு ஆண்டவர் தாமே மறுபடியும் வந்து தன்னை ஆவலாக எதிர்பார்த்து கொண்டிருப்பவர்களுக்கு அரைகட்டிக்கொண்டு ஏற்றகால ஆகாரத்தை பந்தி பரிமாறுவார் என்று உறுதியளித்திருக்கிறார். **[மத்தேயு 24:44,45 லூக்கா12:36,37,வெளி 3:14,20]** கடைசிகால சபையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பரிசுத்தவான்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தில், சகலத்தையும் சீர்பொருத்தும் காலத்தில் தேவனுடைய ராஜ்யம் வந்திருப்பதை பற்றிய சத்தியங்களால் போஷிக்கப்படுகிறார்கள். இதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள எவ்வளவு ஆர்வமாக இருக்கிறார் என்று பாருங்கள். **[ஏசாயா52:7,8]** அவர்கள் தேவைகளை சந்தித்த பின், கப்பலை இலகுப்படுத்தி கரைக்கு கொண்டு செல்லுவதற்காக உணவுகளை வெளியே எறிந்தார்கள் நம்முடைய இந்த ஒப்புமையான பாடத்திலும்,கிறிஸ்துவின் சபையாகிய மணவாட்டி பூரணப்படுத்தப்பட்ட பின்பு,இந்த உலகத்தில் எந்த விதமான தேவனுடைய கிரியைகள் நடைபெறாதபடி ஸ்தம்பிக்கும். சுவிசேஷ பணி நிறுத்தப்படும். **[மத்தேயு5:13,யோவான்9:4]**

மீதியிருக்கும் (39-44) வசனங்கள் பயணத்தின் இறுதிகட்டத்தை தெளிவாக விவரிக்கிறது. பகலின் வெளிச்சம் இடம் தெரியாத ஒரு துறைமுகத்தில் கொண்டு சேர்த்தது. ஆனால் சில சாதகமான சூழ்நிலைகள் கப்பலை கரை சேர்க்க உதவியது. **[40-41,43,44]**

தற்செயலாக இரண்டு எதிரிடையாக வந்த நீரோட்டங்கள் பவுலின் கப்பலை தடுக்க முடியாதபடி கப்பலை உடைத்தது. இப்படியாக சமுதாயத்தில் உள்ள அனைத்து அசையாத அமைப்புகளும் மோதி நொறுங்கும். முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் உள்ள மோதல்கள் மூலம் அழிவு வரும் என்று யூகிக்கப்படுகிறது. **[எசேக்கியேல் 7:19-24,யோயேல் 2 2-11, ஆகாய் 2:21,22] மத்தேயு 24:21,22**

அவர்கள் ஒதுங்கிய தீவாகிய மால்த்தா (லத்தீனில் மெலித்தா) வின்ஸ்டன் சர்ச்சில் மூலம் **விழாதவிமானதாங்கி** என்று தென் கடலோர பகுதியில் அதனுடைய திட்டவட்டமான நிலையினால் அழைக்கப்பட்டது. மால்த்தா இரண்டாம் உலகப் போரின் போது ஜெர்மானிய படைகளின் வினியோக பாதையை துண்டிப்பதில் மால்த்தா முக்கிய பங்கு வகித்தது. இது பரிசுத்த நகரத்திற்கு அருகில் சூயஸ்கால்வாய் அமைந்திருந்த இடத்திலிருந்து 40 மைல் தூரமே ஆகும். அங்கு தான் ஜெர்மானிய படைகள் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு வினியோக குறைபாடுகளின் நிமித்தம் மோசமான பின் அடைவுக்கு தள்ளப்பட்டார்கள். ஆறு வருடங்களுக்கு பின்பு யூத தேசம் உருவானது.

28ஆம் அதிகாரத்தின் துவக்கத்தில் பவுல் அந்த தீவில் செய்த அற்புதங்களின் தொகுப்பு தேவனுடைய ராஜ்யத்தில் மகிமை அடைந்த கிறிஸ்துவின் சீர்பொருந்தும் வேலைகளை இது அடையாளப்படுத்துகிறது.

அப்போது நாம் பவுலுடனும் அவருடைய சகாக்களுடனும் ரோமாபுரிக்கு இந்த ஆபத்தான பயணத்தை மேற்கொண்ட காரணத்தை அறிந்து கொள்ளலாம்.

# பவுலின் இருவித ஊழியம்

## எபிரெயர்களின் புஸ்தகம்

**பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார் [எபிரெயர் 1 : 1,2]**

நாம் அப்போஸ்தலனாகிய பவுலை பற்றி யோசிக்கும் போது அவர் புறஜாதிகளுக்கு ஒரு விசேஷித்த அப்போஸ்தலனாக இருந்ததை நாம் நினைவுகூறுகிறோம். உண்மையில் தேவன் அவருக்கு ஒரு விசேஷமான பொறுப்பை கொடுத்திருந்தார். தமஸ்க்குவுக்கு வந்த பின்பு மகிமை அடைந்த இயேசுவின் சந்திப்பின் நிமித்தமாக பார்வை இழந்த பவுலை சந்திக்கும்படி அனனியா என்ற சீஷனை தேவன் அனுப்பினார். ஆதிகால கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தின, பவுல் பற்றி அறிந்த அனனியா தேவனிடத்தில் கேட்டபோது.

**அவர், நீ போ அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும், இஸ்ரயேல் புத்திரக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிக்கிறான். [அப்போஸ்தலர் 9:15] என்றார்.**

முதலில் இஸ்ரயேலர்களுக்கும் என்ற வார்த்தைகளை நாம் கவனிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே பவுல் புறஜாதிகளுக்கும் யூதர்களுக்கும் ஊழியம் செய்ய வேண்டியதாக இருந்தது.

பவுல் யூதர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டிய அடிப்படை நோக்கத்தை அறிந்திருந்தார். பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவுக்கு போன போது நடந்த சம்பவங்கள் இதை **[அப்போஸ்தலர் 13]** உறுதிப்படுத்துகிறது. ஓய்வு நாளின் போது பவுலும் பர்னபாவும் உள்ளூரில் உள்ள யூத மத ஆலயத்திற்கு சென்றார்கள் என்று பதிவுகள் நமக்கு எடுத்துரைக்கிறது.சட்டங்களையும் தீர்க்கதரிசனங்களையும் வாசித்த யூத ஆலயத்திலிருந்த மத தலைவர்கள், அவர்கள் விரும்பினால் தங்களுடைய யூத மத கோவிலுக்கு வந்து அங்குள்ளவர்களை சந்திக்கும் படி அழைப்பு கொடுத்தார்கள். இந்த சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட பவுல் அங்கு பேசத் தொடங்கினார். சந்தர்ப்பவசமாக அங்கு யூதர்கள் அல்லாதவர்களும் அமர்ந்திருந்தார்கள். ஆகவே பவுல் அப்பொழுது எழுந்திருந்து ,கையமர்த்தி- இஸ்ரயேலரே,தேவனுக்குப் பயந்து நடக்கிற சகல ஜனங்களே,கேளுங்கள். **[அப்போஸ்தலர் 13 : 16]** வேதமாணவர்களாகிய நாம் இந்த காலக்கணக்கை பற்றிய பிரசங்கத்தை நன்கு அறிந்திருக்கவேண்டும் ஏன் என்றால் ***நியாயாதிபதிகளின் காலம் 450 வருடங்கள்*** என்று பவுல் குறிப்பிடுகிறார்.

பவுலும் பர்னபாவும் ஒய்வு நாளில் யூத மத ஆலயத்திற்கு போய் அங்கு கூடியிருக்கும் யூதர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்க வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் போதித்தார்கள் என்பவை நாம் கவனிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஜெப ஆலயத்தில் கூடின சபை கலைந்து போனபின்பு, யூதரிலும் யூதமார்க்கத்தமைந்த பக்தியுள்ளவர்களிலும் அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றினார்கள். அவர்களுடனே இவர்கள் பேசி, தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னார்கள் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. **[அப்போஸ்தலர் 13:43]**

அதைத் தொடர்ந்து வந்த ஒய்வு நாளில் நடந்த சம்பவத்தை நாம் நம்ப முடியாத அளவுக்கு வேதாகமம் பதிவு செய்துள்ளது. அடுத்த ஓய்வுநாளிலே கொஞ்சங்குறையப் பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தைக் கேட்கும்படி கூடிவந்தார்கள். **[அப்போஸ்தலர் 13:44]** ஆனால் இதை கண்ட யூதர்கள் பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி விரோதித்துத் தூஷித்தார்கள். அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது, நீங்களோ அதைத் தள்ளி,உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால்,இதோ,நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும் படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர்

எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள். **[அப்போஸ்தலர்13:45-47]** தேவனுடைய வார்த்தை முதலில் யூதர்களுக்கு பிரசங்கிக் வேண்டும் என்ற அடிப்படையான நோக்கம் பவுலுக்கு இருந்ததை பவுலின் இந்த வார்த்தைகள் மூலமாக நாம் புரிந்து கொள்ளலாம்.

## கிருபையின் சுவிசேஷம்

புறஜாதிகள் கிறிஸ்தவ விசுவாசிகளாக மாறுவதை கண்ட யூதர்களின் பொறாமையும், வெறுப்புணர்வும் அதிகரித்தது. தேவனோடு ஐக்கியப்படுவதற்கு முன் இந்த புறஜாதிகள் யூத மத சடங்குகளையும் நியாயப்பிரமாணத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். ஆனால் பவுலின் பிரசங்கத்தின் மூலம் இந்த தடைகள் தகர்க்கப்பட்டு பிதாவாகிய தேவனையும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் ஏற்று கொண்ட புறஜாதிகள் விசுவாசிகளானார்கள். இப்படியாக கிறிஸ்துவின் மூலம் கிடைத்த **தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை** ஏற்று கொள்ளாமல் அநேக யூதர்கள் இடறினார்கள்.**[அப்போஸ்தலர் 20:24]**

இதே காரியத்தை குறித்து பவுல் மீண்டும் மீண்டுமாக சொல்லவேண்டியதாக இருந்தது. ஆனாலும் அவர் தைரியம் கொண்டு பேசினார். அவர் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் இதை குறிப்பிட்டு எழுதியிருக்கிறார். அந்த நிருபத்தை தொடங்கும் போதே அவருடைய ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

**உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். வேறொரு சுவிசேஷம் இல்லையே, சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. [கலாத்தியர்1:6,7]**

அந்த நிருபத்தில் அவருடைய கருத்தை மிகத் தெளிவாக்கினார். **நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை, நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.**

**புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே.**

**ஒன்றை மாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள். ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? இத்தனை பாடுகளையும் வீணாய்ப்பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப்போயிற்றே.**

**அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்? [கலாத்தியர்2:21--3:1-5]**

ஆதி கால சபையில் இருந்த இந்த பிரச்சனைகளை குறித்து பவுல் அதிக கவனம் செலுத்தினார். அதே சமயம் கிறிஸ்துவத்தை தழுவின யூதர்களை பற்றியும் அவர் அதிகமான அக்கறை எடுத்துகொண்டார். ஆனால் அவர் தங்களுடைய குடும்பத்திலிருந்தும், மதத் தலைவர்களிட மிருந்தும், சமுதாயத்திலிருந்தும் வந்த எதிர்ப்புகளை மேற்கொள்ள வேண்டியதாக இருந்தது.

யூத கிறிஸ்தவர்களின் சகோதரர்களிடமிருந்து வந்த எதிர்ப்புகளும் கேள்விகளும் சாதாரணமானவைகளாக இராமல் ஆழமான காரியங்களாக இருந்தது. நம்மில் நாம் வளர்க்கப்பட்ட மத நம்பிக்கைகளிலிருந்து மாறினவர்கள் யூத கிறிஸ்தவர்களை நோக்கி வந்த எதிர்ப்புகளும் கேள்விகள் மூலம் வந்த அவமானமும் அவைகளின் அனுபவங்களையும் நன்றாகவே உணர முடியும்.

- நாம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம் நம்முடைய ஜாதிக்கு ஆபிரகாமை பிதாவாக கொண்டிருக்கிறோம். தேவன் அவருடன் பேசி மிக பெரிய தேசத்தை வாக்களித்திருக்கிறார். உங்க

வருங்காலத்தை குறித்து, நீங்கள் பெற்ற விசுவாசம் என்ன? உங்களுக்கு எப்படிப்பட்ட நம்பிக்கை உண்டு?

- ❑ நாங்கள் தேவனால் தேர்வு செய்யப்பட்ட மோசேவை மத்தியஸ்தராக கொண்டு உடன்படிக்கையை ஏற்படுத்தி தேவனோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். அவர் மூலம் தேவன் சட்டங்களையும் பிரமாணங்களையும் எங்களுக்கு கொடுத்திருக்கிறார். நீங்கள் தேவனோடு எப்படி தொடர்பு கொண்டிருக்கிறீர்கள்? மேலும் உங்களுக்கு மத்தியஸ்தராக இருப்பவர் யார்? நீங்கள் யாருடைய உபதேசத்தை கடைப்பிடிக்கிறீர்கள்? ஒரு மர ஆசாரியனையா? சிலுவையில் அறையப்பட்ட ஒரு குற்றவாளியையா? மீன் பிடிப்பவனையா?
- ❑ எங்களை வழிநடத்த நியாயப்பிரமாணத்தின் சாட்சியும்,தீர்க்கதரிசிகளும் உண்டு, நீங்கள் எப்படிப்பட்ட அதிகாரத்தை விசுவாசித்து கீழ்படிகிறீர்கள்?
- ❑ தேவனுடைய மிகுதியான வல்லமையை கொண்டு தூதர்கள் மூலமாக எங்களுக்கு சட்டங்கள் கொடுக்கப்பட்டது. தேவனுடைய சட்டங்களை பெற துாதர்கள் எப்போதாவது உங்கள் மத்தியில் வந்திருக்கிறார்களா? தேவனுடைய காரியங்களை நீங்கள் கண்டு விசுவாசிக்கும்படி தேவன் எப்படிப்பட்ட அற்புதமான காரியங்களை உங்கள் மத்தியில் நடத்தியிருக்கிறார்?
- ❑ தேவனால் வகையறுக்கப்பட்ட மிக பிரமாண்டமான ஆலயம் எங்களுக்கு உண்டு, அதில் அவரால் நியமிக்கப்பட்ட ஆசாரியர்கள் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் ஆலயமும் ஆசாரித்துவமும் எங்கே?
- ❑ எங்கள் பாவங்களை கழுவ விசேஷமாக ஒப்புரவாக்குதலின் நாளில் தேவனால் நியமிக்கப்பட்ட பலிகளும் சடங்குகளும் எங்களுக்கு உண்டு, உங்களுக்கு இப்படிப்பட்ட காரியங்கள் உண்டா? உங்க பாவங்களிலிருந்து எப்படி சுத்திகரிக்கப்படுகிறீர்கள்?
- ❑ தேவனுடைய பிரசன்னம் வெளிப்படும் இடமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு எங்களுடைய பிரதான ஆசாரியர் ஒப்புரவாக்குதலின் நாளில் பிரவேசிப்பது வழக்கம். உங்களுக்கு தேவனுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்தும் இடம் உண்டா? தேவனுடைய சார்பில் உங்களுக்காக பறிந்து பேசுவதற்கு யாரும் உண்டா?
- ❑ எல்லாவற்றிற்கும் மேல் வருங்காலத்தில் தேவனுடைய ராஜ்யம் யூத ஜாதிக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. மேலும் எருசலேம் அதற்கு தலை நகரமாக இருக்கும். இப்படிப்பட்ட மகத்தான உரிமைகளையும் கனத்தையும் விட்டு விட்டு நீங்கள் ஏன் தனித்திருக்கிறீர்கள்?

## எபிரெயர்களுக்கு எழுதின நிருபம்.

இப்படிப்பட்ட வாதங்கள், சில யூதகிறிஸ்தவர்களை, கிறிஸ்துவின் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தை தளர்த்தியது. ஆகவே, எபிரெய கிறிஸ்தவர்களுக்கு இந்த வாதங்களுக்கான பதிலையும், அவர்களுடைய விசுவாசம் உறுதிப்படுவதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் நேரடியாக ஒரு கடிதத்தை எழுதினார். பழைய ஏற்பாட்டின் பதிவுகளும்,தீர்க்கதரிசனங்களும் அவசியம் மாற்றப்படவேண்டும் என்பதை உறுதியோடு ஸ்தாபிப்பதற்கு இந்த நிருபத்தை எழுதினார். புதிய உடன்படிக்கை கிரியைகளினால் அல்ல கிருபையினால் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதை அவர் வலியுறுத்தினார். பிதாவாகிய தேவனோடு தனி மனித தொடர்பை ஏற்படுத்தும் ஒரு புதிய யுகம் பிறப்பதை அவர் தெளிவாக அறிந்திருந்தார்.

யூத ஜாதி தேவனோடு வைத்திருந்த விசேஷமான தொடர்புகளையும், சிலாக்கியங்களையும் பவுல் ஒரு போதும் மறுக்கவில்லை. இந்த உறவுகளை உறுதிப்படுத்தும்படியாக பவுல் சில காரியங்களை எடுத்துரைக்கிறார். தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன்,... தள்ளிவிடவில்லையே.. தேவன் தாம் முன்னறிந்து கொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட வில்லை.. தேவனுடைய கிருபைவரங்களும்,அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவகைளே.

கிறிஸ்துவர்களின் விசுவாசம் ஒவ்வொன்றும் யூத விசுவாசத்தின் அடிப்படையை கொண்டது என்று எபிரெய கிறிஸ்துவர்களுக்கு எழுதின நிருபத்தில் பவுல் எடுத்து காட்டுகிறார். எவைகளை நோக்கி யூத விசுவாசம் இருந்ததோ அவைகளை கிறிஸ்தவ விசுவாசம் நிறைவேற்றுவதை அடையாளப்படுத்தும் என்பதை பவுல் விவரித்தார். தேவனோடு வளர்ச்சி அடைந்து பூரண தொடர்பு கொள்ளுவதற்கும் பாவத்திலிருந்து சுத்திகரிப்பதற்கும் கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தினாலும் அவர் செலுத்தின பலியின் மூலம் மட்டுமே கூடும் என்று வாதாடினார். இப்படியாக கிறிஸ்தவர்கள் எல்லா வகையிலும் யூதர்களின் விசுவாசத்திலும், பாரம்பரியத்திலும் மேண்மையாகவே இருந்தார்கள். விசுவாசத்தில் நிலையற்று தடுமாறும் யூத கிறிஸ்தவர்களின் புதிய விசுவாசத்தில் உறுதியோடு நிற்கவும் யூத மார்க்கத்தின் பழக்கவழக்கத்தை அவர்கள் மீண்டும் திரும்பாதபடி பவுல் இவைகளைச் சொன்னார்.

பவுலின் கடிதங்களை வரி வரியாக படிப்பது நமக்கு மிக உபயோகமாக இருக்கும். யூதர்களுக்கு ஊழியம் செய்த ஒரு வரலாற்று பூர்வமான கடிதமாக மட்டும் அல்லாமல் சுவிசேஷ யுகம் முழுவதும் சபையின் ஆணிவேராக இருப்பது யூத மார்க்கம் என்பதையும், தேவன் அவருடைய சொந்த ஜனத்தோடு தொடர்பு கொண்டதில் இருக்கும் பாடங்களையும் பவுல் குறிப்பிடுகிறார்.

**தீர்க்கதரிசிகளையும் தூதர்களையும் விட கிறிஸ்து மேன்மையானவர்**

எபிரெயர்களின் புஸ்தகத்தில் உள்ள முதல் இரண்டு வசனங்களில், யூத மக்களுக்கு தேவனுடைய செய்திகளை சொன்ன தீர்க்கதரிசிகளை விட கிறிஸ்து மேன்மையானவர் என்று பவுல் வாசகர்களுக்கு (நமக்கு) சொல்லுகிறார். இயேசு தேவனுடைய வாய் மொழியாகவும், தேவனுடைய செய்திகளை சொல்லும் தீர்க்கதரிசியாக மட்டும் அல்லாமல் அவர் தேவனுடைய குமாரனாக இருந்தார். எல்லாவற்றிக்கு மேலாக தேவன் அனைத்திற்கும் அவரை உரிமைக்காரராக நியமித்திருக்கிறார். இப்படியாக இயேசு தேவனால் நியமிக்கப்பட்ட ஒரே தீர்க்கதரிசியாவார்.

**ஏப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெபித்தேன் என்றும், நான் அவருக்கு பிதாவாயிருப்பேன். அவர் எனக்கு குமாரனாய் இருப்பார் என்றும் அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா? [எபிரெயர் 1:5]**

இவைகள் அனைத்தையும் மேசியாவை குறிக்கிறது என்று பவுல் நிருபிக்கிறார். இப்படியாக பழைய ஏற்பாட்டின் காரியங்களை பொதுவாக மக்கள் அறிந்திருப்பார்கள் என்று அறிந்து பவுல் இந்த வசனங்களை பயன்படுத்தினார்.

**7,9 ஆம்** வசனங்களில் ஆவிக்குரிய சகலஜீவிகளை விட உயர்வான இடத்தில் நியமிக்கப்பட்டவரும் வருங்கால மேசியாவின் இராஜரீகமான பொறுப்பில் (மேண்மையான) இருப்பதையும் தூதர்களை தேவனுடைய ஊழியக்காரர்கள் என்றும் (தாழ்ந்த நிலை) இருப்பதையும் வித்தியாசப்படுத்தி காட்டுகிறார். 13 ஆம் வசனத்தில் தூதர்களில் யாராவது அவருடைய வலது பக்கத்தில் அமருவதற்கு அழைப்பு பெற்றார்களா என்று பவுல் கேள்வி எழுப்புகிறார். மேசியாவைத் தவிர ஒருவரும் இல்லை என்றும் இதை நிருபிக்க சங்கீதக்காரன் சொன்ன வசனத்தையும் **[சங்கீதம் 110:1]** இயேசு தாமே சொன்ன வசனத்தையும் **[மத்தேயு 22:43,44],** பேதுரு இயேசுவை குறித்து சொன்ன வசனத்தையும் **[அப்போஸ்தலர் 2:34-36]** குறிப்பிடுகிறார்.

பவுல் தன்னுடைய வாதத்தை **எபிரெயர் 2:1-4** வசனங்களில் முடிக்கிறார். .. ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களனாலும் பலவிதமாக பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின் படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்தஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு

பெரியதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்.

**இயேசு தூதர்களை விட சற்று தாழ்ந்த நிலையில் மனிதனாக இந்த உலகத்தில் வந்தார் என்றும் அவர் முழுவிருப்பத்துடன் தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும்,மரணத்தை ருசிபார்க்கும்படி [2:9] தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்திரித்தினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்.** மேலும் அன்றியும் அவர் ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களை குறித்து இரக்கமும் உண்மையுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியாதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். இவைகளுக்காகவே இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். **[2:17,18]**

## மோசேவையும்,யோசுவாவையும் விட மேம்பட்டவர்

மூன்றாம் அதிகாரத்தில் உள்ள முதல் மூன்று வசனங்களில் இயேசு மோசேவை விட மேலானவர் அதாவது ஊழியக்காரனை விட குமாரன் மேலானவர் என்றும் ஒப்பிட்டு பேசுகிறார். அவர் **[எபிரெயர்3- 5,6]** சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய் அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்.. என்று குறிப்பிடுகிறார்.

**3:7-4:14** வசனங்கள் வரைக்கும் எகிப்தை விட்டு புறப்பட்டவர்கள் அனைவரும் வாக்களிக்கப்பட்ட தேசத்தில் பிரவேசியாமல் போனதற்குரிய காரணங்களை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார். அவருடைய அவிவாசத்தினாலும், தேவன் மேல் உள்ள நம்பிக்கையை இழந்ததினாலும், தேவன் அவர்களை **40 வருடம்** வனாந்திரத்தில் நடத்தினார் அங்கு அவர்கள் மரித்து போனார்கள். இப்படியாக தேவனுடைய திட்டத்தில் அவர்கள் பெறும் இளைப்பாறுதலை இழந்தார்கள். பின்பு அதற்கு பின்பு தாவீது கொடுத்த அறிக்கையை குறிப்பிடுகிறார். **சங்கீதம் 95:7-11** இதில் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு இளைப்பாறுதல் நிச்சயமாக இருக்கிறது என்று தெளிவாக குறிப்பிடுகிறது. பவுல் இதை பற்றி சொல்லும் போது உங்களில் ஒருவனாகிலும் பாவத்தில் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள். **[எபிரெயர்3:13]** உங்களில் என்பது கிறிஸ்துவை பின்பற்றுபவர்களை குறிக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட இளைப்பாறுதலை இயேசு நமக்கு கொடுக்க வல்லவராக இருப்பதினால் நிச்சயமாக யோசுவாவைவிட கிறிஸ்து மேன்மையுள்ளவராக இருக்கிறார்.

தேவனுடைய ஜனங்களுக்கு ஏது இளைப்பாறுதல்? திவ்விய சுபாவத்தை பெற்ற, நம்முடைய இரட்சகராகிய இயேசுவின் பங்காளிகளாக பரலோக ராஜ்யத்தில் பங்கு பெறுவதே அந்த இளைப்பாறுதலாகும். இன்று கிறிஸ்துவை பின்பற்றுபவர்களுக்கு நிறைவேறிக்கொண்டு வருகிறது. இது கிறிஸ்துவ விசுவாசத்திற்குள் கிடைக்கும் இளைப்பாறுதலும், எல்லா புத்திக்கும் மேலாக கிடைக்கும் தேவ சமாதானமும் சந்தோஷமுமாகும். **[பிலிப்பியர்4:7]**

## மேலான பிரதான ஆசாரியர்.

நம்முடைய மேலான பிரதான ஆசாரியரை பற்றி **(4:14]** வசனத்தில் பதில் தருகிறார். மீண்டுமாக **சங்கீதம் 110** ஐ எடுத்து காட்டுகிறார். அதில் 4 ஆம் வசனத்தில் நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம் மாறாமலுமிருப்பார். இப்படியாக எழுதியிருக்க , அவர் ஒரு கேள்வியை எழுப்புகிறார் **[7:11]** அல்லாமலும், இஸ்ரயேல் ஜனங்கள் லேவிகோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள். அந்த ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால், ஆரோனுடைய முறைமையின்படி அழைக்கப்படாமல், மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி அழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியர் எழும்பவேண்டுவதென்ன?

மெல்கிசேதேக்கின் முறைமையின் படி ஒரு ஆசாரியர் எழும்பினதால் தேவனுடைய ஆசாரியத்துவத்தில் ஒரு மாற்றம் ஏற்படுகிறதையும் இதுநிமித்தம் சட்டத்திலும் சில மாற்றங்கள் ஏற்படுகிறதையும், குறிப்பிடுகிறார். கிறிஸ்து மேலான ஆசாரியர் மற்றும் ஒரு காரணத்தையும் குறிப்பிடுகிறார். இயேசு அழியா வாழ்வில் இருப்பதால் அவர் நித்தியமான ஆசாரியராக இருப்பார் ஆனால் லேவி கோத்திரத்தில் வந்த ஆசாரியர்கள் காலம் முடிந்தபோது மரித்துப் போனார்கள். என்றார் ஆகவே நாம் தேவனிடத்தில் சேருவதற்கு கிறிஸ்து என்றுமே நமக்கு மேலான பிரதான ஆசாரியராக இருக்கிறார். **[7:25] [7:19]** ஆம் வசனத்தில் ,நியாயப்பிரமாணம் எதையும் பூரணப்படுத்துவது இல்லை ஆனால் கிறிஸ்துவின் மூலம் அதிக நன்மையான நம்பிக்கை வருவிப்பதின் மூலம் அனைத்தும் பூரணப்படும். ஆனதால்,இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டது எவ்வளவு விசேஷித்த காரியமோ,அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்.

அடுத்து **[ஆதியாகமம் 14:20**)... ,இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். இங்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்ததினால் கிறிஸ்து ஆரோனும் லேவியர்களின் ஆசாரியத்துவத்தையும் மேலானவர் என்று புரிய வைக்கிறார். ஆபிரகாம் மெல்கிசேதேக்கு தசமபாகம் செலுத்தினதால், பிரதான ஆசாரியனாகிய ஆரோனைவிட மெல்கிசேதேக்குக்கு மேலானவர்,மேலும் ஆபிரகாமின் அறையிலிருந்து லேவியன் எழும்பினான் என்று பவுல் இங்கு குறிப்பிடுகிறார். அத்தருணத்தில் மெல்கிசேதேக்கு ஆபிரகாமை ஆசீர்வதித்தார். ஆசீர்வாதத்தை பெறுபவர்களை விட ஆசீர்வதிப்பவர்களே பெரியவர் என்று பவுல் இங்கு குறிப்பிடுகிறார் ஆகவே மேசியாவாகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையில் பிரதான ஆசாரியராகவும் ஆரோனையும் லேவியரின் ஆசாரியத்துவத்தை விட மேலானவர் என்கிறார்.

8-ம் அதிகாரத்தில் மனிதால் அல்ல தேவனால் கட்டப்பட்ட பரலோக ஆசரிப்புக் கூடாரத்திற்கு இயேசு மெய்யான பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். மோசேவால் கட்டப்பட்ட ஆசரிப்பு கூடாரம்... பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது... தளர்ந்த கிறிஸ்துவ விசுவாசத்தை அடிப்படையாக கொண்டு பவுல் சொல்லும் போது இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்.

விசேஷமான ஊழியம்,விசேஷமான உடன்படிக்கை,விசேஷமான வாக்குத்தம் தேவனால் ஏற்படுத்தப்பட்ட புது உடன் படிக்கை பழையவைகளை உருவழித்து விட்டது என்று தெளிவாக எடுத்துரைக்கிறார். அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன் படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்லையே. அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில், இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்தும் காலம் வருகிறது.

## மேலான ஆசாரிப்பு கூடாரம்

மெய்யான கூடாரத்தை ஒப்பிட்டு பவுல் 9,10 ஆம் அதிகாரத்தில் தொடர்ந்து விளக்கம் கொடுக்கிறார். பரலோகத்தில் இருக்கும் கூடாரம் மனிதனால் கட்டப்படவில்லை ஆனால் வனாந்தரத்தில் கூடாரம் மோசேயின் மூலம் கட்டப்பட்டது. ஒவ்வொரு கூடாரத்திலும் செலுத்தின பலிகளை ஒப்பிட்டு பேசுகிறார். மனிதனால் கட்டப்பட்ட கூடாரத்தில் வருடம் ஒரு முறை பிரதான ஆசாரியர் காளையின் இரத்தத்தோடு மகா பரிசுத்த ஸ்தலத்தில் நுழைந்து அதை தனக்காகவும், ஜனத்திற்காகவும் செலுத்தின இஸ்ரயேல் மக்கள் வெளிப்புறமாக சுத்திகரிக்கப்பட்டார்கள். ஆனால் ஆடுகள், உகாளைகளின் இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டதே. இதற்கு எதிராக நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசு பரலோக கூடாரத்தில் தன்னுடைய சொந்த இரத்தத்தை பலியாக செலுத்தி,தேவனுக்கு முன்பாக ஜனங்களின் பாவங்களை போக்க ஒரே முறை நின்று நித்திய மீட்பை பெற்றார். அவர் ஒரு முறை இதைச் செய்து உலக மக்களுக்கு வேண்டிய இரட்சிப்பை கொடுப்பதற்கு தகுதி பெற்றார். இதை மீண்டும் செய்ய அவசியம் இல்லை. அவருடைய பலி இருதையத்தின் சிந்தையையும்,மனசாட்சியையும் சுத்திகரிக்கும் கிறிஸ்து மேன்மையான ஒரு பலியின் நிமித்தம் அவர் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தாராக இருக்கிறார் என்று பவுல் சொல்லுகிறார்.


## முடிவுரை

ஒப்பிட்டு பார்த்த பாடங்களின் முடிவுரையை 10 ஆம் அதிகாரத்திலும் 19 முதல் 25 ஆம் வசனத்தில் வாசகர்களுக்கு தேவையான ஊக்கத்தையும் தருகிறார். ஆகையால்,சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப்பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்தஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும்,உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அல்லாமலும்,நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம், வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல்,ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ, அவ்வளவாய்ப் புத்தி சொல்லவேண்டும்.

பவுல் விசுவாசத்தோடு அவருடைய ஊழியத்தை யூதர்கள் மத்தியில் செய்தார் என்று எபிரெய கிறிஸ்துவர்களுக்கு எழுதின இந்த நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இவைகளின் மூலம் சுவிசே யுகத்தின் முழு புறஜாதிகளுக்கும் விலைமதிப்பற்ற ஊழியத்தை செய்திருக்கிறார். தேவன் தாம் தெரிந்து கொண்ட இஸ்ரயேல் ஜனங்களுக்கு ஆயத்தம் பண்ணின காரியங்களை ஒப்பிட்டு விவரிக்கும் போது, குமாரனுடைய பலியின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட ஊழியத்தில், அப்போஸ்தலர் முந்தி நடந்ததின் நோக்கத்தையும்,பிந்தி வந்த தொடர்ச்சியாகிய இந்த இரண்டுக்கும் உள்ள தொடர்புகளை எடுத்துரைக்கிறார்.

இப்படியாக எல்லா யுகங்களிலும் தேவன் மனிதனோடு வைத்திருந்த தொடர்பை நாம் காண முடிகிறது. இந்த அற்புதமான பாடங்களுக்கும் அவருடைய விசுவாசமுள்ள இரு வித ஊழியத்திற்கும் நாம் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம்.

## அபாயத்தின் சுகந்த வாசனை



சில நாட்களுக்கு முன்பு என்னை சிந்தனைக்குள் ஆழ்த்திய கதை ஒன்றை படித்தேன். காட்டு மிருகங்களுக்கு தற்காலிக படுக்கைக்கு பயன்படுத்தப்பட்ட கோரை புற்களை ஒரு சிங்கத்தை தொழுவத்திற்குள் அடைப்பதற்காக குதிரை தொழுவத்தின் சொந்தகாரர் ஒருவர் வாங்கிச் சென்றார். சிங்கத்தை இது வரை கண்டிராத குதிரைகள் அந்த கோரை புற்களை பார்த்தவுடன் பயந்து தொழுவத்திற்குள் செல்ல மறுத்தன. அது காணப்படாத விரோதியை பற்றின தன்னிச்சையின் உணர்த்துலாகும். இது தேவனுடைய சத்தத்திற்கு முழுவதுமாக இசைந்த மனசாட்சிக்கும் பொருந்தும். பாவம் என்று நாம் நிச்சயமாக அறிந்திராத காரியம், ஆத்துமாவிற்கான, தந்திரமான கண்ணி நமது பாதையில் வைக்கப்பட்டிருக்கும் போது அங்கு ஒரு ஆவிக்குரிய உணர்த்துதல்,தெய்வீக நறுமணம்,நாம் பின்வாங்கவும், அந்த அபாயத்தை தவிர்க்கவும் செய்யும். அப்போஸ்தலனாகிய பவுல் அப்படிப்பட்ட மனசாட்சியை உடையவராக இருந்தார்.

# பவுலின் பிரயாணங்கள்

## புரட்டிப்பார்க்கப்படும் வாழ்க்கை

**அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன், ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்.. [ II கொரிந்தியர்11:26]**

ஸ்தேவான் கல்லெறியப்படும் அந்நேரத்தில் அவர்களுடைய வஸ்திரங்களை பவுலின் பாதங்களில் வைத்த போது பவுல் ஒரு இளைஞனாக இருந்தார். ஆனால் 30 வருடங்களுக்கு பின் தானே ஒரு இரத்த சாட்சியாக மரித்தார். இதற்கு இடையில் கிறிஸ்துவ குறிப்புகளில் அன்றிலிருந்து இது வரை இணைப்பிட முடியாத ஒப்புக்கொடுக்கப்பட்ட ஜீவ கால ஊழியம் நிறைவேறியது.

அப்போஸ்தலர் புஸ்தகத்திலே அவர் பட்ட பாடுகளில் சிலவற்றாகிய அடிகள்,கப்பல் சேதம், சிறையிருப்பு, போன்றவைகள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு முறை அவர் வாங்கின அடிகள் சதையை கிழித்து கொண்டு போயிருக்கும். அந்த காரியங்கள் ஆறுவதற்கு முன் மற்றொரு முறை அவர் அடிக்கப்படுகையில் மீண்டுமாக அந்த சதைகள் சிதறிப் போயிருக்கவேண்டும் ஏன் என்றால் யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன் **[IIகொரிந்தயர்11:24]** இதற்கு கூடுதலாக மூன்று முறை மிலாறுகளால் அடிபட்டார், கல்லெறியப்பட்டார். நான்கு முறை கப்பல் சேதத்தில் அகப்பட்டார். மூன்று முறை அவரை கொலை செய்ய திட்டமிட்டார்கள். இவை அனைத்துமே நம்முடைய வாழ்க்கையில் வரும் சோதனைகளை சகிக்க உதவியாக இருக்கும்.

### சுவிசேஷம் அறிவிக்க சென்ற மூன்று பயணங்கள்

அப்போஸ்தலர்களின் புஸ்தகத்தில் 13,21 ஆம்அதிகாரங்களில் மூன்று பயணங்களை பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. **முதல் பயணம் (அப்போஸ்தலர் 13:1--14:27)** பவுலும் பர்னபாவும் சீப்புருவுக்கு பயணம் சென்றார்கள். அந்த தீவில் ஒரு முனை துவங்கி மறுமுனை மட்டும்,சென்று மேசியாவாகிய இயேசுவின் அற்புதங்களையும்,பாவங்களை மன்னிக்கூடியவர் என்றும் சுவிசேஷத்தை அறிவித்தார்கள். இந்த பயணத்தின் போது விசேஷமான ஒரு புறஜாதியான செர்கியுபவுல் சுவிசேஷத்தை ஏற்று கொண்டார். அப்போஸ்தலராகிய பவுல் முதல் முதலில் சுவிசேஷத்தை யூதனாகிய பர்யேசுவுக்கு அறிவித்திருந்தாலும் பின்பு அவர்கள் சூரியனை காணாமல் குறிப்பிட்ட காலம் பார்வையற்றவர்களாக இருந்தார். **[அப்போஸ்தலர் 13:11]** மேலும் இவைகளை கண்ட அந்த புறஜாதி அரசன் விசுவாசியானான்.

அதே போல் சுவிசேஷம் முதல் முதலில் ஆதி கால சபையில் யூதர்களுக்கு பிரசங்கிக்கப்பட்டது ஆனால் இரண்டாம் சபையான சிமிர்னாவின் காலத்தில் **[வெளி2:8-11]** சுவிசேஷத்தை விசுவாசித்த புறஜாதிகள் அதிகாரம் செலுத்த தொடங்கினார்கள். இதற்கு மத்தியில் விசுவாசியாத யூதர்கள் குருட்டாட்டத்தில் சிக்கி, சுவிசேஷத்தின் சூரியனை சில காலம் காணாமல் போனார்கள். ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரை அவர்களுடைய கண்கள் திறக்கப்படுவதில்லை என்று நாம் வாசிக்கிறோம். **[ரோமர் 11:25]**

பவுல் மற்றும் பர்னபா முக்கிய பகுதியாகிய துருக்கிக்கு சென்றனர். இது ஒரு வகையில் புறஜாதி ரோமர்களுடைய உபத்திரவங்கள் நின்ற பின்பு ஆரம்பித்த சபையின் மூன்றாவது கால பகுதிக்கு அடையாளமாக இருக்கிறது. சுவிசேஷமானது கிறிஸ்துவத்தின் மையப்பகுதிக்கு பரவியது. அதற்கு பின்பு சுவிசேஷம் அந்தியோகியாவிலும் பரவியது. ஒரு ஒய்வு நாளில் போதித்த பின்பு... அடுத்த ஓய்வுநாளிலே கொஞ்சங்குறையப் பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தைக் கேட்கும்படி கூடிவந்தார்கள். **[அப்போஸ்தலர்13:44]** பெர்கமு சபையின் காலத்தில் நடந்தது போல அப்பொழுது நடந்தது. **[வெளி 2:12-17]** பேரரசில் உள்ள எல்லா புறஜாதிகளும் கிறிஸ்துவ செய்திகளால் அசைக்கப்பட்டார்கள்.

ஆனால் பிரச்சனைகள் உருவானது. சத்தியத்திற்கு எப்பொழுதும் நேரிடுகிற பிரகாரம் அவர்கள் பாதையில் அவர்களுடைய வெற்றியானது மற்றவர்களுடைய எதிர்ப்பை தூண்டினது. செல்வாக்கு மிகுந்த ஸ்திரீகள் பவுலுக்கும் பர்னபாவுக்கும் விரோதமாக எழும்பினதால்,அவர்கள் அந்த பகுதியிலிருந்து வெளியேற வேண்டியதாக இருந்தது. இது பெர்கமு கால கட்டத்தில் தேவனுடைய பரிசுத்தவான்கள் வெளியேற்றப்பட்டது போன்றதாகும். **[வெளி 2:13]** தியத்தீரா சபையின் காலத்தில் இருண்ட காலம் நெருங்கி கொண்டிருந்தது. **[வெளி 2:18-29]** அப்பொழுது லீஸ்திரியாவுக்கு வந்த பவுலும் பர்னபாவும் அநேக கொடூரமான உபத்திரவங்களை சந்திக்க நேரிட்டது. பவுல் கல்லெறியப்பட்டு மரித்து போனார் என்று எண்ணி விட்டுச்சென்றார்கள். இருந்தாலும் தேவனுடைய பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவன் அவருக்கு கிருபையாக ஜீவனை கொடுத்தார். பெர்கமு சபையின் காலத்தில் சத்தியத்திற்கு சாட்சியாக இருந்தவர்கள் வெளியே எறியப்பட்டார்கள். ஆனால் தியத்தீரா சபையின் காலத்தில் சத்தியத்திற்கு சாட்சியாக இருந்தவர்கள் வெளியே எறியப்பட்டார்கள். ஆனால் தியத்தீரா சபையின் காலத்தில் அவர்கள் மிருகங்களை போல் வேட்டையாடப்பட்டு யேசபேலாகிய போப் மார்க்கத்தால் கொல்லப்பட்டார்கள். **[வெளி2:20]**

இந்த இடங்களில் பிரசங்கித்த பின்பு பவுலும் பர்னபாவும் மீண்டுமாக அந்தியோகியாவுக்கு வந்தார்கள். இப்படியாக பவுலின் முதல் பிரயாணம் முடிவு அடைந்தது. மேலும்,சுவிசேஷத்தின் அறிவிப்பு நான்காவது சபையாகிய தியத்தீராவோடு முடிவு அடைந்தது. அதற்கு பின்பு தேவனுடைய வேலையானது சுவிசேஷத்தை,தூய்மையாக்கி,சீர்த்திருத்துவதிலும் அதிகரித்தது.

## கருத்து வேறுபாடு

பவுலும் பர்னபாவும் வெற்றிகரமாக புறஜாதிகள் அநேகருக்கு சுவிசேஷத்தை அறிவித்தார்கள் ஆனால் யூத மத சடங்குகளை கைகொள்ள வேண்டுமா? இல்லையா? என்ற கேள்வி எழும்பியது. இதற்குரிய ஒரு ஆலோசனை கூட்டம் எருசலேமில் கூட்டப்பட்டது அநேக வாதங்களுக்கு பின்பு ஓர்முகமாக முடிவுகள் எடுக்கப்பட்டது---- புறஜாதிகள் யூதர்களின் முறைமைகளை கைக்கொள்ள வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. விக்கரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும்,நெருக்குண்டு செத்ததிற்கும்,இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன். **[அப்போஸ்தலர் 15:20]** ஆவிக்குரிய நிலையில் சுவிசேஷ யுகத்தில் இது ஒரு ஏற்ற காரியமாக செயல் முறைப்படுத்தப்பட்டது.

எருசலேமில் எடுக்கப்பட்ட முடிவுகள் மிக ஞானமாகவும் சபைக்கு சமாதானத்தை கொடுக்கக்கூடியதாகவும் இருந்தது. அப்போது இருந்த மூப்பர்கள் மிக பொறுப்பாக செயல்பட்டார்கள். அவர்கள் ஒவ்வொருடைய பொறுப்புகளையும் குறித்து சரியாக நிதானித்தார்கள். வேத வசனங்களுக்கு தேவனுடைய வழி நடத்துதலுக்கும் ஒப்பிட்டு பார்த்தனர். மேலும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் மூலம் சில முக்கியமான காரியங்களில் நேர்த்தியான முடிவுகளை எடுத்தனர்.

எல்லாரும் இந்த முடிவுகளை ஏற்று கொண்டாலும்,சீர்த்திருத்தும் அனைவரும் ஒத்து கொண்டாலும், பவுலுக்கும் பர்னபாவுக்கும் இடையில் தேவனுடைய வேலைகளை குறித்த கருத்து வேறுபாடுகள் தொடங்கியது. தர்க்கங்கள் அதிகரித்து இருவரும் பிரிந்தார்கள். ஆனால் இருவரும் தேவனுடைய ஆசீர்வாதத்தோடு தேவனுடைய பணியை சிறப்பாக செய்தார்கள். பவுல் சீலாவை கூட்டிக்கொண்டு துருக்கிக்கும், பர்னபா புதிய வாய்ப்பை பயன்படுத்தி தன்னுடைய தகுதியை வெளிப்படுத்தி வந்த மாற்குவை தன்னுடன் கூட்டி சென்றார்கள். இந்த கருத்துக்களை ஓர் முகமாக ஏற்று கொண்டாலும் இவைகளை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமாக இருந்தது. தனி ஒரு முயற்சியாக இருப்பதற்கு பதிலாக சீர்த்திருத்தலானது வெவ்வேறு திசையில் வெவ்வேறு தலைவர்களின் கீழ் சென்றது. ஆனாலும் அனைத்து பரிசுத்தவான்களை உறுதிப்படுத்தவும் சுவிசேஷத்தை நிலைநாட்டவும் என்ற ஒரே நோக்கத்திற்காக நடந்தது.

## சுவிசேஷத்தை அறிவிக்கும் பவுலின் இரண்டாவது பிரயாணம்

**[அப்போஸ்தலர்15:40-18:22]** அவர்கள் முதலில் சந்தித்த இடங்களுக்கு சென்று மீண்டும் சுவிசேஷத்தை அறிவித்தார்கள். சத்தியங்கள் சீர்த்திருத்தப்பட்டு விசுவாசம் ஊன்றி வளர்ந்தது. அவர் முன்பு கல்லெறியப்பட்ட

லீஸ்திராவுக்கு,வந்த போது தன்னுடைய குழுவில் தீமோத்தேயுவை சேர்த்துக்கொண்டார். எருசலேமில் நடந்த நிர்வாக கூட்டத்தின் முடிவுகளை படிப்படியாக ஒப்பு கொள்ளுவதற்கு துரிதப்படுத்தினார்கள். சர்தை சபையின் காலத்தில் நடந்த சீர்த்திருத்துதலை **[வெளி3:1-6]** ஆதி கால விசுவாசிகள்,முக்கியமான கிறிஸ்துவ மாதிரிக்கும், விசுவாசத்திற்கும் ஏற்றுகொண்டார்கள்.

பவுல் தன்னுடைய ஊழியங்களை ஸ்தாபிக்க புதிய இடங்களை தேடினார்,ஆனால் தடைகள் அதிகரித்தது. அவர் ஆசியா கண்டத்திற்கு போக முயற்சித்தார் தென்மேற்கத்திய துருக்கிக்கும் வடக்கு திசைக்கும் போக முயற்சித்தார். மீசியா தேச மட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போக பிரயத்தனம் பண்ணினார்கள்,ஆவியானவரோ அவர்களை போகவொட்டாதிருந்தார். தேவன் ஒரு காரியத்தை மனதில் வைத்திருந்தார். துருக்கியின் வடமேற்கு கரைக்கு துணிந்து சென்றார்கள். அந்த இரவில் பவுலின் சொப்பனத்தில் மக்கோதோனியர்களின் அழும் குரல் கேட்டது. ஆகவே அந்த சிறிய ஒரு குழு கடல் மார்க்கமாக மேற்கு புறமாக ஒரு புதிய இடத்திற்கு சென்றது. பிலதெல்பியா சபையின் காலத்தில் நடந்தது போல **[வெளி 3:7-13]** இதுவும் நடந்தது. தேவன் இந்த சுவிசேஷத்தை ஒரு போதும் சொல்லப்படாத இடத்திற்கு கடல் மார்க்கமாக மேற்கு புறத்திற்கு அவர்களை அனுப்பினார். அங்கு அந்த புதிய உலகத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு அநேக நாட்களுக்கு பிறகு செழிப்பாக பலனை தந்தது.

சுவிசேஷத்தின் அறிவிப்பு மிகுந்த பலனுள்ளதாக இருந்தது. பிலிப்பு ,பெரேயா,தெசலோனிக்கேயா, அத்தேனே கொரிந்து போன்ற பட்டணங்களில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டது. தேவன் பவுலை நோக்கி-நான் உன்னுடனே கூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை, இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார். **[அப்போஸ்தலர்18:10]**ஆகையால் புதிய உலகமாகிய அமெரிக்காவில் சீஷர்களுடைய எண்ணிக்கை பெருகியது. இது கிறிஸ்துவத்தின் மையப்பகுதியில் சபையானது சமீபத்தில் உண்டான உபத்திரவத்திலிருந்து பெற்ற விடுதலையோடு நடந்தது.

பவுல் அடுத்த பயணத்தை மேற்கொள்ளும் முன் வீடு திரும்பினார். அதற்கு பின் **மூன்றாவது சுவிசேஷ பயணத்தை** தொடங்கினார். **[அப்போஸ்தலர் 18:23-21:4]** இந்த பயணத்தில் பவுல் ஆசியா, தென்மேற்கு துருக்கியிலும்,முக்கியமாக எபேசுவிலும், அந்த பேரரசில் உள்ள மையப்பகுதியிலும் ஊழியம் செய்தார். மிகச்சிறப்பான வேலைக்கு, மிகப்பெரிய வெற்றி கிடைத்தது. அறுவடை வேலைகளுக்கு இதை ஒரு நிழலாக பாவித்துக் கொள்ளலாம். பவுலின் ஊழியத்தின் நிமித்தமாக யோவான் ஸ்நானகனுடைய அநேக சீஷர்கள் சத்தியம் என்னும் வெளிச்சத்தை பெற்றார்கள். சகோ. ரசலின் வேலைகளின் மூலம் இயேசுவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்தவர்கள் பெரிய வெளிச்சத்தை கண்டார்கள்.

தொடர்ந்து இரண்டு வருடங்களாக பவுல் வேலை செய்தார். ஆசியாவில் உள்ள அனைவரும் ஆண்டவரின் வார்த்தைகளை கேட்க வாய்ப்பு கிடைத்தது. அறுவடையின் போது முழு கிறிஸ்துவ மண்டலமும்(வெளிப்படுத்தலில் சொல்லப்பட்ட,ஆசியாவில் உள்ள ஏழு சபைகள்) சத்தியத்தையும், பரிசுத்த ஆவியின் கிரியைகளையும் கேட்டு அறிந்தார்கள். தேவன் பவுலின் கைகளின் மூலம் விசேஷமமான அற்புதமும்,கடைசி காலத்து சகோ.ரசலின் தலைமையில் மிக அற்புதவிதமாக சத்தியத்தை பிரஸ்தாபித்தார்.

முதல் எபேசு பட்டணத்தில் பவுல் முதல் மூன்று மாதங்கள் யூத மத தலைவர்களிடம் மட்டுமே பேசிக்கொண்டிருந்தார். அதற்கு பின் அவர் மற்ற வேலைகளை செய்வதற்கு ஆயத்தப்பட்டார். **என் ஜனங்களே அவளை விட்டு வெளியே வாருங்கள் [வெளி18:4]**

என்ற அறுவடைக்கு நிழலாக இருக்கலாம். எபேசுவிலிருந்து இஸ்ரயேலுக்கு போகும் வழியில் கிரேக்க பட்டணத்தின் முன் ஸ்தாபிக்கப்பட்ட சபையை பவுல் விஜயம் செய்து, அங்கு தன்னை காண வந்த மூப்பர் கூட்டத்திற்கு கடைசியாக ஆலோசனைகளை கூறி, எருசலேமில் உள்ள சகோதரர்களுக்கு இவர்கள் தந்த வெகுமதிகளை எருசலேமுக்கு எடுத்து சென்றார். எருசலேமில்,அப்போஸ்தலனாகிய பவுல் எடுத்து வைத்த ஒவ்வொரு அடிகளும், அங்குள்ள சகோதரர்கள் எதிர்பார்த்தபடி அவர்களுடைய உணர்வுகளை புரிந்து நடந்தார். ஒரு முறை ஆலயத்தில்

ஏற்பட்ட கலகத்தில், எந்த விதமான ஆதாரம் இல்லாமல் இவர் மேல் பொய் குற்றம் சுமத்தி,இரண்டு வருடங்கள் செசரியாவில் உள்ள சிறையில் அடைத்தார்கள்.

### ரோமாபுரிக்கு மேற்கொண்ட பயணம் :

**அப்போஸ்தலர் 27** ஆம் அதிகாரத்தில் பவுல் ரோமாபுரிக்கு பயணம் சென்றது விவரிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய ராஜ்யத்தை நோக்கி செல்லும் கடைசி நாட்களில் அறுவடையின் போது இந்த உலகத்தில் நடக்கும் சம்பவங்களை எடுத்து காட்டலாம். இது உலகத்தில் அறுவடையின் நாட்களில் ராஜ்யத்தை நோக்கி முன்னேறும் சம்பவங்களை குறிக்கும். இங்கு பவுல் (சபை) இன்னமும் உண்டாகும் அதிகாரங்களுக்கு உட்பட்டவராக இறுதியில் அழிவை சந்திக்ககூடிய கப்பலில் பயணம் செய்கிறார். பிரயாணத்தில் சந்தித்த முதல் நிருத்தத்தில்,சீதோனில் ஒரு இனிமையான ஐக்கியத்திற்கு வழி நடத்தியது. இது அறுவடையின் நாட்களில் சத்தியத்தில் பெற்ற முதல் இனிமையான ஐக்கியத்தை குறிக்கும் **[1874-1916]**

அடுத்த 1914 ஆம் வருடம் யுத்தம் தொடங்கியதற்கு அடையாளமாக பவுலின் பிரயாணத்தில் எதிர் காற்றுகள் வீசியது. இரண்டு உலக போருக்கு பின் இந்த உலகம் முன் போல் இருக்க வில்லை இது மீராவில் **[அப்போஸ்தலர் 27-4-6]** கப்பல் மாற்றப்பட்டதை சித்திரிக்கிறது. அதற்கு பின்பு அநேக நாட்கள் பிரயாணம் செய்து குளிர்காலத்தில் பாதுகாப்பான இடத்திற்கு விரைந்தார்கள். பவுல் குளிர் காலத்தில் அங்கு தங்கும்படி ஆலோசனை சொன்னார். ஆனால் ஒருவரும் பவுலுக்கு செவி கொடுக்கவில்லை. இந்த ஒரு பகுதி அறுவடையின் மூலம் வரும் உபத்திரவங்களை அடையாளப்படுத்துகிறது. இன்னும் பாதுகாப்பான இடங்களை நோக்கி சென்றார்கள் ஆனால் வழியில் பெரிய ஆபத்து வந்தது. ஒரு புயல் காற்று வீசி கப்பலை சேதப்படுத்தியது ஆனால் அனைவரும் காப்பற்றப்பட்டார்கள். அதுபோல உலகத்தின் முடிவில் எல்லா விதமான அரசாங்கங்களும் சுக்கு நூறாக நொறுக்கப்படும்,ஆனால் மனுகுலம் ஒரு போதும் அழியாது என்பதை காட்டுகிறது. மெலித்தாவில் நடந்த கப்பல் சேதத்தை பற்றி அப்போஸ்தலர் 28 அதிகாரம் கூறுகிறது. இந்த உலகத்தின் நிலைமையை எடுத்து காட்டுகிறது. இது ராஜ்யத்திற்குள் ஒரு சாட்சியை நமக்கு கொடுக்கிறது. மக்கள் சத்தியத்தை சந்தோஷத்துடன் ஏற்றுகொள்வதை எடுத்து காட்டுகிறது. அந்த தீவில்,பவுலின் அற்புதங்கள், ராஜ்யத்தின் துவக்கத்தில் இஸ்ரயேல் மக்கள் மத்தியில் நடக்கும் அற்புதங்களை குறிக்கும். ஆனால் உலக அரசாங்கத்தின் மையப் பகுதியாகிய ரோமாபுரி இன்னும் சற்று தொலைவிலிருந்தது. ஒவ்வொரு படியாக அவர்கள் இலக்கை சென்று அடைந்தார்கள். அதுபோல் இஸ்ரயேலில் ஸ்தாபிக்கப்பட்ட ராஜ்யம் படிப்படியாக உலகத்தில் ஸ்தாபிக்கப்படும். பவுல் ரோமாபுரியை அடைந்த பின் அனைவரையும் தடையின்றி சந்தித்தார். மூன்று நாள் சென்ற பின்பு மத தலைவர்களின் கூட்டத்தை கூட்டினார். இதை ராஜ்யத்தின் துவக்கத்தில் முற்பிதாக்கள் செய்யும் காரியங்களுக்கு ஒப்பிடலாம்.**[எபிரெயர் 11:39]** சிலர் மட்டுமே அவைகளை கேட்டார்கள். இந்த தொகுப்பு பவுல் தன்னிடம் வந்தவர்களை இரண்டு வருடம் ஏற்று கொண்டதோடு நிறைவு அடைகிறது. இது ராஜ்யத்தில் ஆவியின் வேலையை குறிக்கிறது.**[வெளி 22:17]** இத்துடன் அந்த தொகுப்பு முடிவு அடைகிறது,காட்சியும் நிறைவு பெறுகிறது.

பவுல் தொடர்ந்து விடுதலையாக இருந்தார் என்று ஆதி கால கிறிஸ்தவர்களின் குறிப்பு நமக்கு அறிவிக்கிறது. அவர் ஸ்பானியா நாட்டில் ஊழியம் செய்யவேண்டும் என்ற விருப்பம் நிறைவேறியது. அதற்கு பின்பு நீரோ மன்னனால் சிரைச்சேதம் பண்ணப்பட்டு, சாட்சியுள்ள அவருடைய வாழ்க்கையை முடித்தார். கிறிஸ்துவுக்குள் எப்படிப்பட்ட உத்வேகமுள்ள ஒரு போர்வீரனாகவும்,சீர்பொருத்தப்பட்ட பரிசுத்தவானாகவும் பவுல் இருந்தார். நம் அனைவருக்கு எப்படிப்பட்ட ஒரு மாதிரியை வைத்துச் சென்றிருக்கிறார் பாருங்கள்.